MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சூதசங்கிதை

## முத்திகண்டம்.

### பாயிரம்.

பாரினி லுள்ளோர் யாரும் பரிந்துதா மடையத் தக்க
காரிய சித்தி யெல்லாங் கடிதினின் முன்ன மெந்த
வாரண முகனைப் போற்றி வழுவறப் பற்று கின்றார்
பூரண மான வன்னோன் புகழ்பதம் போற்று கின்றேன். (க)

எப்பரப் பிரமத் தின்க ணிலங்கிய விந்த ஞாலஞ் [ம
செப்புன நிகராய் வேற்போற் றோன்றினுஞ் சொரூப மேயா
பற்பல பேத மில்லாப் பரசிதா காச மான
வப்பரப் பிரமந் தன்னை யனிசமு மனுசந்திப்பாம். (௨)

பரசிதா காசந் தானே பத்தர்க ளுய்யும் வண்ண
மருளுமை பாக மாகி யானந்த லகிரி கூர்ந்து
திருமிகு நடன முற்ற திவ்விய மூர்த்தி யாக
மருவிய தென்று மந்த வடிவினை மனத்துள்
வன்ற
ஏகமா யிருந்த வேத மியாவரு மெளிதா யோ ரேனும்
பாகமாய்ச் செய்த வற்றிற் பற்றிய பொருளை

சேகர புராண மாகச் சிவனரு ளதனைற் செப்புந் ட்ம்.
சோகமில் வியாதன் றன்னைச் சுகம்பெறச் சிந்தை செய்வா

சிவர்க ளுய்யும் வண்ணஞ் சிவனருள் பெற்ற வியாசன்
மூவறு புராணஞ் சொன்னன் மொழிந்ததிற் காந்த மென்
யாவரோர் புராண மத்தி லாறுசங் கிதை யசைற்றிற் [ரே
பாவன மாகச் சூதன் பரவுசங் கிதைதா னென்றும். (ரு

சூதசங் கிதையி னன்காய்ச் சொல்லிய கண்டங் கட்கு
ளேதொரு முத்தி கண்ட மிசையுமூன் றவதாக
வீதினை நடன ராச னீந்தநல் லருளு ரத்தான்
மாதமிழ்க் கவிதை யாக மலமற வமைக்க லுற்றேன். (சு)

வல்லபம் யாவும் பெற்ற வாதரா யண னுரைத்த
தொல்லையா மிந்த நூலைத் துச்சமா மென்றன் வாக்காற்
சொல்லலெவ் விதத்து மீதிற் சூக்கமாய்ப் புகுவ தற்கே
யல்லது புகழே யாதி யடைவதன் பொருட்டீ தன்றால். (எ)

**வேறு.**

முனிவினவன் முத்திசொலன் மோட்சோபாய மொழிந்திடுதன் மோசகனை மொழிதன்மற்றும், பனுவியவம் மோசகனை யளிப்போன்றன்னைப் பகர்ந்திடுத லுணர்வுதியா வே வோத, னனியறிஞர் சேவையதன் பயனைச்சாற்ற னடையன் முதலோருக் குபதேசித்த, லனையவனே திருநடன யாசாதிக்கங் கருள்செய்த லிவையிந்நூற் பொருட்சுருக் (அ)

சொல்லியவிப் பொருள்களெல்லா மிந்நூலி
ரான்பதுக்குண், மன்னியவா மிவைகளையா

னடைவேயாக மாசற்ற தமிழ்க்கவியாய்ப் புகலுகின்றேன், பன்னியவிந் நூற்கவிதை யிலக்கந்தானும் பாயிரமாங் கவி தையிலக் கத்தினோடு, முன்னியிடின் முன்னூற்றியெழு தாகு மேதியவா நூலடைவு கண்டுகொள்க. (௫௰)

பாயிரம் முற்றிற்று.

---

முதலாவது

## நைமிசாரணிய முனிவர்கள் சூதமாமுனிவரை வினவு மத்தியாயம்.

சத்திய ஞானா னந்த சாந்தமாய் நேரே யார்க்கு
நித்தநா யகமே யாகி நிகழுறு விகார மின்றி
மெத்துமிப் பவரோ கத்தின் மெய்ம்மருந் தாகி நின்ற
வத்துவாம் பரசி வத்தை மகிழ்வுடன் வணங்கு கின்றேன்.( )

ஒரு பரசி வத்துக் கிச்சகன் மாதா வாகி
வேதமோர் வடிவ மாக விளங்கிய வுமையாந் தேவி
சாதகச் சத்தி யாம்ச் சங்கரன் சொருபந் தன்னை
யேதமா மோகந் தீர வென்றுமே போற்று கின்றேன். (௨)

விரைவிலே துகளை றுக்கும் விநாயகன் விளங்குங் கந்த
னிருவரு மியாவ னுக்கிங் கிலங்கிய தனைய ராவர்
சருவவே தவதைகள் போற்றுஞ் சரணனைத் தயங்கு மர்தத
திருமகா தேவன் றன்னைத் தினமுமே தியானிக் கின்றேன்.

சருவநா யகனே யாகித் தயங்குமெய் பரசி வன்ற
னருளுடை லேசா லேச மடைந்தவர் தாமா ரேனும்

விரைவிலிப் பவபந் தத்தை விடுத்தவ ராவ ரந்தப் [றேனை
பரசிவன் சொருபந் தன்னைப் பணிந்தியான் போற்று கின்

வதொரு பரசி வன்ற னிலிங்கவர்ச் சனையி னாலே
சாதுவா கின்ற வியாசன் சகலமா மறைபு ராண
மெதுமேம் மிக வுணர்ந்தா னிலங்கருட் கடலா மந்தக்
கோதிலா மகேசன் றன்னைக் குறைவற வணங்கு கின்றேன்

எப்பர சிவத்தி னேக்கா விருமையா மிந்த மாயா
கற்பித சகமனைத்துங் கனவுபோற் காணு லாகுஞ்
சொப்பிர காச சச்சிற் சோதியா மீச னான
வப்பர சிவத்தை யென்று மம்மையோ டனுசந் திப்பேன்.(

எதுச்டா சடம தான விச்சக மனைத்தி னுக்குஞ்
சதகமுஞ் சாட்சி யாகுஞ் சகலவாந் தரமு மாகு
மதிசய மங்க ளத்துக் காலய மாகி யம்பா
பதியுமா மச்சி வத்தைப் பரிந்தியான் பணித லுற்றேன். (

பரவுசா தனசம் பத்தி பற்றினோர் வேதாந் தத்தின்
சிரவண மாதி யாற்சற் சிற்சுக வடிவா மெத்தைப்
பிரமமே நாமென் றிவ்வாற் பிரிவற வுணரு கின்றார்
புராணமா மச்சி வத்தைப் புந்தியிற் சிந்திக் கின்றேன். (அ)

வேறு.

அரபத்த னம்பிகையின் சர்ணபத்த னதிலசக நீசனு டைச் சர்ணபத்தன், பரவீச பூசனையைப் பண்ணும்பத்தன் பார்க்கரனற் பூசனையைப் பண்ணும்பத்தன், றிர கான மறை பாரா யணஞ்செய்பத்தன் றினமுலக யாத்திரையே செய்யும்

பத்தன், பரையான வுமைபத்த னுருத்திரன்றன் பத்தனெ
ன வுபநிடமும் படிக்கும்பத்தன். (க)

பவபத்த ஞோங்காரஞ் செபிக்கும்பத்தன் பஞ்சமகா வக்
கரமே செபிக்கும்பத்தன்,றவமென்னுஞ் சிவசங்கற் பத்திற்
பத்தன் றயங்குசிவ சூக்தத்தைச் சாற்றும்பத்தன், சிவலிங்க
சூக்தத்தைத் சொல்லும்பத்தன், சிவனுருவை யுணர்ந்தோரி
ன் பாதபத்தன்,சுவமென்னுங் கைவல்ய மறையிற்பத்தன் சு
வேதாசு வதரமென்னுஞ் சுருதிப்பத்தன். (௧௦)

பலமூல முண்பனொடு சாகமுண்போன் பகையுறவு ப
ற்றோன் விரத்தனென்போன், சலவோடு சொன்னமிவை
சமமாப்பார்ப்போன் சமமான சித்தனொடு சமமார்க்கண்ட
ன், புலனொடு பொறிவென்றோன் புத்திமேலோன் புண்ணிய
மே செய்கின்றோன் புராணனென்போன், பலவான வுயிருக்
கு மிதமாகின்றோன் பரமபுரு டார்த்தத்தைப் பரவச்செய்
தோன். (௧௧)

சருவனொடு சருவஞ்ஞன் சருவித்து சம்சார பயமறு
ப்பான் சாந்தபாபன், செருவமில னசூபமிலன் கிளர்பாவஞ்
ஞன் சேதமிலன் லோபமில னைசையில்லோன், விரியுமன்ன
விசுவனொடு விசுவவான்றன் வேதவித்து வேதஞ்ஞ முக்கி
யன்றன், பரமனொடு பகவானைற் பவித்திரன்றன் பரமமுனை
ரவிச்சைதனிற் பரிவடைந்தோன். (௧௨)

ஆசுவலா யனமைந்தன் வச்சமைந்த னாகியமை கிஷவிய
மைந்தன்மற்று, மோசகனன் முகுந்தனொடு மூலவேது
முசலியொடு முக்கியன்மற் றுருத்திரத்தில், நேசமுள சதரு

த்திரன் காலரூபன் நிகழுகலா மாலியணி மாண்டவ்கோம ன்,பேசுமகா தீரன்மகாப் பிராஞ்ஞன்பங்கு பிங்கசடா தரன் மற்று முனிவர்பல்லோர். (கங)

அரபத்தன் முதலாக வறையப்பட்டோ ரனையரெழு பத்திரண்டா யிரத்திஞேடே, யொருபத்தி ரண்டென்னுங் கணிதமுற்ருே ரோங்குசம தமமாதி யுற்ருரீசன், பரபத்தி யுடையவர்கள் பூதிகொண்டே பாங்குறவே யவயவவுத் தூள னத்தைத், திருமுத்தி யேதுவதாய்ச் செய்துமற்றுந் திகழு திரிபுண் டரமே யணிந்ததேகர். (கச)

நிரை நிரையா யுருத்திராக்க மாலேபூண்டு நிகழுசிவலிங் கத்தின் பூசைநித்தம், புரிபவராய்ச் சாதனங்கண் முற்று ம்பெற்ற புகல் முனிவர் தாஞ்செய்த யாகத்தீறிற், பெருமை யுறு மேருவிஞேர் பக்கந்தன்னிற் பிரிவறவே கூடியவ ரொ ன்றுக்கொன்று, பரிவுடனே பழுதறுநற் புத்திகொண்டு பகா முத்தி யாதியினை யாலோசித்தார். (கரு)

முத்தியதா முத்திபெறு முபாயமேதஃ மோசகஞர மோசகனை யளிப்போஞரென், றித்திறமே யாலோசித் திவற் றையெல்லா மிம்முனிவர் நன்ருக வுணரவேண்டிச், சத்திய சுற் சுகமெய்யாஞ் சிவனைநோக்கிச் சலனமிலாச் சிரத்தையு டன் றவஞ்செய்யுங்கா, லத்தமிலாச் சிவனருளா லாங்கேயா வு மருள்சூத மாமுனிவன் ருேன்றலுற்ருன். (கசா)

புத்தியினுள் மிகுந்தோஞய்ப் புராணமியாவும் புகழ்வி யாசன் கருணையினுற் பெற்ருேஞகிச், சத்தியமே யுணர்ந்த தறை பூன்ற ஞகிச் சருவக்ஞ ஞகியவச் சூதன்றனைப் பத்

திரூட ணவர்நோக்கிப் பரபரத்துப் பரவசரா யெழுந்துடனே மகிழ்வுகூர்ந்து, மெய்த்தவமே தழுதழுத்த வசனத்தோராய் மேதினியிற றண்டெனவே மிகப்பணிந்தார். (௧௭)

அணையவர்பின் னன்புடனே யன்னோன்றன்னை யருக்கி யபாத் தியமுதலா லாராதித்து, நனிகருணை வாரிதியாய்த் தெளிவுற்றோனாய் நயந்தபொரு ளெல்லோர்க்கு நல்குமங்க, முனிவரனை நோக்கியிவை வினவுகின்றார் முத்தியெதா முத்திபெறு முபாயமேதா, மணிசமு மோசகனா ராமன்னோன் றன்னை யளிப்பவனார் மற்றுமுள வெவையாமென்றே. (௧௮)

இன்னபடி வினயமுடன் வினவுகின்ற விம்முனிவர் வசனத்தைச் சூதன் கேட்டுப், பன்னுமிவை யுலகர்க்கிங் கிதமென்றெண்ணிப் பரிந்துபர சிவையுடனே முக்கண்ணனை, பின்னமறு பரசிவனைத் தியானஞ்செய்து பின்னகில வேதார்த்தந் தெரிந்தோனை, தன்னுடைய குருவினையுந் தியானஞ்செய்து தண்டெனவே பரவசனாய்ப் பணிதலுற்றான்.(௧௯)

வேறு.

பரவச னாகச் சூதன் பத்தியாற் பணிந்த பின்னர்
நிருமல னாகி நின்று நிகிலமாஞ் சீவ ருக்கும்
பிரியமே செய்வோ னாகிப் பேசிய முனிவி னாவுக்
குரியதா முத்த ரத்தை யுரைசெயத் தொடங்கு கின்றான். ()

முதலாவது அத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாயம் ஒன்றுக்குத் திருவிருத்தம் ௨௦.

## இரண்டாவது
# முத்திசொரூப முரைக்கு மத்தியாயம்.

முத்திமுதற் பொருள்களினை யடைவதற்கு முயற்சி மிக வேண்டுமென முனிவர்க்கீதிற், பத்திமிக வுதித்திடவுந் தனக்குங்கர்வ பரிகாரஞ் செய்திடவு நினைத்துச்சூத, னுத்தமனும் பரசிவனை யுசிதமாக வுபசன்ன ஞானமகா விண்டுவுக்கே, யத்தனவ னருள்செய்த விதமேயாக வகிலமுமே யுரை செய்ய வாரம்பித்தான். (௧)

அருமறையை யறிந்தவரின் மேலோரான வமலமகா முனிவர்களே யன்பாய்க்கேண்மின், றாணியனாய்ச் சங்குகதை சக்கராதி தரித்தோனா யாபரண மனைத்தும்பூண்டு, திருமிகுபீ தாம்பரமே யுடுத்தியோங்கித் தேவர்முதலெவராலும் போற்றப்பட்ட, வரிமுனமோர் காலுலகர்க் கிதமேவேண்டி யதிசயமார் கைலாச வரையிற்சென்றான். (௨)

அந்தவரை நினைத்தவரின் பாவமியாவு மகற்றுவதா மன்றியுமே சன்மந்தோறுஞ், சந்ததமுஞ் செய்தமகா புண்ணியத்தாற் சங்கரனற் பத்தியினைச் சார்ந்தோர்க்கல்லாற்,பிந்தியுள பாவிகளுக் கணுகாதென்றும் பின்னுமதன் பெருமகிமை யெக்காலத்து, மந்தமிலா வென்றாலும் வியாசனாலு மாலயன்மற் றெவராலு மதிக்கவொண்ணா. (௩)

பன்னியவக் கைலைதனி னின்றுவிண்டு பரமசிவன் றனை நோக்கி யோர்மூன்றாண்டு, துன்னியமா கோரதவ மியற்று மெல்லை துகளறவே பத்தரிதஞ் செய்வோனை, பின்னமிலா

ப்பரமசிவன் விண்டுவின்முன் பெருகியநற் கருணையினா லு
தித்தானங்கே, யன்னசிவன் மகிமைதனை வேதாந்தங்க ளனை
த்துமறை கின்றபடி யறையக்கேண்மின். (௪)

கருதுசக வுற்பத்தி திதிநாசத்தின் காரணமாய்ச் சருவ
ஞ்ஞனாகியென்றுஞ், சருவசக சான்றாகிச் சமமேயாகிச் சற்
சுகசிற் கனமாகி யகண்டமாகித், திரிவிதமூர்த் திகளா லு
மிதயத்தென்றுந் தியானிக்குஞ் சொரூபமதாய்ச் சருவான்
மாவாய், நிருமலநிஷ் களமாகி நிகிலமின்றி நீண்டசிதா காச
மதாய் நிகழ்வோனன்னோன். (௫)

பரமகதி பரகாஷ்டை பரமார்த்தம் பரபாரம் பரமான்
மா புருடன்பூன்றன், பரமசிவன் சம்புமகா தேவனூருணு பா
மேசன் பசுபதிநற் புராணனீசன், பரமனய னிருத்ரன் மகே
சன்மற்றும் பரவுரதா சிவன்சோதி பரமாகாசன், பரவுமகா
தாரன்மகா வியாசனத்தா பதிவிசுவா திகனங்கி பூதபாலன்.

ஈசுவர னீசானன் பர்த்தாவர்த்தா விலகுமகா ரிஷிதேவ
னீன்றோன்விண்டு, நாசமிலான் பிரபுவானோன் பிராணன்பூ
மா னண்ணுபுமா னரனந்தர் யாமியான்மா, சாசுவதன் சங்க
மிலான் றொந்தமில்லான் சனாதனனக் கரமானோன் றகராகா
சன், பேசுபுரா தனனானோன் சாட்சாத்தாகப் பிறங்குமப
ரோட்சமது பிரத்யகான்மா. (௭)

பரமகதி முதலான நாமார்த்தத்தைப் பாவனமா முனி
வரரே பகரக்கேண்மின், பரமசிவன் சொற்கதி கதிகட்கெ
ல்லாம் பரமான மோட்சகதி யாவதாலே, பரசிவனே பரம
கதி யன்னோன்றனே பரவுபுலன் வொழிமனது பரவும்புந்தி,

பரவுமக தத்துவமஞ் ஞானத்துக்கும் பரமான முடிவதனாற் பரமாங்காஷ்டை. (௮)

அகல்ககன முதலான வபரதத்வ மனைத்தினுக்கு முயர் தத்வ மாவதாலே, நிகழ்சிவனே பரதத்வம் பவயாஞ்சிந்து நீக்கியவர்க் கோர்கரையா யிருப்பதாலே, புகல்சிவனே பர பாரம் மற்றுமாக்கை பொறிமனது புந்திமக தத்துவாதி, யகிலமதின் மேலான வான்மரூப மாவதனாற் பரசிவனே பர மான்மாவாம். (௯)

புரமதெனுஞ் சரீரங்க டோறுமீசன் பூரணமா யிருப்ப தனாற் புருடனவன், பரசிவனே காலமுதன் மூன்றாய்ச்சொ ன்ன பரிச்சேத மற்றதனாற் பூன்றனவன், மருவுசிவ மெனு மினப மெவைக்குமேலாய் மகத்தான வின்புருவா யிருப்ப தாலே, பரமசிவ னெனலாவன் சுகத்துக்கெல்லாம் பற்றிட மா யிருப்பதனாற் சம்புவாவன். (௧௦)

தேவதைக ளெல்லார்க்கு மிகவுமேலாய்த் திகழ்ந்துநி றைந் திருக்கின்ற தன்மையாலுஞ், சீவன்முத லனைத்துரு வா யிருப்பதாலுஞ் சின்னமிலா மகாதேவ னென்னலாவன், மேவியவோர் தாருவென வெக்காலத்து மிகவசைவற் றிரு ப்பதனாற் றாணுவாவ, னீவனெலா மீசற்கு மீசனுக விருப்பத னாற் பரமேச னவனன்றே. (௧௧)

பாசமுறும் பசுக்கட்குப் பதியேயான பான்மையினாற் பசுபதியென் றுரைக்கலாவ, னீசனெலாக் காலத்தும் புது மையாக விருப்பதனாற் புராணனெனப் புகலலாவன், மாசில தா மைசுவரிய மனைத்துமென்று மருவினதா லீசனென வி

சைக்கலாவன், சாசுவதப் பரப்பிரம சொரூபமாகச் சந்தத
மு மிருப்பதனாற் பரமனவன். (கஉ)

ஏகமதாம் பரசிவனே விவகாரத்தி லெய்தியவைந் துரு
வாக விலங்குவோனு, யாகிவெகு சராசரமாஞ் சகத்தையெ
ல்லா மாக்கியுளித் தழித்தொளித்தே யருள்வதாலே, யாகு
மய னரிருத்ரன் மகேசன்மற்று மருஞ்சதா சிவனவன் சூரி
யாதி, சேகரமாஞ் சோதியெலாம் விளக்கிவைக்குஞ் சிற்
சோதி யாவதனாற் சோதியாவன். (கங)

அகலும்ன வாகாசம் பூதாகாச மவ்வியத்த வாகாச
மனைத்தினுக்கும், பகருசிதா காசமதாம் பரமன்றானே பர
மான வாகாச மாவதாலே, நிகரிலதாம் பரசிவனே ப்ரமாகாச
னித்தமிலா வாதார மனைத்தினுக்கும், புகல்சிவனே நித்த
மகா தாரமாகப் பொருந்துவதான் மகாதார னவனன்றே.()

உலகுமெலாம் வியாபித்து வானமேபோ லோருருவாய்
நிறைகின்ற தன்மையாலே, யிலகுசிவன் மகாவியாசனென்ன
லாவ னெவையுமுணுங் காலனெனு மூறுகாயோ, டலைவுமி
கும் பலவுலகா மோதனத்தை யந்தத்திற் புசிக்கின்ற பான்
மையாலே, நிலைமருவும் பரமசிவ னத்தாவாவ னிகிலமுமே
காப்பதனாற் பதியுமாவன். (கரு)

வீதலிலாப் பரமசிவ னெக்காலத்தும் விசுவமெனுஞ் ச
ராசரமாஞ் சகத்துக்கெல்லா, நீதியதா மேலாக நிற்பதாலே
நிகழ்விசுவா திகனென்று நிகழ்த்தலாவன், போதமிலாச் சக
த்தையெலா மங்கியேபோற் போதமளித் திலக்கியிடும் பான்

மையாலே, ஞாதுருஞே யாதியிலா திலங்காநின்ற ஞானகனை
ப் பரமசிவ னங்கியாவன். (கசு)

பூதமெனச் சொல்லியவெச் சீவருக்கும் போகமொடு மோட்சத்தை யளிததுக்காக்கு, நீதியதாற் பரசிவனே பூத பால னிகிலர்க்கு மாநதரனாய் நின்றெப்போது, மேதமற வங் கங்கே யேவலாலே யீசுவர னீசான னிரண்டுமாவ, னேதிய வா யாவையுமே பாலிக்கின்ற வொழுக்கத்தாற் பரமசிவன் பர்த்தாவாவன். (கஎ)

அகிலசரா சரசகமு மழிப்பதாலே" யச்சிவனே யர்த்தா வென் றறையலாவன், சகலமுமே யபரோட்ச மாகவென்று ஞ் சற்றும்விடா தறிவதனாற் பரமன்றனே, நிகழுமசா ரிஷி யாவ னென்றுமெங்கு நிறைஞான வடிவாக நிகழ்வதாலே, திகழ்தேவ னெனலாவன் பொய்யாயெல்லாஞ் சிருட்டிக்குந் திறமையினா லீன்றோனவன். (கஅ)

பூரணமாய்ப் பரமசிவன் வியாபித்தெங்கும் புரையற வே நிறைந்ததனால் விண்டுவாவன், காரியமாஞ் சகமெல்லா நசித்தபோதுங் காரணமாம் பரமசிவ னசியாததாற், பூரண மா யவனென்று நாசமில்லான் புகன்றசடா சடமான சகத் துக்கெல்லாங், காரணமாம் பரமசிவ னுதனுன கணக்கதனாற் பிரபுவாகச் செப்பலாவன். (ககூ)

எங்குநிறைந் தனைத்தையுமே யேவாநின்ற வீசனுயிர்க் குயிரான பான்மையாலே, பங்கமிலாப் பிராணனெனப் பக ரலாவன் பரிச்சேத மேதொன்று மின்றியென்றுந், துங்கசுக வடிவாகித் துவிதமின்றித் துரியவடி வாதலினாற் பூமானவ

ன், மங்குசரீரங்களிடை யான்மாவாக மன்னுவதாற் புமானெனவும் புகலலாவன். (உ0)

பத்தர்கட்கா மிடரையெலா மரிப்பதாலே பரமசிவனரனுவன் மற்றுமன்றே, னிக்கமுமே யனைத்துக்கு முள்ளாய் நின்று நீதியுற வேவுதலா லந்தரியாமி, யத்தனவனவைர்க்கு நிசமாம்ரூபமாகிநிறைந் திருப்பதனு லான்மாவாவன், சத்தியமாய்ச் சந்ததமு மிருப்பதாலே சங்கரனே சாசுவதனுமெனன்றாம். (உக)

அந்தணரே பரமசிவனுகாசம்போ லற்பமுமோர் பற்றுமிலாப் பான்மையாலே, தொந்தமதாஞ் சங்கமிலான் மற்றுமன்றேன் றுவிதமிலாத் தன்மையினுற் றொந்தமில்லான், சந்ததமு மோர்வடிவே யாவதாலே சனுதனனு மற்றுமவனெக்காலத்து, மந்தமுருச் சொருபமதா யிருப்பதாலே யவினுசி யாகியவக் கரமுமாவன். (உஉ)

பிரமபுர மெனுமிந்தத் தேகத்தின்கண் பிறங்குவதாய்ச் சிறிதாகத் தகரமென்னு, முறைசெயுமோர் மனக்கமல முளதாமீதி லுணர்வுருவா யாகாச நிகரேயாகச், சருவசக கற்பனையு முதிப்பதற்குச் சலனமிலா வதிட்டான மானவீச, னிருளறவே யிலங்குவதாற் றகராகாச னென்றுமறை முடிபதனுலிசைக்கலாவன். (உங)

பரமசிவ னெப்போதும் பழமையான பான்மையினுற் புராதனனென் றிசைக்கலாவன், சருவர்க்குஞ் சந்ததமு மான்மாவாகச் சாட்சாத்தா யகமகமென் றிலங்கலாலே, யரிய சிவனபரோட்ச மென்னலாவனதாகீயே யென்னுமகா வாக்

கியதகி, னுமைசெய்த வதுவென்னும பொருளாய்நின்ற வொ மூக்கதகா லதுவென் று முறைக்கலாவண. (உச)

வித்தரமாந் தன்னிடையே மாயையாலே விரம்விதமா ய்க் கற்பிக்கப் பட்டதாகிச், சத்திலதாய்ச் சித்திலதா யின்பி ல்லாதாய்ச் சஞ்சலமாய்ச் சாரலுறு மகங்காராதி, யித்திரளி ன் விலட்சணமா யகம்பதத்தி னிலக்கியமா யிவைக்கெல்லா முள்ளுமாகிச், சத்தியசிற் சுககனமா யசலமான சங்கரனே சந்ததமும் பிரத்யகான்மா. (உரு)

ஈதுமுதல் வெகுவிதமாய் வேதாந்தங்க ளிசைத்ததிரு நாமங்க ளிசைநதோனை, போதகனாம் பரசிவனே பத்தருய் யப் புகமுமையாந் தேவியுடன் பொருந்திநேனுய்ச், சீதமதி கங்கைதிகழ் சடையணிந்து சீர்பெறுமுக் கண்ணீல கண்ட மாதி, நீதிலிலக் கணமுற்றுத் திகழாநின்ற திவ்வியமங் கள மான வடிவாய்த்தோன்றும். (உசா)

பரவியவவ் வடிவுற்ற பகவனுன பரமசிவ னரியிடைநற கருணைகூர்ந்து, திரதவமே யியற்றிடுமவ் வரியைநோக்கித் திரமதுர கெம்பீர வாக்கினுலே, பரியதவம் வெகுகாலம் புரி ந்தவாற்று லறவுமகிழ் வடைந்தோமியா மாதலாலே, மருவு தவப் பயனேதோ வதனைக் கேட்பாய் மாதவனே யென்றரு ளாற் பகரலுற்ருன். (உஎ)

பகரவுமே சகலசகன் மயனுமாயோன் பரசிவனை மூன் றுமுறை வலமாய்வந்து, மிகவுமெழும் பத்தியுடன் றண்டம போல மேதினியிற் பரவசனுய் வீழ்ந்துதாழ்ந்து, நிகழுமகா நந்தசமுத் திரமாய்நிற்த நிருமலமாம் பரசிவனை யுமையி

ஞேடே, திகழுபய சட்சுவினுற் றிர்த்தியாகத் தெரிசித்துத் தன்மயனுப் மறந்தானியாவும். (உஅ)

இத்திரமே சிலகாலே மகிழ்வுகூர்ந்திங் கிருந்தபடி தெரிவுற்றுச் சிவனேநோக்கி, யத்தமிலாப் பகவானே யென்று மெல்லா மறிந்தவனே யம்பிகையின் றுணையானேனே, முத்தியெதா முத்திபெறு முபாயமேதா மோசகனுர் மோசகனை யளிப்போனுரா, முத்தமமாய் மற்றுமெவை யுளதாமித்தை யுவந்தவெனக் கருளெனவே வினவலுற்ருன். (உகூ)

அரியார்க்கு மிதத்தினேயே வேண்டியாவு மடைவாக வினவினனென் றெண்ணியீசன், பரிவாகச் சகலசகன் மாதாவான பார்வதியின் முகநோக்கி யாசஞ்செய்தவ், வருளான வம்பிகையோ டமர்ந்து நின்றவ் வரிவினவுக் கமைவான வுத்தரத்தைத், திரமாக வெல்லோர்க்குந் தெரியும்வண்ணந் திடவருளா லவனுக்குச் செப்பலுற்ருன். (௩௦)

வேதியரே பரமசிவ னரிக்குச்சொன்ன விதமெல்லா மடைவாக விளம்பக்கேண்மின், மாதவனே நீமிகவுஞ் சகத்துக்கெல்லா மங்களமா மிதத்தினேயே வினவுகின்ருய், யாதலினு னின்வினவுக் கடக்கமாக வறைகின்ற வுத்தரநீ யன்பாய்க்கேட்டி, கோதிலதா முத்தியினே வேதாந்தங்கள் குறைவறவே வெகுவிதமாய்க் கூறுமன்றே. (௩க)

ஒருமுத்தி சாலோகய ரூபமாகு மொன்றுவொரு சாமீப்ய ரூபமாகு, மொருமுத்தி சாரூப்ய ரூபமாகு மொன்றுவரு சாயுச்ய ரூபமாகுந, திருமுத்தி மற்ருென்று சொரூப

மெயாய்த் திரமாக விருப்பதெனச் செப்பலாகு, மிருமுத்தி யிவ்விதமே யைந்தாமத்திலேதாவ தான்றுவே பரமாமுத்தி.

உரைசெய்த முன்முத்தி நான்குங்கன்ம வுபாசனையாற் கிட்டியிடு ஞானமொன்றாற், பரமான முத்தியது திகழுமன்றிப் பலவாமற றெவற்றாலுந் திகழாதென்றுந், திரஞானபலமாகத் திகழாநின்ற திரமுத்தி நிற்குணசாயுசயமென்று, முரமான வேதாந்த போதம் பெற்ற வுயர்ந்தவரா லங்கங்கே யுரைக்கலாகும்.' (௧௩)

பரமான முத்தியிது சுகதுக்கத்தைப் பற்றாது சட்பாவ விகாரம்பற்றா, பிரிவான சுபவசுபம் பெற்றிடாது பிறங்கிய பெத்தவந்தமும் பெறாது நித்தம், வரமான வானந்த வடிவமாகி வரையில்லா ஞானகன வானுய்சசத்தாய்த், திரமான பிரமான்ம ரூபமாகித் திரிசியமே தோன்றாமறத் திகழாநிற்கும். (௧௪)

ஓதியவீ டெவராலுந் தள்ளக்கூட்ட வொண்ணாதாஞ் சங்கமெது முறாததாகும், பேதமுற வெதனாலுங் கண்டுகேட்டப பிறங்கிமதித் துணர்ந்திடவு மொண்ணாததாகு, மாதவனே யாரணமெதுமில்லாதா மருவிடமு மில்லாததே யமாகா, சாதகமார் வாச்சியவா சகமில்லாதாஞ் சாலவுமோர் லட்சணலட் சியமிலாதாம். (௧௫)

சொன்னவிவை யெல்லோர்க்குஞ் சாட்சாதான்ம சொரூபமதாய்ச் சுயமாகச் சொலிக்குமென்றும், மன்னிடுமோர் பிரதிபந்தம் பரமார்த்தத்திற் பற்றாத மவிசார தசையிலீது, கன்னிலெழு மவித்தையினாற் பிரதிபந்தத்தைத் தாக்கியதே

பேரொலியினு மவித்தையாலே, பின்னமிலாப் பிரமான்ம சொரூபமேயாய்ப் பறங்கியிடும் பின்னையமர் மாரபினேனே.

மருவுமிதே முக்கியமா முத்தியென்று மற்றவெலா மு பசார முத்தியென்று, மாபமறை முடியர்த்த மறிந்தோர் சொல்வ ரவையெல்லா முற்பத்தி நாசமுற்றுப், பர்வுபர்வு தாழ்வுற்று மச்சரத்தைப் பற்றுவதாய்ப் பரவசமா யிருக்கு மற்றும், பெரிதுசுக மேலாகிப் பிறங்குமேனும் பிரியமிலாத் துன்பமொடுஞ் சாருமென்றும். (கஎ)

இப்படியாஞ் சாலோக்ய மாதியான விவைசிலகால் விசி ராந்தி பூமியாக, நிற்பதனு லுபசார முத்தியேயா மிகழுபனுச் சுத்தியிலாச் சிலவர்க்கிதே, துப்புறுகன் முத்தியெனத் தோ ன்றுமேனுந் துறக்கமெனப் போகமளித் துடனேமாளு,மற் பமிலா மதிமான்க ளிதனையோர்ந்தவ் வழிவில்லாப் பரமு த்தி தனைச்சேர்க. (கஅ)

சிலதுசிவன் சாலோக்ய ரூபமாகுஞ் சிலதுவிண்டு சா லோக்ய ரூபமாகுஞ், சிலதுவிதி சாலோக்ய ரூபமாகுஞ் சில தவரி னவதார சாலோக்யந்தான், சிலதுசிவன் சாமீப்ய ரூப மாகுஞ் சிலதுவிண்டு சாமீப்ய ரூபமாகுஞ், சிலதுவிதி சாமீ ப்ய ரூபமாகுஞ் சிலதவரி னவதார சாமீப்யந்தான். (கக)

சிலதவரின் சாரூப்ய ரூபமாகுஞ் சிலதவரி னவதார சாரூப்யந்தான், சிலதவரின் சாயுச்ய ரூபமாகுஞ் சிலத வரி னவதார சாயுச்யந்தான், சிலதவரின் கீழான ரூபந்தன்

ளைச் செறிந்தவரின் சாலோக்ய மாதியாகுஞ், சிவ்தவரின் மேலான மகேசனாதி சிலவருடைச் சாலோக்ய மாதியாமே.

இத்திறமே வெகுவிதமா யிசைக்கப்பட்ட விவ்வபர முத்திகளின் மிகுந்தசித்த, சுத்தியிலாச் சிலவர்க்கே யிச்சை யுண்டாஞ் சுத்தமதாம் பரமுத்தி தன்னின்மெத்தச், "சித்த மதிற் சுத்தியுள சில்லோர்கட்கே செவ்வியதா, யெமதருளா லிச்சையுண்டா, முத்தமனே யெமதருளைச் சாராதோர்க்கிவ் வபர்முத்தி தனிலிச்சை யுதியாதென்றும். (௪௧)

அரியமறை யறைநெறியே சென்றுநம்மி 'னன்புளநன் மனத்தார்க்கே பரமோட்சத்தின், மருவுபல பரியந்தஞ் சிரத் தையுண்டா மன்னியநங் கருணையினு லன்னோருக்கே,' பிரம முடனுன்மாவுக் கியல்பேயான பின்னமிலாத் தாதான்மிய ருபமுத்தி,திரவுணர்வா லஞ்ஞான நசிக்குங்காலே திகழுமெ னச் சுருதிமுடி துணிந்துசெப்பும். (௪௨)

தன்னியல்பா யிருக்கின்ற சாட்சான்முத்தி தயங்கு மெவர்க் கவர்நாமே சங்கையில்லை, யன்னவர்தம் பிராரத்த கன்மமட்டு மமர்சீவன் முத்திதனை யடைந்துநிற்பர், முன்னி யநன் ஞானத்தான் மூலாஞ்ஞான முடிவுற்றுற் பின்னரதன் செய்கையாக,மன்னுமுயிர் தேகாதி மறைந்துபோமே மகிழ் சீவன் முத்தியுறு மாறேதென்னில். (௪௩)

உரைசெயுமச் சங்கையுறு வுரைப்பக்கேளா யுத்தமனே யஞ்ஞானம் பருவமூன்றை, மருவுமதிற் சகமெல்லா முண் மையென்றே மன்னுமபி மானமதோர் பருவமீது, சுருதியு

டன யுத்தியினு லுதிப்பதான சூக்கவிவே கத்தாலே நீங்கு மற்று, முரமிலதாய் முன்போல வபிமானத்தோ டுலகவிவ காரத்துக் கேதுவான, பருவமதற் கொன்றுளதா மிதுதான் சாடசாற் பரமான்ம ஞானத்தா னீங்குமற்றும். (சச)

வாதனையின் சேடத்தாற் சகதேகாதி வடிவமெனப் பிராரத்த கன்மமட்டுமே, பேதமுறுந் தோற்றத்துக் கேதுவாகு பின்னுமொரு பருவமதற் குளதாமீது, மாதவனே பிராரத்த முடியுங்காலே மறைந்திடுமா தலினுலே ஞானம்வந்த, போதினுமவ் வறிஞர்க்குச் சீவன்முத்தி பொருந்திடலா மிதிலொன் றும் விரோதமில்லை. (சரு)

திகழ்சீவன் முத்தர்க்குச் சகத்தின்றோற்றந் தெத்த படம் போற்சிலகாற் றிகழாநிற்கும், புகல்போகம் புசித்தத ஞற் பிராரத்தந்தான் பொன்றியபி னத்தோற்றந் தானும் போகு, நிகழ்வுற்ற கனவெனவே யந்தத்தோற்ற நீங்கியபின் னவர்சுத்த முத்தர்தாமே, யகனுற்ற விவகார திசையைப் பற்றி யவர்சுத்த முத்தரென வறைகின்றேமியாம். (சசு)

பரமார்த்தந் தனிலன்னோர் முத்தரல்ல பகர்பெத்தர் தாமல்ல முமுட்சுவல்ல, வுரமாகச் சாதிப்போர் தாமுமல்ல வுற்பத்தி திநிகார மொன்றுமில்லை, வரும்பந்த முத்திமுத லெவையுமில்லை வரையில்சிதா காசமதாம் வஸ்துவொன்றே, பிரிவின்றி யெல்லாமா யெவ்விடத்தும் பிறங்குமிதே பரமார்த்த முறுதியீதே. (சஎ)

மாதவனோ யிவ்விதமா யாவன்றன்னை மாசறவே தன்னுலே தானேயாகப், பேதமறத் திடமாக வுணர்வோனன்

னென் பிரமமுணர் ஞானியலான் மற்றோனன்று, மேலெத்
ருவன் பிரமத்தை யறிந்தேனியானென் றிவ்விதமே திரிசிய
மா யறிவனன்னோன், போதமிலா வஞ்சகனே யாவனீது
பொருவின்மறை முடியாவும் புகலுமன்றே. (சஅ)

அத்துவித வான்மநிலை யானமுத்தி யகிலவுரை மனங்
கட்கு மெட்டாதத்தாற், சுத்தமதா மதனியல்பைச் சொலவு
கற்குச் சுருதிமுடி தன்னாலு மற்றெம்மாலுஞ், சத்தியிலை
யாதலினாற் சுவானுபூதி சார்ந்ததனு னமாமௌனஞ் சாரமெ
ன்ன், றுத்தமனே யிவ்வாறு மிகவன்போடே யுயர்முத்தி
தன்னையுனக் குரைத்தோமியாமே. (சகூ)

நீயுமகா வன்புடனே யிதயத்தின்க ணிலையான மங்கள
மே நிரம்பவேண்டி, மாயவனே யிதைநன்று யுணர்தியென
றே மாதேவ னருளியவிவ் வேதார்த்தத்தை, தூயவனு மா
விண்டு பரிந்துகேட்டுத் துணிந்துடனே சருவஞ்ஞ ஞாகியெ
லலா, மாயசகன் ஞயகனு யகிலர்க்கிட்ட மளிபடவனு பவ
னிடைநல் லன்புகூர்ந்தான். (ருo)

பின்னகில சம்சார பயமுந்தீர்த்துப் பெருகுசுபஞ் செய
விக்கு மீசன்றன்னை, யன்னையுடன் மூன்றுமுறை வலமாய்
வந்தங் கண்டுடனே தண்டெனவே வீழ்ந்துதாழ்ந்து, துன்னி
யநற் றுதிகளினன் மிகத்துதித்துத் துகளற்வே மாதவனாய்
சிந்தாளென்று, பன்னியமா மறையோது முனிவர்க்கெல
லாம பரிவுடனே சூதமுனி பகரலானன். (ருக)

இரண்டாமத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாய மிரண்டுக்குத் திருவிருத்தம் எச.

மூன்றவது

## முத்தியினுபாயமுரைக்கு மத்தியாயம்.

மோகமிலாப் பயனை முத்திதன்னை முன்னுரைத்தின்
மொழிந்தனமீறு றிந்தவோத்தி, லேகமதா முத்தியினை டை
சைவதற்கே யேதுவா முபாயத்தை யடக்கமாக, மாகரூட
வாகனனே யுரைப்பாமீதை மகிழ்வுடனே யன்பாகக் கேட்டி
யென்றே, யாகமமே முதன்மான மனைத்தினுறு மறிந்திட
மெத் தரியமகா தேவன்சொல்வான். (க)

போதகனா வான்மாவின் ஞானத்தாலே புகழ்முத்தியல்
லதுகன் மத்தாலில்லை, நீதியதாய் வேதாந்த விசாரத்தாலே
நிகழுமகா தாற்பரிய நிர்ணயத்தால், வீதலிலா துண்டான
வகண்டாகார விருத்திமிசை விளங்கியசிற் பிரமந்தானே,
போதிபதன் ஞானமதா லான்மாஞ்ஞான முணர்வுருவா மா
ன்மாவி லொழிந்துபோமே. (உ)

ஓதியவா றஞ்ஞான மொழியுங்காலே யுண்மையிலாத்
துவிதமெலா மொழியுமத்தாற், பேதமுறு சுபவசுப மதி
யுண்டாகாப் பேசுமதி யுதியாதாற் காமங்கோபஞ், சாதமுறு
வதனாலே தன்மாகன்மஞ் சனியாது மற்றதனாற் றேகமில்லை,
மாதவனே பொறிபுலன்மற் றவையுமில்லை மறைமுடிவு
மிவ்வாறு மதிக்குமன்றே. (ங.)

கடஞானந் தன்னாலே கடவஞ்ஞானங் கடிதினிலே நசி
க்கின்ற தன்மையேபோற், றிடவான்ம ஞானத்தினலான்

மாஞ்ஞானந் திகழ்வறவே நசிக்குமிவை நசிக்கதாலே,
மான விதன்செய்கை யானவிந்தச் சம்சார நாசத்தைச் சார
லாகு, மிடமான விரச்சுவுடை ஞானத்தாலே யிகல்சர்ப்ப
நசியாம லிருப்பதுண்டோ. (ச)

கத்துருநான் போத்துருநா னென்பதாகக் கலக்கமற
வெல்லோர்க்கு மான்மஞான, நித்தமுமே மிற்கையினு மான்
மாஞ்ஞான நிமித்தமதாஞ் சம்சார நீங்காதத்தா, லெத்திற
மா மான்மாவின் ஞானத்தாலே யிப்பவமு மிதன்மூலாஞ்
ஞானந்தானு, மித்தனையு மில்லாதா மந்தஞான மெவையெ
ன்னி லிதற்குரையை யியம்பக்கேளாய். (ரு)

## சாமான்ய விசேட லிலக்கணம்.

அகடிதயே கடிப்பிக்கு மஞ்ஞானந்தா னம்சமிலா வான்
மாவை யம்சவான்போ, லிகழ்வுறவே செய்வித்தங் கோரம
ரத்தை யீதுமறைத் திடமேற்றோ ரம்சந்தன்னை, பகமதனின்
மறையாது மறையாவந்த வம்சநான் கர்த்தாதி யெனவே
தோன்றித், துகளுறுமவ் வஞ்ஞான மவற்றின்செய்கை
தொடரிடமா மிவ்வம்ச மதனைநீக்கா. (சு)

உத்தமனே மறைபட்ட மற்றோரம்ச மொன்றாகி நிரதி
சயா னந்தமாகிச், சத்தியசிற் கனமான பிரமமேயாஞ் சாற்
றியவிவ் வம்சந்தா னுன்மாவுக்குத்,தத்துவமாம் வடிவமிதன்
ஞானம்வந்தாற் றளர்வுதரு மஞ்ஞான மிவற்றின்செய்கை,
யித்தனையு மில்லாம லுடனேநீங்கு மிதனிலொரு திட்டாந்த
மியம்பக்கேளாய். (எ)

இதுசர்ப்ப மென்னுமயல் விகாரத்தி லிதுவென்னும்
பதத்தினுக்கு ரச்சுவாகி, திதமான நிசரூப மாவதேபோற்
றிகழ்நான்கர்த் தாதியெனும் விவகாரத்திற், பொதுவான
நானென்னும் பதத்தினுக்குப் போதகனப் பிரமந்தா னிச
மாம்ரூப, மதுநானென் றுணருவதா ஞானம்வந்தா லஞ்ஞா
ன மதன்செய்கை யனைத்துநீங்கும். (௮)

மயலன்றி யீதிரச்சு வென்னுஞான மருவியபின் சர்ப்ப
மய னசிப்பதேபோ, லயலன்றி நான்பிரம மென்னுஞான
மடைவுற்றுற் சம்சார மயனுநீங்கும், பயனுன பிரமான்ம
ஞானமொன்றுற் பாசமதா மஞ்ஞான நசிப்பதல்லா, லியல்
பான வெவ்விதமாங் கன்மத்தா லுமிதன்மூல வஞ்ஞான நசி
யாதென்றும். (௯)

பேதமுறுங் கன்மத்தா லஞ்ஞானந்தான் பெயர்ந்திடு
மென் றிவ்வாறு பேசுங்காலே, யோதியவஞ் ஞானத்தி னிவி
ர்த்தியான வுயர்முத்தி கன்மபல மாவதாலே, யேதமுறு கன்
மபலத் துறக்கமேபோ லிசைமுத்தி யிறக்குமிநி லையமில்லை,
யாதலினுற் கன்மத்தா லொருகாலத்து மமலமதா முத்திநிலை
திகழ்வதில்லை. (௧௦)

கருமந்தான் பரமுத்தி யடையச்சாட்சாற் காரணமா
காதெனினுஞ் சிறிதுகன்மந், திரஞான விரோதமதாம் பாவ
மியாவுந் தீர்ப்பதனுன் ஞானத்தின் வழியேயாகப், பரமான
முத்தியினை யடைவதற்குப் பரம்பரைகா ரணமாகுஞ் சிறிது
கன்மம், பரிபாக மாகாத ஞானத்தோடே பற்றியதாய்ப் பர
மில்லா முத்திநல்கும். (௧௧)

சிலகன்மஞ் சகுணவுபா சனையோடுற்றுச் சிலவபர முத்தியினை யளிப்பதாகுஞ், சிலகன்மம் போகத்தை யளிக்கு மீதாய்ச் செகத்திலுள கன்மமெலாஞ் சபலமேயர், மலைவுற்ற வவைகட்குட் சிறிதுகன்ம மாந்தரமாம் பாகியமாஞ் சிறிது கன்மங், கலையுற்ற மனக்கன்ம மாந்தரந்தான் காயிகவா சிக கன்மம் பாகியந்தான். (௧௨)

மானசமாங் கன்மத்தின் பயனைக்கேளாய் யாதவனே யகசிவ பரமாமியாவு, ஞானசுக கனமான பிரமமல்லான் ஞானமுதல் வேறணுவு மில்லையென்றே, யூனமிலா மனதாலே யாவனித்த முரமாக வன்புடனே தியானஞ்செய்வ, னீன மிலாத் தியானத்தா லன்னோனன்று மேகமுணர் ஞானத்தை யிம்மைவனன்றே. (௧௩)

சீதமதிச் சேகரனைக் காளகண்டஞ் செறிந்தவனைத் திகழ்ந்திடுமுக் கண்ணனாகி, மூதுணருந் தூயவனாய் மகேசனாகி மூவர்களாற் றியானிக்குஞ் சொரூபனாகிப்,' பேதமிலா வுமையினையோர் பாகனாகப் பிறங்குமகா தேவனைநற் சித்தமோடு, மேதொருவன் றியானிப்ப னன்னோனுக்கவ் வீசனுடைச் சகளவுரு ஞானமுண்டாம். (௧௪)

அவனுக்கே யடைவாக நிஷ்களத்தை யறிந்திடுநன் ஞானமுமே யுண்டாமந்தச், சிவனையெவன் மிகுந்தமனப் பிரீதி யின்றிச் சிரத்தையுடன் வெகுகாலந் தியானஞ்செய்வ, னவனுமுறுந் தியானத்தாற் சிவசாரூப்ய மடைந்துமகா போகங்கள் புசித்தபின்னர்ச், சிவனுடைய நிஷ்களசிற் சொரூப ஞானஞ் செறிந்ததனாற் பரமுத்தி தனையுஞ்சேர்வன். (௧௫)

பரமபர மத்தியந்த வபரமென்று பகர்மூர்த்தி மூன்று வித மராகுதிக்குஞ், ஙெரைசெயுமம் மூர்த்திகளி னூலிற்சொன்ன வத்தமமாங் குணங்களெலா முற்றமூர்த்தி, பரமதெனு மூர்த்தியதிற் சிலகுணங்கள் பற்றியதாய்த் தியானிக்கத் தக்க மூர்த்தி, மருவபர மூர்த்திநிகழ் தாம்பிராதி வடிவமதே யத்தியந்த வபரமூர்த்தி. (கஅ)

பரவியமூர்த் திகளுக்கு ளுருத்திரன்றன் பரவுருவை யன்புடனே தியானஞ்செய்வோன், பரவியவவ் வுருத்திரசாரூப்யஞ்சார்ந்து பரம்பரையாய் ஞானத்தான் முத்தனுவ, னுரமுடனவ் வரனுடைய வபரமான வுருவத்தை யன்புடனே தியானிப்போனவ், வரனுடைய சாமீப்ய மடைந்தோனாகி யங்கினிய போகங்கள் புசிப்பன்மற்றும். (கஎ)

தன்னுடைய சித்தத்தின் பருவத்துக்குத் தகுந்தபடி யன்னவனே சிவசாரூப்யந், துன்னிடுவ மலதுசிவ ஞானத்தாலே துகளில்சிவ சாயுச்யந் தனையேசார்வன், பன்னிய தன் சித்தத்தில் பாகத்தாலும் பலவிதமாந் தியானத்தின் பேதத்தாலு, முன்னுசிவ சாயுச்ய மாதியான முக்தியெலா வங்கங்கே நியமங்காண்க. (கஅ)

ஆதரவாய்த் தியானிக்கத் தகுந்தமூர்த்தி யகமென்னுந் தியானத்தா லதன்சாயுச்யம், பேதமுறுந் தியானத்தா லதன் சாரூப்யம் பேதமிவை பரிபாகம் பெறுததாகி லோதுமதன் சாமீப்யந் தாம்பிராதி யுருவமதே தெய்வமெனுந் தியானத்தாலே, யீதுடைய சாலோக்ய மிசைவதாகு மிவ்விதமாய் முத்தியுறும் பேதங்காண்க. (கக)

அரனுடைய வத்தியந்த வபரமாக வமைவுற்ற மூர்த்தி யினைத தியானஞ்செய்வோ, னரனுடைய சாலோக்ய மடைந்துபோக மாங்குபுசித் தடைவாக மற்றுமன்றே, னரனுடைய சாமீபய மதனைசாரா வனல்லாதான் சாருப்ய மத னைச்சாரா வ, வரனுடைய சாயுச்யந் தனையுமன்றே னடைவாக ஞானதரா லடைவன்மற்றும். (௨0)

அன்னவனே மிருந்தமனச் சுத்தியில்லா தாகிலரி மூத லாமேலுலகந்தன்னின், மன்னியுட னங்கங்கே மாபோகங் கண் மகிழ்வுடனே சிலகாலம புசிப்பனன்றேன், பின்னரு மே பூமிதனிற் சுத்தமான பிரமர்களின் குலத்தின்மிசை பிறந்தோனாகி, முன்னமிசை யரனுடைய தியானந்தானே முன்னமுறும் வாதனையான் முயன்றுசெய்வன. (௨௧)

பின்னையமர் மார்பினனே யாவனுன்னைப் பிரியமுட னித்தமுமே தியானஞ்செய்வ, னுன்னுமவன் மனச்சுத்தி யுடையோனாகி னுன்றனைமுன் னடைந்துசில காலத்தாலே, யென்னையுமே யடைந்துமகா போகமுண்டுங் கெனதரு ளான் ஞானத்தான் முத்தனுவ, னுன்னுமனச் சுத்தியிலா தாகிலன்றே னுன்னுடைய் சாருப்ய மாதிசார்வன். (௨௨)

உன்னுடைய வபரமதா மூர்த்திதன்னை யுவகையுடன் றியானிப்போ னுன்சாமீப்ய, மன்னிடுவ னடைவாக வீடுஞ் சார்வன் மாதவநல் லத்யந்த வபரமாகத், துன்னுருவைத் தியானிப்போ னின்சாலோக்யந் தொடருவனுன் சாமீப்ய முதலுஞ்சார்வ, னென்னையுமே யடைவாக வடைந்தென் றலே யெய்தியநன் ஞானத்தான் முத்தனுவன். (௨௩)

அல்லதவன் மனச்சுத்தி யடையானாகி லயன்முதலோ ருலகத்தைச் சார்ந்தங்கங்கே, புல்லிடுமா போகங்கள் புசித்தபின்னர்ப் பூமிதனி லுத்தமநற் குலத்துதிப்பன், பெருநிலைய்தாம் வாதனையா லன்னோனங்கே துகளறவே நின்னுருவைத் தியானஞ்செய்வன், வெல்லபனே யயனுருவின் றியானந்தன்னை வசமாகச் செய்திடுவோன் பயனைக்கேளாய். ( )

இயலுதக்க கமண்டலமோ டக்கமாலை யிசைகானும் வரவபய வத்தனை, வயனுருவை வாணியுட னியாவனன்பா யனுதினமுந் தியானிப்ப னன்னோனந்த, மயலிலயன் சாரூப்ய மடைவன்மற்று மனச்சுததி யிருந்திடுமே லுன்னைச சார்வன், பபனுறவே யென்னையுமே சார்ந்தங்கென்னுற் பற்றியநன் ஞானத்தான் முத்தனாவன். (உரு)

மற்றுமவன் மனச்சுத்தி யில்லானாகின் மருவுபய னுலகத்தின் மாபோகங்கள், பெற்றிடுவன் பின்னருமே பூலோகத்திற் பெரியோர்கள் குலத்துண்டாய்ப் பெருகுமேதை, யுற்றவனாய்ப் பூருவவா தனையாலாங்கே யுன்னுமயன் றியானத்தை யன்னோன்செய்வன், கற்றவய னபரமதா மூர்த்தித்தியானங் கைக்கொண்டோ னயனுடைய சமீபஞ்சார்வன். (உசு)

இயலுமனசு சுத்தியிருந் திடுமேயாகி லிவனடைவா யென்னையுற்று முத்தனாவன், பயிலுமனச் சுத்தியிலா தாகின் முன்போற் பாரிலுதித் தங்கிவன்முன் றியானஞ்செய்வ, னயனுடைய வத்யந்த வபரமாக வமையுருவைத் தியானிப்போ னயன்சாலோக்யப், பயனுறுவன் மனச்சுத்தி பற்றினோனேற் பரம்பரையா யென்னைச்சார்ந்தே முத்தனாவன். (உஎ)

மாதவனே மனச்சுத்தி மன்னுறுகின் மாபோகம் புசித்
தடைவாய் மற்றுமன்றேன், மேதினியிற் சனித்திடுவன் முன்
போலாங்கே மிகவயனைத் தியானிப்ப னிதுதவாறே, பேதமு
று மநுகுநதத் தெய்வந்தன்னைப் பிரியமுடன் றியானிப்போ
னிதுதவந்த, வேதமிலாத் தேவதையின் சாலோக்யாதி யியற்
பதங்க ளடைவாக விசைவனன்றே. (௨அ)

உத்தமனே சித்தமதின் பருவத்துக்கு முன்னியமூர்த்
திகடமயி லுயர்வுதாழ்வுக், கொத்தபடி யங்கங்கே சாலோக்
யாதி யொன்றியபின் னடைவாக வயனையுன்னைச், சத்திய
சிற் கனமான வெனையுஞ்சார்ந்து சலனமிலா வெனதருளான்
ஞானம்பெற்று, நித்தசுக பூரணவென் வடிவமாக நிற்பதுவா
முத்தியினை யடைவனன்றேன். (௨௯)

அடருமனச் சுத்தியிலா னாகிலன்றே னங்கங்கே போ
கங்கள் புசித்தபின்னாப், படியிடையே சனித்திடுவன் மற்று
முன்னம் பற்றியதைச் செய்திடுவ னையமில்லை, செப்புறு
மெம மூர்த்தியினு மென்னைத்தானே துகளறவே மெய்த்து
நல வன்பினோடே, யிடையறவே தியானிப்போ னியாவனன்
றோ னிரையயனை மாதவனே யியம்பக்கேளாய். (௩௦)

மருவியமூர்த் திகடம்மு ளுயர்வுதாழ்வு மனதிலுள சுத
தியினைக் கொத்தவாறே, விரைவிலல தடைவாக வெவைக்
குமேலா விளங்கியவென் பரமான மூர்த்திசார்ந்து, பரவிய
வென் னருளாலென் சொரூபஞானம் பற்றியதாற் பரமுத
தி யடைவனன்றேன், கருதுமனக் கன்மத்தி னுரைத்தநியா
யங் காயிகவா சிகசுன்மந் தனினுங்காண்க. (௩௧)

இத்திறமே பாகியமாங் கன்மத்தாலே யென்னையடைந் தடைவாய்நன ஞானம்பெறறு, முத்திதன்னை நரனடைவன மனத்தின்மகத்தி முற்றுஞ்சேதற் பாகியமாங் கன்மத்தாலே, யுத்தமனே யங்கங்கே சாலோக்யாதி யுற்றவனுய் நற்கன்ம சித்தத்தின்னா, வித்தரமாம பூவுலகிற் சனித்துமுன்போல் விருப்பமுடன் கன்மத்தை விதியாய்ச்செய்வன். (ருஉ)

பற்பலவாம பாகியகன் மங்களாலே பரம்பரையாக் கா லத்தான் முத்திநண்ணு, மறபமிலா வாந்தரமாங் கன்பத் தாலே யச்சுதனே விரைவிலுயா முத்திநண்ணு, மெய்பபடி யிங் காந்தரமா முபாராதநா விலங்கியபெண் ணுயகனுக் கினி மையாவு, எப்படியே யாந்தரமாந தியானத்தாலே யகிலருமே யெனக்குமிக வினியராவா. (ருங)

ஓதியபா கியகன்ம ஞானவிச்சை யுதித்திடவே நா ணமா மந்தக்கன்ம, மேதையுமே துறந்துமிகச சமதமாதி யெய்திடனன ஞானங்க மாகுமிங்கே, மாதவனே மறைமு டியு மீதேசெப்பு மகிமையுறங் காசிமுதற் சேத்திரத்தி, லே தமற வசிப்பதுவு மரணத்தின்பின் னேகமுணா ஞானத்தி னேதுவாகும். (ருச)

காசிமுத லென்னுடைய சேத்திரத்திற் காயமிறந திடு மளவில் வாசஞ்செய்தல், பாசமறு ஞானத்தி னேதுவென்று பகர்ந்ததிலோ ரையமிலை சத்தியந்தா, ஞசறவே பனிரண்டா யிரமாவிர்த்தி யனுதினமும் பிரணவஞ்செபஞ் செய்வோனென் றன், மாசிலரு டன்னுலென் சொரூபஞான மரணத்தின பின்னுற்று முத்தனுவன். (ருரு)

பரிவுடனே பனிரண்டா யிரமாவிர்த்தி பஞ்சமகா வக்ஷ ரமே செபிப்போனித்த, பருவுமுடன் மரித்தவுடனென்னான் ஞான மன்னியதால் வீடுறுவன் மயக்கமில்லை, பிரியமுட னனுதினமு முருத்திரத்தைப் பேதமறச் செபிக்கின்றோன் மரணத்தின்பின், பரமமுணர் ஞானத்தை யென்னாற்பற்றிப பரமகதி யடைந்திடுவன் பதுமக்கண்ணா. (௩௬)

வேதொருபா கியகன்ம மிறந்தபின்ன ரென்சொருப ஞானத்துக் கேதுவென்றே, னோதுமவை நல்லநடை யுற றோர்க்கன்றி யுசிதமிலா நடையுற்றோர்க் கன்றென்றெண்ணா, பாதகமே மிகவுற்றுச் சிரத்தையில்லாப் பாமரரு மெனதுரி மைச் சேத்திரத்தின், மாதவனே வசிப்பதனான் மரணத்தின் பின் மாசறுநன் ஞானத்தான் முத்திசார்வர். (௩௭)

ஏதிலெது மையமில்லை முன்னமோர்கா லிசைகோலா கலநாம னொருவேளாளன், தீதுறுதீ வினையாலே யேவப்பட் டுத் தியங்கினனாய்க் காமத்தாற் பீடையுற்றுப், பேதமை யாற் றன்னுடைய பிதாவைக்கொன்று பின்னருமே தன் மாதா வுடனுங்கூடி, வேதவன மெனுமென்றன் பதியிற் சென்று விரும்பியவா திரிந்தாங்கே வீதலுற்றான். (௩௮)

ஓதியவே தாரணியப் பதியிலன்னோ னுற்றவனாய் வசித் ததுமாத் திரத்தினாலே, தீதுறுதீ வினையெல்லாந் தீர்ந்தோ னாகித் தியங்குமனத் துகளிலனாய் மரித்தபின்னர், வேதவனா திபனாமென் கருணையாலே வேதாந்த வுணர்வுற்றே வீடு பெற்றான், மாதவனே யிதனாலென் பதிகளின்கண் மரணாந் தம வசிப்பதுவே யுயர்ஞானாங்கம். (௩௯)

அச்சுதனே யாதலினுன் முமுட்சுவெல்லா மனிசமு
மென் னுத்தமமாம் பதியிறருனே, துச்சமிலென் பத்தியுடன்
றாலதேகந் துஞ்சளவுந் துகளறவே வசிக்கவேண்டு, மிசசெ
யலே யெல்லோர்க்கு மெளிதாய்முத்தி யினையந்திடநல் லுபா
யமெனவிசைத்தலோடு, முச்சமுறும் பத்தியுட னியுங்கேட
டவ் வுமாபதியை வணங்கியிவை யுரைக்கலுற்றுன். (௪0)

அருள்வடிவே யகிலர்க்கு மானந்தத்தை யமைப்ப
வனே யகிலசகன் னுதனேயிங், குரைதருவே தாரணிய மகி
மைகேட்ப வுவகந்தவெனக் கதனையுரைத் தருள்வாயென்று,
பரவியவிவ் வசுதனுக் கீசன்சொல்வான் பங்கயலோ சன
யார்க்கு, மிதமேயாக, மருவியவிம் மகிமைதனை யுனக்குச்
சொல்வா மாருத சிரத்தையுட னிவைநீகேட்பாய். (௪௧)

தாரணியிற் றிருவாரூ ரென்னுமென்றன் றனத்தின்
றென்றிசையிற் சாகரத்தின், றீரமதி லென்பத்த ரியாவரா
லுந திகழ்வுறவே சேவிக்கப் பட்டதாகிப், பாரமிலா மகிமை
யுடன் விளங்குமிந்தப் பதியீது பரமமதா முத்திசேரக், கார
ணமா மாதவனே யிதனைவேத கானமென வோதுவதன்
காரணங்கேள். (௪௨)

பேதமுறு முன்கற்பச் சிருட்டியாவும் பிறங்கியிடா
தென்னிடையே லயிக்குங்காலே, யாதியிலா வேதமெலாஞ
சூக்கமாக வடங்கியதா மென்னிடையே மற்றுமந்த, வேத
மெலாங் கற்பாதி தன்னின்முன்போல் விமலமதா மென்
னுலே யுதித்ததாகிச், சாதமுறுஞ் சீவரெலா முய்யும்வண்
ணஞ் சரீரியதா யிப்பதியைச் சார்ந்தவன்றே. (௪௩)

அங்கரையோ சனேந்தூர மகன்றதாகி யதிற்பாதி நீண்டு வதாய்ச் சாகரத்திற், றங்குமகா தீர்த்தத்தி லிரவிவாரந் தகு பருவ காலத்துஞ் சிரத்தையோடே, துங்கமறை யெல்லாமும் விதிவத்தாகத் துகளறவே நீராடிக் கோயிற்சென்று, பங் கமிலா வப்பதியி னீசனை பரசிவனை யடைவாயர்ச் சித்தவ ன்றே. (சச)

வேதமெலா மிவ்வாறர்ச் சித்தலோடும் விளங்குமதன் பொருளாமவ் வீசன்றனும், பேதமிலா வம்பிகையோ டாங் குத்தோன்றிப் பெருகியநல் லருள்செய்நான் சுருதிக்கெல் லா, மாதலினல் வேதவன மென்னுநாம மடைந்திடுமப் பதி தான்மற் றந்தத்தீர்த்த, மாதவனே தகுவேத தீர்த்தநாம மன்னியிடு மற்றுமிதன் மகிமைகேளாய். (சரு)

தீதிலதாய் மிகமேலாய்த் திகழும்வேத தீர்த்தமதி லென் னுடைய சுதனுங்கந்த, னுதரவாய் நீராடி யாலயத்தை யடை ந்தாங்கே வேதவனு திபனைப்பூசித், தேதமிலா வவனருளான் மிகுந்தவீர மெய்தியதா ரகவசுரன் றன்னைக்கொன்று, கோ தறவே யுலகத்தி லுள்ளோர்க் கெல்லாங் குறைவிலதா மின் பத்தைக் கொடுத்தானன்றே. (சசா)

அச்சுதனே நாரதனும் பருவகாலத் தங்கதனி னீராடி யாலயஞ்சென், றச்சமுறும் வேதவனு திபனுமந்த வுமாபதி யை மிகவன்போ டாராதித்துத், துச்சமிலா வவனருளாற் பவதுக்கத்தைத் துடைந்திகொ டணமான சொருபஞான, விச்சைதனை யெவையுமுணர் சனற்குமாரன் விளம்பியவா றடைவுற்றவ் வின்னறீர்ந்தான். (சஎ)

கேசவனை வேதவனப் பதியிலோர்கால் கிளர்யாஞ்ஞ வற்கமுனி சென்றன்போடே, யாசறுநற் பருவத்தி னுதய காலத் தவ்வேத தீர்த்தத்தி லவனீராடிப், பாசமறும் வேதவ னாதிபனுமந்தப் பரசிவனைப் பத்தியுட னாராதித்தவ், வீசன தின் னருளாலே விரைவிற்றானே யினமிலா யோகீச னானா ன்றே. (௪௮)

இவ்விதமே கார்க்கியுடனே மைத்திரேயி யிவ்வேத தீர்த் தத்திற் பருவகாலத், தவ்விதமே நீராடி. யிலிங்கரூபி யாகின வவ் வேதவன நாதன்றன்னைச், செவ்வியதாய் வலம்வந்து பணிந்தர்ச்சித்துச் சிவனருளாற் சிக்கெனவே யாஞ்ஞவற் கன், றிவ்வியமா யருளியவா முத்திநல்குந் திடஞான யோக த்தைச் செறிந்தாரன்றே, (௪௯)

அச்சுதனே தீர்த்தமதிற் சுவேதகேது வன்புடனே நீ ராடிக் கோயிலிற்சென், றச்சமுறும் பரசிவனை யுவந்தர்ச் சித்தவ் வுமாபதியி னருள்கொண்டே தன்பிதாவா, மச்ச மிலுத் தாலகனாற் பவத்துக்கேது வாகியவஞ் ஞானத்தை யழிப்பதான, நிச்சயமாம் பரமான்ம ஞானந்தன்னை நிருபவ மா யடைவுற்று நிலைநின்றானால், (௫௦)

வருணனுமவ் வேதவனப் பதியிற்சென்று வழுவறுமத் தீர்த்தத்திற் சிரத்தையோடே, பருவமதி னீராடிப் பத்தியா கப் பரசிவனைப் பாங்குறவே யாராதித்தவ், வருள்வடிவாம் பரசிவனற் கருணையாலே யகண்டபர சிவைக்யம் விளக்கி வைக்கும், பரிசுளதாம் பரமான்ம ஞானந்தன்னைப் பற்றிய தாற் பவபந்த மற்றுநின்றான். (௫௧)

அவனுடைய சுதனை பிருகுநாது பங்கதனி னீரப்பு மிகவன்போடு, மெவமிலதாம் வேதங்கள் வேதாந்தங்க ளெல்லைகட்கும் விபுவாமவ் வீசன்றன்னைக், கவலைபறக் கண்டடைவாய்ப் பூசித்தன்னோன் கருணையினாற் றன்னுடைய பிராமிடத்திற், பவமறவே பரோட்சமிலா வகண்டஞான மடற்றியதாற் பவபந்தம் விடுத்தானன்றே. (௫௨)

மாதவனே திரிசங்கு வென்போனந்த மகிமைமிகுந் தீர்த்தத்தின் மகிழ்வோடாடி, வேதவன நாயகனை யிகவர்ச்சித்து வேதாந்த விஞ்ஞானம் பெற்றான்மற்று, மோதியவித் தீர்த்தந்தனி லனேகராடி யுமையுடனவ் வேதவன நாதன்றன்னை, யாதரவா லடைவாக வாராதித்தங் கவனருளா லகண்ட முணா ஞானம்பெற்றார். (௫௩)

இப்பதியிற் பூதானங் கிரகதான மியற்றிடுவோ னுருத்திரனு ருலகஞ்சார்வ, னைபடியே தனமுடனற் புணியத்தை யளித்திடுவோன் குபேரனொடு சமானமாவன், றப்புறவே யிங்கன்ன தானஞ்செய்வோன் றொலைக்கவொணாப் பிணிகளெலாந் தொலைத்தோனாவ, னைப்புடனே திலதானந் தன்னைச்செய்வா னண்ணுமகா பாவங்க டவிர்ந்தோனாவன். (௫௪)

கன்னிகையை யிங்கீந்தோ னுமையுலோகங் கலந்திடுவன் றுகிலீந்தோன் மகவானாவன், பன்னியதி லையமிலை மற்றுநல்ல பருவமுதற் புண்ணியகாலத்திலாங்கே, முன்னியவத் தீர்த்தத்தி லன்போடாடி மூன்றுமுறை பரசிவனை வலமாய்வந்து, சென்னியினாற் பணிவுற்றுச் சிவனைக்கண்டு செவ்வியதா யாலயத்திற் றீபமேற்றி. (௫௫)

சிரத்தையுடன் வராகனை வானசொன்னஞ் சிவயோ
கிக் களித்தோருநா ளுபவாசத்தைத், தரித்திடுவோன் முத்
தன்றன் சிவகையில்லை தகைமையுறுங் காலத்தி லந்தீர்த்தத்
திற், றிருத்தமுறு மன்புடனே யாடியந்தத் தேவேசன்
றனைக்கண்டு சிவயோகிக்கே, யருத்தமெது மளித்திடுவோன்
பிரமகத்தி யாதிமா பாவங்க ளகன்றேறுவன். (௫௬)

மாதவவில வேதவனப் பதியிற்றனே மரித்திடுவோன்
முத்தன்றன் மயலேயில்லை, சூதறுநற் பத்தியுள்ளோர்க் கிந்
வேசாலச் சேர்வுநரு பிணிகளெலா நீக்குந்தான, மீதுசந
யென்னுடைய வன்பராலு மென்னாலு மென்னுடைய தேவி
யாலும், பூதமுறப் பேணியதா மறமேநல்கும் புத்தியுநன்
முத்தியுமே பொருந்தச்செய்யும். (௫௭)

அச்சுதனே வேதமுடி யனைத்தினாலு மடக்கமதா யறை
ந்தபடி யுன்றனக்கிவ், வச்சமதா முத்திபெறு முபாயந்தன்
னை யுரைத்தமிதைச் சிரத்தையிலா மூடரான, துச்சரிடைச்
சொல்லலொணா தென்றவீசன் றுகளிலதாம் வசனத்தை
மாயோன் கேட்டுச், சச்சிதுருப் பரசிவனை யன்பாற்போற்
றிச் சாலவுமே நிர்த்திதனைச் சார்ந்தோனானன். (௫௮)

## வேறு.

முனிவரே யிந்த வண்ண முற்றுமே யுணர்ந்த வீசன்
பணுவிய மோட்சோ பாயம் பகர்ந்தன முங்கட் கெல்லா
நணியுநீ ரிவ்வர்த் தத்தை நன்றென விதயத் தின்க
ணனிசமுங் கொள்ளுவீரென் றறைந்தனன் சூத னங்கே. ( )

## மூன்றாமத்தியாய முற்றும்.

ஆ அத்தியாய மூன்றுக்குத் திருவிருத்தம் - ௧௩௦.

## நான்காவது
# போதகனையுரைக்கு மத்தியாயம்.

சுருதி யானன் றுணர்ந்திடத் தக்கதாஞ் சுத்த, போத கன் றன்னை யுனக்கினி, யரிய மாதவ யாயிங்குப் போதவ டன்னைத நீமிகு பத்திசி ரத்தைகண், மருவி நின்று மகிழ் வுடன் கேட்டுணர் மற்று முன்னொரு காலத்தி னுமைகள்,பரவு போதகன் றன்னைக் குறித்தெயைப் பரவி னுளதற் குத்தர மியாஞ்சொனோம். (க)

அகர மேமுத லக்கரந் தன்னையே யமல மாம்வடி வாக வடைந்தவ, டிகழ்முத லக்கெலா மாயைய யானவ டிராசின் முத் திரை யேமக மண்டல, மகில ஞான மகாமணி கோசமா மமல புத்தக மோட்சக மாலையு,நிகழு நான்கு கரங்கள் செழி ந்தவ ணிமல விந்து நிறத்தின ளன்னவள். (உ)

பங்க யந்தனில் வீற்றிருக் கின்றவள் பரவு நேத்திர மூன்றைத் தரித்தவ, டுங்க நீல களத்தைத் தொடர்ந்தவை யே சந்திர சேகரஞ் சார்ந்தவள், பங்க மற்ற சடாதரி யான வள் பலவி தாபர ணங்களும் பூண்டவ, டுங்கி லக்கண மியா வையு முற்றவள் சகல ராலுமு பாசிக்கத் தக்கவள். (ங)

இந்த வாநிக னுமைக ளன்பினே டெம்மை யேத்தி யிறை ஞ்சி வணக்கமாய்ப், பந்த மோசக னாருரு வென்னவே பகரும் வாணியை நோக்கி யெவர்க்குமே, சந்த தமனு கூலத்தை வேண்டியாஞ் சாற்ற லுற்ற தனைத்தையு மின்றுனக், கந்த

வாறருள் சாலடை வாகவே யறைகு வாமதை யாதர வோடு கேள், (௪)

பரவ யன்முத ருவர வந்தமாம் பலரு மிங்கு பசுக்க ளெனப்படும், பரவு மந்தப் பசுக்களுக் கென்றுமியான் பதி யெனத்தெரிந் தோர்கள் பகர்வராற், பரவு மாயை யெனுங் கொடி பாசத்தாற் பசுக்க டம்மைப் பிணித்திடு வோனுமியான், பரவு மந்தப் பசுக்களை மற்றுமப் பாச நின்று விடுத்திடு வோனுமியான். (௫)

என்னை யேபவ மோசக னென்பதா யேத மின்மறை நானு மிசைத்திடுந், தன்னைக் கொண்டல தன்னியங் கொண்டுதான் றரும மறைக்கொரு தோடமு மில்லையே, யன்ன வேத மனுதி யதானதா லன்னி யங்கொ டுதற்கொரு தோடமுந், தன்னி டாதகஞ் சூண்மை யுரைப்பதாற் றுகளா தற்குத் தனைக்கொடு மில்லையே. (௬)

ஆன தாலிம்மறை முன்னிலை யாகியா மகில மானத்து முத்தம மானமா, மீன வன்னிய மானமெ வைக்குமே யிகழ வித்தையி னுற்றுக ளுள்ளதான், மான வுத்தம மாமறை யோடுமெய் மானமேனும்வி ரோத மடைந்திடு, மூனமா மவை யப்பிர மாணமா மூன மின்மறை தான்பிர மாணமே. (௭)

மேதை யின்றிற மேவிய வாணியே மிருதி யோடுபு ராணநற் பாரத, மாதி யாகம மானம னைத்துக்கு மந்த மாமறை மூலம தானதால், வேத மோடுவி ரோதம டைந்திடின்

மிருதி யாதிய தப்பிர மாணமே, நீதி யானுமற் றன்மையை
நோக்கிடி னிகழு மாமறை தான்பிர மாணமாம். (௮)

பகரும் வேதப் பொருட்கு விரோதமாய்ப் பாஞ்ச ராத்
திர மாதி யுரைத்திடு, மருதி னுரை வேதத்தை மூலமா ய
டைந்த தன்றத னலந்தத் தந்திரம், புகலு மார்க்க மனைத்
தையு மாய்ந்திடிற் பொய்ம்ம யக்கத்தி னலது திக்கதா,
மிருதி னலிது வைதிகர்க் கென்றுமே யன்றுமப்பிர மாண
ம தாயிடும். (௯)

தரணி யின்மறை மார்க்கத்தைத் தீங்கினுற் றவிரு கி
ன்ற சிலவதி காரிக்கே, விரவு தந்திர மார்க்கங்க ளுக்குளே
யொத் மோடுவி ரோதமு றுததாய்ப், பரவு மாசமே தன்னது
மானமாப் பையப் பையப் பலத்தை யளித்திடு, மருவு தந்தி
ர மார்க்கத்தி னின்றவர் மறைவி லாநெறி யொல்லையின்
மன்னிடார். (௧0)

தந்தி ரத்திற் செறிந்தவர் மெள்ளவே தங்க டேவதை
தன்னை யடைந்தபின், பந்த நீக்கிடு மென்னைப் பொருந்து
வர் பண்ணும் வைதிக ரோர்மறை யின்றியே, யந்த வென்னை
ப் பொருந்துவ ரத்தினு மான ஜன்மியைக் காட்டினு மொல்
லையிற், றெருந்த நீக்கிடு ஞானப் பழக்கமே தொடரு கின்றவ
ரென்னைப் பொருந்துவர். (௧௧)

அயலி லாதுணர் ஞானிக ளுக்கியா னன்ம ரூபமே தாக
விருப்பதான், மயலி லன்னவ ரென்றனைப் பேதமாய் மற்று
மன்னிடத் தக்கது தானிலைப், பயிலும் வண்ணமெ வர்க்குஞ்

சொரூபமாய்ப் பரவு நான்பவ மோசக னென்றுமே, யியலு
மாபதி யாயகி லேசனு மெனைய லாலொரு மோசக னில்
லையே. (௧௨.)

இன்ன நான்பவ மின்றி யிருப்பவ னியல்பி னுலைநு
மென்று முணர்ந்தவ, னென்னி லெண்ணிய ரியாவரு மாயை
யா லிருளு மாவர ணத்தை யிசைந்தவர், துன்னு மான்ம
சொரூப முணர்ந்திலர் துகளு றும்பவ பந்தஞ் செறிந்தவர்,
பன்னு மேதுவி னுலை வென்றனுற் போச நின்று விடுத்திடத்
தக்கவர். (௧௩)

பாச மாயை நடத்துவ மேவலாற் பகர் பசுக்களும் பந்
தம் பொருந்தலான், மாசில் பூரண போத சொரூபனும் நற்
று நித்திய முத்தசு பாவனு, மீச னாகிய சங்க சொரூபனு
மேக தத்துவ மாரு மெனக்கொரு, மோசக னொரு காலமு
ஞ் சித்தியான் முற்று மோர்ந்து தெரிந்துகொள் வாணியே.

ஆண வாதிகள் பாசம் பொருந்திய வகில மான பசுக்க
ளுக் குருந்தரா, நான வாற்பவ மோசக னருமே நண்ணிடா
தொரு போதுமி த்தன்மையே, யூன மில்மறை யந்தமு மிந்
தவா றுண்மை யாக வுரைத்திடு மென்னவே, யீன மின்றிய
வாணியை நோக்கியா னியலு மோசக னப்புகன் றேனரோ.

என்னு மென்னரு ளாக்கியங் கேட்டபி னீன மின்றிய
வன்புட னிச்சகத், தன்னை யாய்த்திகழ் வேதசொ ரூபியா
மன்ன வண்மிக வென்றனை யர்ச்சித்தாள்,பின்னை நாயக மெ
த்த வெனக்குநீ பிரிய பத்தன் பிறங்கு குணக்கட, லுன்னை

யொத்தவ ராருமி லாததா னுள்ள வாடவ மோசக னைச்சொ னேன். (௧௬)

வேத மார்க்கம் விதித்த வறங்களை வேண்டிச் செய்பவ ராகிய கங்கா, மேதை மின்றி விசுத்த மனத்தரா மென்றன் பத்தியை மெத்தவும் பெற்றுள, கோதி லந்தண ராதி கரூக் கியான் கூறு மிப்பொருள் கூறுக மாதவா, வேத மேவிய மற்றவ ரார்க்குமே யீதி யம்பவொ ணாதொரு போதுமே. (௧௭)

இந்த வாக்கியங் கேட்டபி னச்சுத னென்று மார்க்கு நிசான்ம சொரூபமா, மெந்த யோகிக ளேவர்க ளாலுமே மென்றும் பூசித னாகிய கண்டனை, யந்த விஞ்ஞையு மைத்தொரு பாகனை மமல சந்திர சேகர வீசனை, பந்த மோசக னென்று தெரிந்துடன் பரம பத்தியி னற்பணி கின்றனன். (௧௮)

உச்சந் தாழ்வென வோர்பகுப் பின்றியே யோர்கு மோர்வடி வாகிய வத்துவாய்ச், சச்சி தின்ப வகண்ட சொரூ பனுய்ச் சகல நாயக னாகி யெவர்க்குமே, யச்சமின்றிய வின்ப மளிப்பனு யகில சிட்டரும்பேணுமவ் வீசனைத், துச்ச மின் றிய வாக்குட னேத்தியே தூய விண்டு பரவச னாகினன். ()

இந்த வாசொன விப்பர மேசனே யென்று மியார்க்கு மிசைந்துள விப்பவ, பந்த மோசகன் மற்றவ ராருமே பந்த மோசக ரன்றெனு மிப்பொருள், சிந்தையி லெளி தாய்த்தெ ரி யும்வணஞ் செப்பு வாமினி யோரிதி காசமும், புந்தி யின் மிகு மாமறை யோர்களே பூன்ற வாதர வோடிவை கேண்மினோ. (௨0)

## வேறு.

முன்னொருகா லொருமறையோ னுயர்ந்தோ னன்றேறும் மொழிவழுவா வைதிககன் மங்க லெல்லாந், துன்னியவா சா வுடனே செய்த வற்றாற் றுகளான பாவமெல்லாந் தீர்ந்தோ னாகி, மன்னுமனச் சுத்தியுடை னுழியாச் சன்ம மனைத்தி னின்றுமிகப் பயந்தோ னாகிப், பின்னமுறுந் தேவமெலாந் தன்சம் சார நீதிதனை விடுப்போரென் றெண்ணா முற்றும்.

அன்னவன்மற் றவரையெலா மடைவே யாக வெம்பட னை யாராதித் தாய்ந்து நன்றாய்ப், பின்னமுறுந் தேவரிவ சன்ம நாசம் பெற்றவரென் றவரையெலா மறிந்து தள்ளி, மன்னுபரி பூரணமாய்ச் சத்தாய்ச் சித்தாய் மகத்தான வான த வடிவமாகி, யுன்னியவும் பவநாச மொன்றுமில்லை யெனவ ந்திநிதம் பரிவினோ டோர்ந்து சார்ந்தான். (௨௨)

அரியசிவன் றிருவுருவின் பெருமை கேளீ ரருள்வடிவ மகிலேசன் ஞான னாகிப், பரமபதன் அருவனை பரம னந்த பரசத்தி பாகமுறும் பான்மை யோனாய், மருவுசரச் சந்திர னன் னிலவே போல மாசறவே விளங்குவனு மாவின் பால் போல், விருமமெனுந் திருவுருவைத் தரித்தோ னாகி நிகழ்பதி நிகரான வதன ஞானேன். (௨௩)

நீர்க்கசடா டவியுற்றுத் திகழு மிந்து சேகரனுந் திகழ் கங்கா தரனு மாகிப், பார்க்கரனோ டிந்துகன லெனுமுக் கண் ணைப் பரிப்பவனு மெல்லோரின் றுயருந் தீர்த்துக், காக்கமகா பயமான காள கூடங் கண்டமிசை தரிப்பவனுய்க் கலங்க

மில்லா, தார்க்குமிகு மின்பத்தை யளிக்கு மங்க ணாசமுறு மானனாய்த் திகழ்வ னன்னோன். (௨௪)

அகிலவிலக் கணமுமுளோ னகில மான வாபரணத் திர ளணிவோன் பூதிகொண்டே, திகழ்வுறவே யங்கமெலாந் திட மாய்ப்பூசித் திகழ்ர்ததிரி புண்டரமுந் தரித்த தேக, னிகழ் வுறுநா காபரண நிகழ்ந்த காய னீண்டமறை வெண்ணூலைப் பூண்ட மார்பன், றகுபுலியின் சர்மத்தைத் தரிப்போ னன் னோன் றகுவிரா சனமீதில் வீற்றி ருப்போன். (௨௫)

திகழ்யோகப் பட்டையுடன் செறிந்த வங்கன் றென்றி சையை நோக்குமுகன் னாயோ னன்னோ, னகலாத செந்து களினுன்மாஞ் ஞான மாகியவெம் முபலகனை யழுத்தும் பாத, னிகழ்ஞான முத்திரையு நிமலபோத நிதியான புத்த கமு நிகில மாகப், பகர்கின்ற தத்துவமா மக்க மாலை பரவுக மண் டலமுநிகழ் பாணி யுற்றோன். (௨௬)

மாயையெனும் வடகருவின் மூலஞ் சார்ந்தோன் மன் னியதன் னிலைநழுவாச் சுயாவ மானோ, னேயமிலா வுற்பத்தி நாச மாதி நிகிலவிகா ரமுமற்றோ னித்தன் சாந்த, னுயகலை யனைத்திற்கு மீச னானோ னகிலசக தீசர்க்கு பீச னன்னோன், றாயமறை கரைகண்டவ் வறமே செய்து துகளற்ற முனிவர் களாற் சூழப் பட்டோன். (௨௭)

தருமவுரு விடபத்தாற் றுங்கத் தக்கோன் றகைமைமிகு மோங்காரத் தவிசின் மேலோன், கருணைமிகுந் தெல்லோர் க்கு மிதமே செய்வோன் களங்கமிலாத் தனதான்ம ஞானந்

தநது, பிரியமுள வன்பருறும் பவதுக் கத்தைப் பெயர்ந்திடு மோ சகனுமேனன் மற்றுமன்னே, னிருமையுறு மிவ்வுலகின் சிருட்டி யாதி யாவையுமே கற்பிக்கு மேது வானேன். (உஅ)

இத்திறமே வெகுவிதமா மகிமை சார்ந்திங் கியல்பாகத் தன்வடிவை யுடையசிக் கின்ற, பத்தர்கடாம் வாஞ்சித்த பலத் தை யெல்லாம் பாங்காக வளித்திடுமவ் வீசன் றன்னை, யுத்த மனு மாமறையோன் சரணு மெய்தி யோங்கியநற் பத்தியுடன் றண்ட மேபோன், மெத்தவுமே மேதினியிற் பணிந்து போற்றி மேவியதன் சத்தியள வாரா தித்தான். (உகூ)

பத்தருறு மிடர்தீர்த்துச் சுகமே செய்யும் பரசிவனின் றட்சிண்மா முகத்தி னாலே, மெத்தியவென் பவபீதி நீக்கி யென்னை மெய்யருளாற் காத்திடுவா யெனவே வேண்டி, யுத் தமனு மம்மறையோன் மிகுந்த வன்போ டொழியாம லடிக் கடியும் பூசை செய்தா, னத்திறமே பூசிக்கு மறையோன் றன்பா லருள்வடிவா மவ்வீசன் கருணை கூர்ந்தான். (ஙo)

## வேறு.

திரவருண் மிகுந்த வந்தத் தெட்சிணா மூர்த்தி யீசன்
பிரிவிலா வான்ம ஞானம் பிரியமோ டவனுக் கீந்து
பரவிய பவபந்தத்தின் பயத்தினைச் சிதைத்து வைத்தா
னரியமா மறையோ னன்றே யச்சமற் றபயஞ் சார்ந்தான். ()

திரும்பவும் வெகுசெந் துக்க டெட்சிணா மூர்த்தி தன்னி
னிரம்பிய வருணை வாயா னிலைத்திடாப் பவமா கின்ற
வரம்பிலா வாரிநின் றும் வருத்தமே தொன்று மின்றிப்
பரம்பியு பிரம மாகும் பாரத்தி லேற்றி னாரே. (ஙஉ)

ஆசிலா முனிவ ரேநீ ரகண்டவா னந்த மான
மாசிலா மாதே வன்றான் மயக்கமாஞ் சம்சா ரத்தின்
மோசக னென்று ணர்ந்து மொழியுமெம் முயற்சி யாலும்
பேசுமவ் வீசன் றன்னைப் பேணியே சேவை செய்மின். (௩௩)

அகிலசத் தியுமு டைத்தா யம்பிகா பதியா கின்ற
மகிமைகூர் மாதே வன்றன் மன்னிய சேவை யாலே
சகலமாஞ் செந்துக் கட்குஞ் சந்ததம் போக மோட்ச
நிகிலமுஞ் சித்தி யாகு நிச்சய மீதே யென்றான். (௩௪)

இந்தவா றுரைத்த சூத னினிமையாம் வசனங் கேட்டங்
கந்தமா முனிவ ரெல்லா மறவுமே யன்பி னோடே
சிந்தையா லெது முணர்ந்து செப்புமச் சூதன் றன்னை
வந்தன மனந்தஞ் செய்து வளமுறப் பூசித் தாரால். (௩௫)

**நான்காவதத்தியாயம் முற்றும்.**

ஆகவத்தியாயம் நான்குக்குத் திருவிருத்தம் - ௧௱௩௫.

**ஐந்தாவது**

## மோசகப்பிரதனை யுரைக்கு மத்தியாயம்.

மோசகப் பிரதன் றன்னை மொழிகுவா மிந்தவோத்தின்
மாசிலாச் சிரத்தை யோடு மாதவ விதனைக் கேட்டி.
பாசமோ சகனா மென்னைப் பாங்குற வுணர்த்து மாசான்
மோசகப் பிரத னென்றே மொழிந்திடப் படுவ னன்றே. (௧)

இத்திற மான வாசா னாரெனில் வேதாந் தத்தின்
சுத்தமாம் விசாரத் தாலே சொரூபமே யுணர்ந்தோ னன்னோ

னுத்தமன் மத்தி மன்மற் றேறுதிடு மதம மென்று
மித்திறம் விவித மாக விசைத்திடப் படுவ னிங்கே. (உ)
மறையவ னுத்த மன்றுன் மத்திம னரச னாகு
மறைதரு வைசி யன்று னதமனு மென்பர் மேலோர்
கறையிலா வைசி யன்றுன் களங்கமில் வைசி யர்க்குங்
குறைவிலாச் சூத்தி ரர்க்குங் குருபர னவன் றாயோய். (ங)
போதமா ரரசன் றானும் புரையிலா வரச ருக்கு
மேதமில் வைசி யர்க்கு மேவல்செய் சூத்தி ரர்க்கு
மாதியாங் குரவ னாகு மந்தண னந்த ணர்க்கு
மோதிய மற்றே ருக்கு முந்நமக் குரவ னாமே. (ச)
மருவிய சூத்தி ரர்க்கு மாதர்க ளெமக்கு மென்றுங்
குரவனாந் தன்மை யில்லை கூறிய வணிகர் மண்ணு
ளரசரு முணர்வு ரத்தா லவரினு மேலோ ருக்குங்
குருபர ராவ ரென்றுங் கூறுவர் சிலவ ரிங்கே. (ரு)

### வேறு.

மறையவரா மாசிரியர் பிரமசாரி மாசறவே யில்வாழ்வோன் கானம் வாழ்வோ, னறைதருமில் வாழ்வற்ற சந்நியாசி யதிவருண வாச்சிரமி யெனவே யைந்து, நெறியுறவே நிற்பரதன் மேன்மேலாக நிகழ்த்தியவ ருயர்ந்தவராந் தாழ்ந்தோர்க் கெல்லாங், குறிதவிரா வுயர்ந்தோர்கள் தாழ்ந்தோருக்குங் குருபரரா குவரென்று கூற லாமே. (சா)

போதமிகுந் திருக்குமெனிற பிரம சாரி போதமிலா வில்வாழ்வோன் கானில் வாழ்வோ, னேதமிலா யதிமூவர்க் காசா னாவ னிப்போத மிகுந்திலதேல் ரச னாகா, ஞேனுணர்

வு மிகுநதுளதே லில்லம் வாழ்வோ ஞேதியமற் றிருவர்க்கு மாசா னுவன், மாதவனே யிவ்வுணர்வு மிகுநதி டாதேன் மனைவாழ்வோன் மற்றிருவர்க் காசா னுகான். (எ)

ஓதியவிவ் விதமாகக் கான்வாழ் வோனு முணர்வுமிகுந திருந்திடுமேற் சந்நி யாசிக், கேதமிலாக் குருவாவ னிதுமிகாதே லென்றுமிவ னவனுக்குக் குருவே யாகா, ஞுதிகுருவானவெனைப் போல வென்று மதிவருண வாசசிரமி யெல்லோ ருக்கு, டாதவனே குருவல்லா லவனு ருக்கு மருவியவோர் மாணுக்க னுகான் மாதோ. (அ)

அன்னவனே யாசிரிய ராஞேர்க் கெல்லா மாசிரிய னவனுடனே சமான னேனு, மின்னலிலா வவனைவிட வதிகனேனு மிவ்வுலகி லாருமிலை சத்தி யந்தா, னென்னுடனே சமனேனு மதிக னேனு மெங்கணுமே யாரேனு மிருப்பஞேசொல், பின்னையமர் மார்பினனே யிவித மாகப் பேசலுறு மவனுடைய விலக்க ணங்கேள். (கூ)

அச்சுதனே யாக்கைபொறி யாதி யான வனைத்துக்குஞ் சான்ருகி யவைக்கு வேறுய்த், துச்சமிலாச் சத்தாகிச் சிதது மாகித் துன்பமிலா வானந்த கனமு மான, வுச்சமுறு மான் மாவை யகண்டா காச வுருவான் பரப்பிரம மென்ப தாக, வசசமற வபரோட்ச மாய றிந்தோ னதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (கம)

ஓதியவே தாநதமகா வாக்கி யத்தி னுயர்பொருளை யடைவாகக் கேட்டு மற்றும், போதகன வானந்த வுண்மை யாகப் பொருந்தியவப் பொருளினையே மனனஞ் செய்திங்,

கிதினையே நிரந்தரமா யிடைவி டாம லினிமையுடன் றியா னித்துச் சாட்சாத் தாக, வாதியிலா வான்மாவா யறிந்த வன்று னதிவனன வாச்சிரமி யாவ னன்றே. (கக)

சாக்கிரமே முதலான வவத்தை மூன்றின் சான்றாகி யவத்தையது சற்று மின்றித், தாக்கியவோர் சங்கமிலாத் தன்னுன் மாவே தடையறவே பூரணமாய்ச் சத்துச் சித்தாய், நீக்கியிடா வானந்த நிலையே யாக நின்றமகா தேவனெனச் சாட்சாத் தாக், வாக்கியவோர் பேதமற வறிந்த வன்று னதி வன்ன வாச்சிரமி யாவ னன்றே. (கஉ)

வன்னமுட னச்சிரம முதலா மியாவும் வழுவுடலின் மாயையினாற் கற்பி தந்தான், பின்னமிலாப் போதகன வுரு வே யாகப் பிறங்கியிடு மான்மாவா மெனக்கெப் பேர்து, மின்னதெது மிலையெனவே வேதாந் தத்தா லிங்குரமா யெவ னறிவன் பதுமக் கண்ணு, வன்னவனே யெல்லோர்க்கு மே லாய்ச் சொன்ன வதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (கங)

பானுவுக்கு முன்பாகத் தனக்குத் தானே பலவுலகுஞ் சேட்டிக்கும் பான்மை யேபோன், ஞானகன வுருவானி வெ ன்றன் முன்பால் ஞாலமெலாஞ் சேட்டிக்குந் தனக்குத் தா னே, நானதனு னிஷ்கிரியப் பிரம மென்றே நண்ணியநல் லறிவுற்றுச் சீவன் முத்த, னவனே யெல்லோர்க்கு மே லாய்ச் சொன்ன வதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (கச)

தொடர்புற்ற சொர்ணத்தின் மகுட மாரந் துலங்கி யகே யூரமுதற் கற்பி தம்போற், றொடர்புற்ற சிற்கனமா மன்னி டத்துத் துவிதமெனுஞ் சடமான சகத்த னைத்து,

மடர்புற்ற மாயையினாற கற்பி தந்தா னாதலினா லத்துவிதப் பிரம னானென், றடர்புற்ற நல்லறிவை யடைந்த வன்றா னதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (௧௫)

சுத்திகையின் மாயையினாற் பொய்யே யாகச் சொலிக் கின்ற பொய்ரசிதங் கற்பி தம்போற், சத்தியா மென்னி டையு மகதத் வாதி சகமெல்லா மாயையினாற் கற்பி தந்தா னித்தமுமா தலினாலே சத்தே யாக நிகழுமகண் டாகாரப் பிரம னானென், றத்தமிலா மறைமுடியா லறிந்த வன்றா னதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (௧௬)

சதுமறையோன் றேகத்தும் பசுதே கத்துஞ் சண்டா ளன் றேகத்து மற்று நானா, விதப ருவுந் தேகத்து மாகா யம்போல் விரிவுறவே வியாபித்து மோர்பற் றின்றி, நிதமு மொரு வடிவாயோர் விகார மின்றி நிகழுமகா தேவனவ னானென் றிவ்வா, றதிசயமாய் மறைமுடியா லறிந்த வன்றா னதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (௧௭)

மருவியிடு மோர்திக்கை மற்றோர் திக்காய் மயங்கியவன் பானுகதி முதலைக் கண்டு, பிரமையிலா துணர்வுற்று மன்னோ னுக்குப் பின்னுமவை வேறுபடக் காண்ப தேபோற், றுரி சில்பர ஞானத்தாற் றுடைக்கப் பட்ட துவிதசகந் தோன்றி னுமற் றெனக்கீ தில்லை, யரியபரந் தானானென் றறிந்து நின்றோ னதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (௧௮)

கனவிலுறுஞ் சகமெல்லா மென்னி டத்தே களங்க முறு மாயையினாற் கற்பி தம்போ, னனவிலுறு ஞாலமெலா மென்னி டத்தே நவில்கின்ற மாயையினாற் கற்பி தந்தா,

ஙினியதனு லொன்றுமெனக் கிடமே யில்லை யேகசிதா காச மதாம் பரமே னானென், றனிசமுமே மறைமுடியா லறிந்து நின்றோ னீதிவனன வாச்சிரமி யாவ னன்றே. (கக)

அன்னியமி றன்னறிவா லார்க்கு வன்ன வாச்சிரம வா சார நமுவு மன்னோன், வன்னமுட னுச்சிரம மனைத்துந் தாண்டி வரமான தன்னுன்ம நிலையி னின்றோ, னின்னவித மிவையெல்லா முணர்வாற் றூண்டி யெவனென்றுந் தன்னி டையே நிலைபா நிற்ப, னன்னவனே வேதார்த்த மறிந்தோர் சொல்லு மதிவன்ன வாச்சிரமி யாவ னன்றே. (உ0)

தேகமிலை பொறியுமிலை யுயிரு மில்லை தியங்குமனந் தானுமிலை புந்தி யில்லை, சோகவகங் காரமிலை சித்த மில்லை சொல்லிடுமோ காயமுதற் சகமு மில்லை, மோகமிகு மாயை யிலை கர்த்தா போத்தா முதலான தெவையுமிலை சற்சித் தின் ப, வேகரச மாகியநற் பிரமந் தானே யெல்லோர்க்கு மான் மாவா மூண்மை யோரின். (உக)

மூாயவனே புதகத்தின் சலனத் தாலே மார்த்தாண்டன் சலிப்பவனுய்க் காண்ப தேபோற்,றீயவகங் காரத்தின் சம்சா ரத்தாற் றிகழ்வுருவா மான்மாவிற் சம்சா ரந்தா, னுயதுபோ ற் காணலுறு மதனுல் வன்ன வாச்சிரம மாதியெலா மயக்க மாகத், தூயசிதா னந்தகன வான்மா வின்கண் டோன்றினு மே யுண்மையிலோர் விகார மில்லை. (உஉ)

அத்திறமா மான்மாவே யகமென் றெண்ணி யதிவன்ன வாச்சிரமி யானோ ருக்கிங், கெத்திலுமே விதியில்லை நிடேத மில்லை யெவற்றையுமே சேர்ப்பதொடு தவிர்ப்ப தில்லை, யுத்

தமனே மற்றுமெது மணுவு மில்லை யோதியவிம் மகிமை பெறு மன்னோர் தம்பி, னித்திறமா நிட்டையினை மாயை யென்னு மிருண்மூடு மூடர்கடா முணரா ரென்றும். (உ௩)

நிருமலமாஞ் சுவானுபவ விழியாற் காணு நிட்டை யிதை மாமிசமாம் விழியா லாரு, மொருபொழுதுங் காண வொணு தறிஞர்க் கேயிங் கோதியவிந் நிட்டைசதா சுபாவ சித்தம், பிரமமேதி லிவ்வுலகர் துயில்வோ ரென்றும் பிறங் குமதி லவ்வறிஞர் விழித்தே நிற்பர், மருளுலக ருலகமெ தில் விழிப்போ ரென்று மற்றதனி லவ்வறிஞர் துயில்கொ ண்டோரே. (உ௪)

சத்தியசிற் சுகமாகிச் சாந்த மாகிச் சகலவிகா ரமுமி ன்றிப் பூன்ற மாகி, நித்தியமாய் நிர்த்தொந்த நிருவி கற்ப நிரஞ்சனமாய் நிகழ்சுத்த முத்த மான, வுத்தமமா மான்மா வை வேதாந் தத்தா லுணர்வுற்றிங் கெவனுரமா யனுப வியப்ப, னத்திறமா மவனுர்க்குங் குருவே யான வதிவன்ன வாச்சிரமி யெனவே கொள்வாய். (உ௫)

அன்னவனே வேதார்த்த மறவுங் கண்டோ னன்னவ னே மோசகனை யளியா நின்றோ, னன்னவனே மோசகனு மாகா நின்றோ னன்னவனே யனைத்துக்கு மூல மென்றோ, னன்னவனே சத்தியசிற் கனமா கின்றோ னன்னவனே பர முத்தி வடிவாய் நின்றோ, னன்னவனே போகமெலா நல்கா நின்றோ னச்சுதனே யவனெல்லா மாகி நின்றோன். (உ௬)

இவ்விதமாய் வேதாந்த சித்த மான விவ்வுண்மைப் பொருளையெலாங் கருணை யாலே, திவ்வியமாஞ் சுரர்முனி

யா னரெல் லோருந் தெரிந்துடனே பரமுத்தி சேரும் வண்ண, மவ்விதநின் வேண்டுதலா லருளிச் செய்தோ மச்சு தனை யெனலோடு மதனைக் கேட்டுத், தவ்வியிடா மனதுட னே மகிழ்வு கூர்ந்து தடையறவே யுரைத்ததெலா முணர்ந் தான் மாயோன். (௨௭)

வேதியரே பரமசிவ னருளிச் செய்த வீடுதரும் வேதா ந்த விஞ்ஞானத்தை, மாதவனங் கடைவுற்றுப் பரமான் மா வாய் மன்னுமருட் கடலான மாதேவ வன்றன், பாதமலர் தன் னுடைய முடியிற் சூட்டிப் பரவசனா யானந்த பாட்டங் கூர்ந்தே, யோதவொணாத் தொனியுடனே வணங்கி யேத்தி யுவமையிலா வானந்த லகிரி கூர்ந்தான். (௨௮)

வேறு.

ஈசனல் லருளி னாலே யிங்ஙனம் வாசு தேவ
னேசமாம் பயனைப் பெற்று நிகழ்ந்தன னதனா னீரு
மோசகப் பிரதீன் றன்னை மொழிந்தவா றறிந்து கொண்டு
பேசிய வவன்றன் சேவை பிரியரே பேணிச் செய்மின். ()

பரசிவ னிடத்திற் பத்தி பண்ணிடும் பான்மை யேபோற்
குருபர னிடத்தும் பத்தி குறைவறச் செய்ப வர்க்கே
யுரைதரு மருத்த மெல்லா முள்ளவா றுளத்திற் றோன்று
மரியரே யதனா னீரு மமைந்தவா பத்தி செய்மின். (௩௦)

சூதமா முனியிவ் வண்ணஞ் சொல்லிய தனைத்துங் கே ட்டன், கோதமா முனிவ ரெல்லா மோங்கிய வன்பா லன்

ஞேன், பாதவந் தனமே யாதி பணிவிடை யனந்தஞ் செய்து, சீதமா மிதயர் தோராய்ச் செவ்விய சுகமே சேர்ந தார். (ரு௩)

ஐந்தாவது அத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாய மைந்துக்குத் திருவிருத்தம் ௧௬௬.

---

ஆறவது

# ஞானோற்பத்திகாரணை

# முரைக்கு மத்தியாயம்.

ஞானவனுற் பத்திக்குக் காரணத்தை ஞானேச்சை யுள்ளவர்க டள்ளும் வண்ண, மீனமிலா மாதவனே யிந்த வோத்தி லிசைத்திடுவோஞ் சிரத்தையுட னிதனைக் கேளாா, யூனமிலா வெனக்கெதுவுந் துரோகஞ் செய்த லுணர்வுதியா திருப்பதனின் மூல வேது, வீனமிலென் பத்தர்க்கோ ரபரா தத்தை யியற்றுதலு முணர்வுதியா வேது வாமே. (௧)

சிரவணமே முதலான சாதனத்தாற் செவ்வியதாய்ச் சித்திக்கத் தக்க தான, பரமமதா மெனையுணரு ஞானந் தன்னைப் பகையுடனே துடித்தல் பூதி கொண்டே, மருவுதிரி புண்டரவுத் தூளனத்தின் மாச்சரிய மற்றதனை யனுட்டியாமை, யரியவனே ருத்ராக்க மணியாத் தன்மை யாதியெலா மறிவுதியா வேது வாமே. (௨)

மூதவனே யுனக்கெதுவுந் துரோகஞ் செய்தன் மற்று ன்றன் பததரிடை மச்ச ரித்தல், நீதியிலா துன்னுடைய தனம் வாஞ்சித்தல் பேசுமிவை யுணர்வுதியா வேது வாகும், போதமரும் விதிக்கெதுவுந் துரோகஞ் செய்தல் பொருந்து மவன் பத்தரிடை மச்ச ரித்த, லோதுமவன் றனத்தாசை யிவையெல் லாமு முணர்வுதியாக் காரணமென் றுரைக்க லாமே. (ங)

மாதவனே வேதத்தும் வேதாங் கத்து மாச்சரிய மற்ற தனை யோதாத் தன்மை, யோதியநற் சோத்திரியர்க் கபரா தித்த லுணர்வுதியாக் காரணமென் றோத லாகும்,வேதமுண ரங்கத்தும் விவித மான மிருதிபுரா ணங்களினும் பார தாதி, திதிலிதி காசத்துந் துவேசஞ் செய்தல் திகழ்ஞ ஞானுற்பத் திக் கேது வாமே. (ச)

பேசியவே தாங்கமுத லோதி னோரைப் பேணும லவர் களிடை மச்ச ரித்தல், கேசவனே யவர்க்கெதுவும் வாதை செய்தல் கிட்டியவர் தனமுதலை யபக ரித்தல், வாசகமா மறைநெறியோ டொவ்வா தான வாமநெறி பாசுபத நெறி யே யாதி, யாசுறுதந் திரமார்க்கந் தன்னைப் பேணி யனுட்டி த்த லறிவுதியா வேது வாமே. (ரு)

மருளற்ற நல்லோரைப் பொல்லா ரென்னன் மற்றவ ரின் கூட்டுறவு செயாது நிற்ற, றுரிசற்ற வென்னுடைய வன்பர் தம்மைத் துட்டரென லுணர்வுதியா வேது வாகும் புரையுற்றோர் தம்முடனே கூடி நிற்றல் புரையுற்றோ

தமையெதுவும் பாது காத்தல், தெரிவற்ற தீங்கான நடை யைச் சார்தல் தெளிவுதியாக் காரணமாய்ச் செப்ப லாமே.

முருந்தமிகு மாசையுடன் முனிவு லோப மோகமத மாச்சரியம் டம்ப மற்றுந், தருந்ததலா வாலசிய மாதி யாவுந் தகுஞானு னுற்பத்திக் கேது வாகும், பருந்துளதா மறம் பாவம் பரனு மீசன் பரலோக முதலியதிற் சந்தே கித்தல், புகழ்ந்தவற முதலொன்று மிலையென் றெண்ணல் புகழ் ஞானு னுற்பத்திக் கேது வாமே. (எ)

தன்னுடைய வன்னைக்குத் துரோகஞ் செய்கை தன்னு டைய வன்னைதனைக் காத்தி டாமை, தன்னுடைய வன்னை க்குத் தாபஞ் செய்கை தகுஞானு னுற்பத்திக் கேதுவாகுந், தன்னுடைய தந்தைக்குத் துரோகஞ் செய்கை தன்னுடைய தந்தைதனைச் சேவி யாமை, தன்னுடைய தந்தைக்குத் தாபஞ் செய்கை தகுஞானு னுற்பத்திக் கேதுவாமே. (அ)

வாதனையா மழைகாற்று வெயிலான் மிக்கு வருத்தம டைந் தில்லத்தில் வந்தோர் தம்மை, யாதரவாய்க் காவாம லகற்றி வைத்த லறிவுதியாக் காரணமென் றுறைய லாகுஞ், சாதகமாம் வாவிகிணர் தடாக மாதி சலமதனைக் களவாண்ட லவைபே தித்தன், மாதவவவ் வாவிமுத லியவா தித்தன் மாசற்ற வுணர்வுதியா வேது வாமே. (௯)

சோரர்புலி யாதியவாற் பயந்தோர் தம்மைச் சோர்வ றவே யாதரவாய்க் காத்தி டாமை, நாரணனே நல்லோர்க்குப் பயத்தைச் செய்கை நலைவயற்ற வுணர்வுதியா வேது வாகும்

பாரிலுள்ள பசுக்கடமைக் காத்திடாமை பசுக்களுலா வியபூமி தனைக்கெடுக்கை, மேரனுறும் பசுக்கட்கோர் வாதை செய்தை செவ்வியதா முணர்வுதியா வேதுவாமே. (க0)

மருவுசனஞ் செல்கின்ற மார்க்கந் தன்னை மறித்திடுதன் மார்க்கத்திற் கண்ட கத்தை, விரிவுறவே விரித்திடுதன் மற்று மேதும் விரோதித்த லுணர்வுதியா வேதுவாகும், பரவசிய முதலான பிரயோ கத்தைப் பண்ணியிடல் பரர்க்கு மிக விரோத மாக, விரவியகு னியசன்மந் தன்னைச் செய்தல் விமலமதா முணர்வுதியா வேதுவாமே. (கக)

இன்னறருஞ் சொக்கட்டான் முதலாஞ் சூதை யியற்றிடுத லீனமுறும் பாட லாட, றன்னின்மிக மகிழ்வுறுத றீங்காஞ் சொல்லைச் சாற்றியிட லுணர்வுதியா வேதுவாகும், வன்னவற மாச்சிரம வறங்க ளியாவும் வழுவாதோர் தமையெதுவு மவமா னித்தல், பன்னுமவாக் குரித்தான சேவை தன்னைப் பண்ணாமை யுணர்வுதியா வேதுவாமே. (கஉ)

அறிந்தமனை புசிக்கவொணு வுணவை யுண்ண லாசித்த லவ்வுணவை யன்போ டுண்ணல், பொருத்தமிலா வவ்வுணவைப் புசித்தோ ரோடே பொருந்தலுமெய் யுணர்வுதியா வேதுவாகும், விருத்தமுள பரமாதர் தம்மை நோக்க விருப்பமுறல் பரமாத ருடனே கூடக், கருத்துறுதல் பரமாத ருடனே கூடல் களங்கமிலா வுணர்வுதியாக் காரணங்காண். (கங)

மெத்தவுமே தன்மனைவி தனைநோக் காமை மிகவவளை நோக்குவதில் வெறுப்புண் டாகை, சித்தமுமே யவட்கெது

வும் விரோதஞ் செய்கை நிருமலமா முணர்வுதியா வேது வாகும், புத்திரர்மித் திரரில்லம் பூமி பந்து பொருண்முத லாம் விடையத்தி லன்பு செய்கை, புத்தமவா சர்ன்பாதத் தன்பில் லாமை யுணர்வுதியாக் காரணமென் ருேத லாமே.

தேசிகனுக் கனிட்டமதாஞ் செயலைச் செய்த றேசிக னுக் கிட்டத்தைச் செயாது நிற்றல், பரசமிலாத் தேசிகனைச் சேவி யாமை பரஞான ஹற்பத்திக் கேது வாகு, மோசகனு மென்றன்பா லாசான் றன்பான் முக்கியமா மறையின்பான் ஞானத் தின்பா, லாசிரியன் பரம்பரையாம் வமிசத் தின்பா லன்பின்மை யறிவுதியா வேது வாமே. (கரு)

தன்னுடைய வாசானுக் கன்பி னேடே தன்னுடைய தேகத்தை யொப்பி யாம, லன்னியருக் காக்கைதனை யொப் புவித்த லச்சுதனே யறிவுதியா வேது வாகு, மன்னுகுரு நிந்தைதனைக் கேட்டு நிற்றன் மற்றவனே டெதிர்த்துவிவா தத்தைச் செய்த, லுன்னுமவ னுறுகின்ற வாதை கண்டு முபேட்சித்த லுணர்வுதியா வேது வாமே. (கசு)

ஆசிரிய னீசர்க்கு வேறென் றெண்ண லன்னவனுக் காம்பொருளி லுபேட்சை செய்தன், மாசறவே யவன்சொ ன்ன வர்த்தந் தன்னை மறந்திடுத லறிவுதியா வேது வாகு, மாசிரியன் சிறியவனென் றெண்ணும் புந்தி யனனவனோர் மனிதனெனப் பண்ணும் புந்தி, பேசுமவன் சிட்டனல னெ ன்னும்புந்தி பேதமிலா வுணர்வுதியா வேது வாமே, (கஎ)

சத்தியிலார் தமையென்றுங் காத்தி டாமை சத்தியி லார் தமக்கெதுவு மபரா தித்தல், சத்தியிலார் தமையெதுவு

நிநதை செய்தல் சலனமிலா வறிவுதியா வேது வாகு, மர்த் தமிலார் தமையெதுவு நிந்தை செய்த லர்த்தமிலார் தமக் கெதுவு மபராதித்த, லர்த்தமிலார் நாணுவதைக் கண்ட வற்று லறமகிழ்த லறிவுதியா வேது வாமே. (கஅ)

கோதுமிகுங் குருபிகளை நிந்தை செய்தல் கூறுமவர்க் கெதுவேனு மபராதித்தன், மாதவனே யவருடைய குருபங் கண்டு மகிழ்ந்திடுத லுணர்வுதியா வேது வாகு, மீதுமலா னிஷித்தமதாம் பாவ மியாவு மீனமிலா வுணர்வுதியா வேது வாகு, மோதியதற் கெதிர்மறையா யிருப்ப வெல்லா முணர் வுடைய வுற்பத்திக் கேது வாமே. (கக)

ஞானு னுற்பத்திக் கார ணத்தை ஞானகனு னந்தசிவ னவின்ற வாறே, யூனமிலா தன்புடனே மாயோன் கேட்டவ் வுமாபதியை வணங்கிமிகப் பூசை செய்தா, ஞனதனு லறிவு தியா வேது வான வனைத்தையுமே சிவஞான மடைய வேண்டி, யீனமிலா முனிவரரே யிகழ்மி னென்று னெவையு முணர்ந் தோதியிடத் தகுந்த சூதன். (உ0)

வேறு

இவ்வித மோதிய தெல்லாங் கேட்டட னிந்தம காமுனிவ
ாவ்வித ஞானவி ரோதம னைத்தையு மணுகா மற்றள்ளிர
செவ்விய பத்திசி ரத்தைக ளோடுசெ றிந்தவ ராகியவன்
றிவ்விய பாதச ரோருக பூசனை திடமா கச்செய்தார். (உக)

ஆறவத்தியாய முற்றும்

ஆறு வத்தியாயமாறுக்குத் திருவிருத்தம் உகள.

ஏழாவது

# ஞானியின் பணிவிடைக்குப் பலனுரைக்கு மத்தியாயம்.

மாயவனே ஞானிகடஞ் சேவை யாலே மருவுபயன் றனையிந்த வோத்திற் சொல்வா, நீயிதனைச் சிரத்தையுடன் கேளாய் முன்ன நீங்கியவோர் காலத்திற் பாக யஞ்ஞன், சேயவனாய்ச் சசிவர்ணப் பெயர்பெற் றோனாய்ச் செவ்விதிலாப பாவமெலாஞ் செய்கின் றோனாய்த், தூயநடை யற்றோனாய்த் துகளுற் றோனாய்த் தூர்த்தசிகா மணியாயோர் மறையோ னின்றான். (௧)

பன்னுமவன் றமமுடுஞ் சித்த ஞானோன் பரஞானந் தூஷிப்போன் வேத நிந்தை, தன்னையுமே செய்கின்றோ னார்க்கு மென்றுந் தளர்வுதரு வாதனையே செய்யா நின்றோன், றன்னையுமே யெப்பொழுது மிகழா நின்றோ னென்றுமெலாத் தேவரையுந் தூஷிக் கின்றோன், பின்னுமவன் றருமமெலா நிந்திக் கின்றோன் பெரியோருக் கபராதஞ் செய்யா நின்றோன், (௨)

வன்னவற மாச்சிரம வறங்க ளியாவும் வரையறவே யிகழ்ந்தோன்றன் சத்தி மட்டு, மன்னைபிதா வுடன்பிறந்தோர் முதலோர்க் கெல்லா மகிதத்தைச் செய்கின்றோ னவைக் கொன்றோன், பின்னுமவன் செய்நன்றி மறவா நின்றோன் பெரிதுமவ னாஸ்திகனாய்க் கருவஞ் செய்வோ, னன்னியரின்

ருராமுத லுபக ரிப்போ னகமுதலிற் றய்டுவோன் விடங்கொ டுப்போன். (௩)

மருவியவச் சசிவர்ண னீசப் பெண்ணின் பகிணனுமாய் மதுமாம்ச மாதி யுண்போன், வெருளறமா நீரமுடன் மாபா வங்கள் விளைத்திடுவோ னவனிவ்வா றவனி யின்கண், டிரித ருநா ளவனுடைய பிதிர்க்க ளெல்லாந் நிகழ்கின்ற சொர்க்க முத லுலகி னின்றும், பரவசராய் நரகத்தில் வீழ்ந்தா ரன் னோன் பாவத்தை யென்சொல்வோம் பதுமபாபா. (௪)

இன்னவிதஞ் சிலகாலஞ் சென்ற பின்னா ரின்னவன் வெம் பிணிகளினாற் பீடை யுற்றுப், பின்னருமே வெகுவித மாம் பசிசி னாலும் பிடிப்புற்று மகத்தான துயரஞ் சார்ந்தா, னன்னவனத் துயரையெலா மன்று நோக்கி யவனுடைய பிதாவான பாக யஞ்ஞ, னின்னன்மிகுந் திரக்கமுடன் மிக வழுங்கி யினிய வுயிர் போனவன்போற் புவியில் வீழ்ந்தான்.

இந்தவிதம் வெகுபேத விதனத் தோடோ யென்பத்த னாகியவப் பாக யஞ்ஞ, னந்தமிலாச் சசிவர்ணன் றுயரைத் தீர்க்க வாருளரோ வெனவெண்ணி யிருக்கும் போதிற், பந்த முத வியாவையுமே யறிந்த தேவ பத்தனெனு மொருமுனிவ னிவனை நோக்கிப், புந்தியுறு மகத்தான கருணை யோடும் பொருந்தினனா யிவ்வசனம் புகல லுற்றான். (௬)

ஏகசிவ பத்திசெயும் பாக யஞ்ஞா வெழுந்திடுநீ யெழுந்திடுநீ வெருள வேண்டா, சோகமிகு முன்சேயுந் துன்பந் தீர்ந்து சுகம்பெறவோ ருபாயத்தைச் சொல்லக் கேளாய்,

மோகமிலாப் பரமசிவன் சொரூபஞ் சார மூலமதாய்ப் பாவ
னமாய்ச் சீர்மிகுந்த, தாகியகோ பருவதமென் றுரைக்கு
நாம மடைந்துளவோர் சிவத்தான முள்ள தன்றே. (எ)

பதினாறு குரோசமவை நீண்டதாகிப் பதினாறு குரோ
சமள வகன்றதாகு, மதிலாதி சத்தியுமை யான தேவி யப்ப
தியி னுயகனை யாரா தித்து, முதிர்கின்ற பத்தியுடன் றனது
நாம முன்னிட்டுச் சத்தீச னென்ப தாயப், பதிநின்ற வீசர்
க்கு நாம மிட்டாள் பதியதுவுஞ் சத்தீச மென்ன லாமே. ()

அந்தணனே யப்பதியி லயன்முன் னோர்கா லவ்வீசன்
றனையன்போ டாராதித்துத், தொந்தசகச் சிருட்டியெலாஞ்
செய்யுஞ் சத்தி துகளில்லாச் சத்தீச னருளாற் பெற்று,
னிந்திர னுமொருகாலவ் வீசன் றன்னை யினிமையுட னப்ப
தியிற் பூசித் தன்னோன், றந்தவரு டன்னாலே தேவர்க் கெல்
லாந் தலையறவே நாயகனே யாகி நின்றான். (கூ)

பின்னொருகாற் சுக்கிரனும் வியாழன் றானும் பேசியவப்
பதிதனிலவ் வீசன் றன்னைப், பன்னியநற் காலத்திற் பூசித்
தந்தீப் பரமசிவன் கருணையினா லசுரர் தேவ, ரென்னுமிவர்க்
காசிரிய ராயி னைந்தா ரிப்பதியி லிவ்விதமே யனேகர்பூசித்,
தன்னசிவன் கருணையினாற் றங்க டாங்க ளாசித்த பயன்
தனையே யடைந்தா ரன்றே. (க0)

பருவமுதற் புண்ணியகா லத்தி லாங்கே பத்தியுடன்
பரசிவனை யாரா தித்துப, பிரியமுடன் சிவனடியார் தமக்கு
வித்தம் பேணியமற் றெப்பொருளு மளிப்போ ரீச, னருள
தனால் வீடுறுவர் மற்று மாங்கே யவ்வீசன் றனைநோக்கிச்

சிவபத் தக்கே, புரிவுடனே தனமீந்தோர் போகஞ் சார்வர் பூமிதனில் வெற்றியினைப் பொருந்தா நிற்பர். (கக)

சங்கற்ப பூருவமாய் நித்த மாங்கே சத்தீசன் றனைக் கண்டு பிரம வித்தின், பொங்குற்ற வத்தத்தி லெவளவேனும் புரிவுடனே தண்டிலமே முதல விப்போன், மங்கற்ற வீடுறு வன் மற்று மாங்கே மாபாவி யாகினுமே மாணமுற்ற, லங்கு ற்ற சத்தீச னருளி னாலே யகமற்று வீடுறுவ னைய மில்லை. ()

பரவியவிம் மகிமையுறு மத்தா னத்திற் பரமகிர்பா சாக ரனாய் வேதாந் தத்தி, னரியபொரு ளனைத்தையுமே யறிந் தோ னான வானந்த பராயணனென் றொருமா யோகி, திரமு றவே வசிக்கின்று னதலாலே தீவிரமுன் றனயனுட னங்கே சென்றப், பரசிவனைத் தெரிசித்த பின்ன ரந்தப் பரயோகி தனைச்சார்தி பாக யஞ்ஞா. (கஉ)

உன்னுடைய தனயனுட னவனை நோக்கி யோங்கியநற் பத்தியுடன் வணங்கிப் போற்றி, யன்னவனுக் கனுகூல மான சேவை யனைத்தையுமுன் சுதனாலே செய்விப் பாயே, யின்ன லெலா மிவன்றீர்ந்து சுகிப்ப னென்றே யிவ்விதமாக் கருணை யிறைற் றேவ பத்த, னென்னுமுனி யிசைத்ததெலாம் பாக யஞ்ஞ னினிமையுடன் கேட்டுமிக மகிழ்ந்தா னன்றே. (கச)

பின்னரவன் றன்னுடைய தனைய னோடும் பேசியகோ பருவதமென் கின்ற தானீந், தன்னையடைந் தன்புடனே பரு வந் தன்னிற் றயாநிதியாஞ் சத்தீசன் றனையுங் கண்டங், கின் னலற நூற்றெட்டு முறைநன் றாக வினிமையுடன் வலம்வ

ந்து வணங்கிப் போற்றி, யன்னசிவன் கருணையினு லாங் கிரு க்கு மானந்த பராயணனை நோக்கிச் சென்ருன். (௧௫)

சகலமுமே தெரிந்தோனய்ப் பிரம வித்தாய்ச் சாந்தனு மாய்த் தருசீவன் முத்த ஞகி, யகிலசகற் குருவாகித் தீர ஞகி யதிவன்ன வாச்சிரமி யான வந்த, மகிமைமிகுஞ் சிவயோகி தன்னைக் கண்டு மருவியதன் றனயனுடன் பாக யஞ்ஞன், றகைமையதாய்த் தூரத்தி னின்று தானே தாரணியிற் றண் டெனவே மிகப் பணிந்தான். (௧௬)

பத்தியுட னடிக்கடியும் பாக யஞ்ஞன் பணிந்தேத்தி யஞ்சலிபந் தனத்தி னேடும், புத்திரனுஞ் சசிவர்ணன் சரித மெல்லாம் பொருந்தியநல் வினயமுடன் புகன்று மற்று, மத்தமிலா விவன்றுயரை நீக்கிக் காத்த லானந்த பராயண நின் பார மென்ரு, னுத்தமனுஞ் சிவயோகி யவனுங் கேட் டங் கோங்கியநற் கருணையினு லொப்ப லானன். (௧௭)

அச்சுதனே பின்னரவன் கண்டா னந்த வான்மாவி னனு பூதி தன்னுற் பெற்ற, வுச்சமதா மகிழ்வுடனே யனந்த பாவ மொன்றியவச் சசிவர்ணன் றன்னை நோக்கித், துச்சமிலாப் பரவிச்சைப் பலத்தி னலே துகளுற்ற வவனையுமே சீடனுக, வச்சமறக் கருணையினு லொப்பா நின்ரு னவ்விச்சை மகிமை தனை யென்ன சொல்வாம். (௧௮)

அந்திறமா மவனுடைய நோக்கத் தானு மன்னவனை யவனங்கீ கரித்த லானுஞ், சித்திரமாஞ் சசிவன்னன் பாவந் தன்னிற் சிலபாவ நசித்துடனே பிணிக டீர்ந்தா, னித்தமு

மே மற்றுமவன் காட்டம் புல்லு நிருமலநீர் பலமூலஞ் சாக மாதி, பத்தியுடன், குருவுக்குக் கொணர்ந்து தந்து பசுக்களை யும் பரிவுடனே யிரட்சித்தானால். (௧௯)

மருவியவிச் சேவையினால் வெகுபா வங்கண் மாய்ந்தன வச் சசிவன்னன் மற்று மெத்தப், பிரியமுடன் குருவுடைய பாத மாதி பிடித்திடுதே லவனுக்குத் தைலாப் பியங்கம், பரி வுடனே செய்வித்தல் வத்தி ராதி பங்கமறத் தோய்த்திடு தன் முதலாஞ் சேவை, விரிவுறவே செய்ததனுன் மகத்தாய் நின்ற வெகுவிதமாம் பாவங்க டீர்ந்தோ னானன். (௨௰)

உற்றவையு முணர்ந்தோனா யோகி கட்கு ளுயர்ந்தோனா மானந்த பராய ணன்றான், மற்றுமவன் சேவையினான் மகிழ் ந்தோனாகி மாவருளாற் றனொருநாட் புசித்த சேடங், குற் றமறச் சசிவன்னன் றனக்க ளித்தான் கொடுத்ததைநற் பிரி யமுடன் புசித்த தாலே, பற்றியதன் பாவங்கண் மிகுதா பங்கள் பற்றறவே யனைத்தையுமே தவிர்ந்தா னன்றோன்.

இவ்விதமா கியுபின்னர்க் குரவன் றன்னை யிவன் மிகவு மா தரவாய் வணங்கிப் போற்றிச், செவ்வியதாம் பணிவிடையே செய்தான் பின்பு சிறிதுமக மின்றிமனச் சுத்தி பெற்ற, வவ் விதமாஞ் சசிவன்னன் றனைக்கண் டாசா னறவுமருட் சுரங் கவனு யாலோசித்துத், திவ்வியமாம் பூதிகொடே யவன்றே கத்திற் றிகழ்வுறவே பூசியருள் விழியாற் பார்த்தான். (௨௨)

பின்னரவன் வேதாந்த மனைத்தி னானும் பேதமிலா தோதியதா மகண்டார்த் தத்தை,யன்னவனுக் கடைவாக வுப தேசித்தா னன்றவனு மெனத [illegible] வாகப், பன்னு

பொருள் வடிவான வென்னைத் தானுப் பரோட்சமறத் திட மாக வறிந்தோ ணுகித், துன்னியவவ் வேகண்டான்ம ஞானத் தாலே துகளான பவபந்தம் விடுத்தான் றாயோய். (உ௩)

இவனுடைய தந்தையெனும் பாக யஞ்ஞ னிவ்விதமே யானந்த பராய ணன்றன், பவமறுநற் பணிவிடையே யன்பி னேடும் பண்ணியவ னருளியவே தாந்த ஞான, நவையறவே யெனதருளா னன்றுய்ப் பெற்று நவையான பவபந்தம் விடு த்தான் மற்று, மவனுடைய நரகஞ்சேர் பிதிர்க்க ளெல்லா மவ்விச்சை யுரத்தானற் கதியே சென்றுர். (உ௪)

அவனுடைய குலமெல்லாம் புனித மாயிற் றவனியெலா மவனுலே சுத்த மாயிற், றிவனுடைய பரவிச்சைப் பலத்தி னுலே யிவன் முன்னங் கூடியவச் சண்டா ளப்பெண், சுவை மருவுஞ் சொர்க்கத்தைச் செறிந்தா ளின்னேன் சுற்றத்தா ரிட்டத்தா ரெவருஞ் சொர்க்கங், கவலையறச் சென்றுர்கண் ஞானி தம்மின் களங்கமிலாப் பணிவிடையின் பெருமை யென்னே. (உ௫)

வேறு.

பெருமை கூர்ந்து சகற்குரு வாகிய பிரம ஞானியின் சேவை தரும்பலந், தெரியும் வண்ண முனக்கினி யோர் கதை திகழும் பங்கய லோசன செப்புவாம், புரிவு கூர்ந் திவை கேட்டிடு முன்னமோர் போது பாவ மனைத்தும் புரி ந்தவள், சுரத சாதுரி யங்கள் செறிந்தவள் சுபகை யென் ஞெரு தாசி யிருந்தனள். (உ௬)

தொடரு நாயகர் வித்த மனைத்தையுந் தூர்த்தை யாம வள் சிக்கெனக் கைக்கொளப், படருந் தன்னுடைப் பாப பலத்தினாற் பதிக டம்மை யடிக்கடி கொன்றதாற், றடமு டன்வெகு வித்த மடைந்தனள் தனயர் சேவகர் தாய்முத லோடுமே, யிடரி லாது மிருந்த சுகத்தையே யினிமை யாய்ச்சில காலம் புசித்தனள். (உஎ)

பின்ப சாசம னேகம் பிடித்தும்வெம் பிணிகள் மேவி யும் பீடைய டைந்தவ, ளின்ப மின்றிநி ரந்தரந் துன்பமே யெய்தி நித்திரை தானுமி லாமலே, துன்ப மேவிய பந்துக்க ளோடுமா துக்க மாந்தெசை மேவின ளன்னவண், முன்பு செய்த வறத்தின் பலத்தினன் மூதுணர்ந்த வோர் ஞானியுங் கெய்தினள். (உஅ)

பன்னு ஞானியங் கெய்திய போதுதான் பசிமி குந்து பரவச னாகியே, யன்ன தாசியி னில்லம் புகுந்தன னனந்த. சென்ம வறத்தின் பலத்தினாற், றன்ன தில்லம் புகும்பர ஞானியைத் தாசி யன்னவ னோக்கவு மன்புடன், பூன்னு மன்னவன் பாதச ரோருக வந்த னங்க ளனந்தம் புரிந்தனள்.

அரிய மாதவன் சீதள வாரியா லந்த ஞானியின் பாதச ரோருகம், பரிவ தாக விளக்கி மகிழ்ந்தவன் பாத தோயத் தைப் பானமுஞ் செய்தனள்,சரண தோயத்தின் பான பலத் தினாற் சகல ரோகமுஞ் சார்ந்த பசாசமு, மொருக ணத்தி லனைத்து மொழிந்துட னுற்ற துன்ப மனைத்தும் விடுத்த னள். (௩0)

பின்ன ரன்னவண மெத்த வியப்புடன் பேசு ஞானி பசித்து வருந்துத, லுன்னி யொல்லையிற் றிவ்விய போசன மூட்டி வைத்தனண் மிக்கநற் பத்தியாற், றன்னு சந்தன மாலைகள் வெள்ளிலை தூய வத்திர மாதியி னுன்மிக, வனன வன்றனை யர்ச்சனை செய்தபி னுத ரித்தொரு வார்த்தை யறைந்தனள். (௩௧)

நாத நின்னுடை சத்திக ளென்சொல்வே னுயி னுங் கடை யாகிய நானுமே,யோது நின்னற் றரிசன மாத்திர முற்ற தான்மிகு நோய்கள் பசாசுக, ளேதும் போயதி நின் மல தேகியா யெழின்மி குந்து விளங்குவ ளாகினே, னுதலா லெனைத் துஞ்சும் வரைக்குநீ யனுப வித்தருள் செய்திட வேண்டுமால். (௩௨)

அன்றியு மென தாவி பொருட்களு மாக்கையு முனக் கற்பித மாதலா, னன்றெ னேடு பொருந்தி வருஞ்சுக நல்கி யென்றனை யாளுதி நாதனே, யென்று வேண்டிய தாசியை நோக்கிய வின்ன ஞானி பிராரத்த கன்மமே, சென்று நின் றவ ளுயவள் வேண்டலைச் செவ்வி தென்று பரிந்துட னுப் பினுன். (௩௩)

மற்று மன்னவண் மெத்தவும் பத்தியான் மாசி லாக் கையி னுற்றன மாதியான், முற்று ஞானியி னர்ச்சனை யாண்டுகண் மூன்று மட்டும் விடாம லியற்றினள், பெற்ற ஞானியுயி னிவ்விதச் சேவையாற் பின்ன வள்பிர மான்மசொ ரூபமே, யுற்று ணர்ந்திடு ஞானம டைந்ததா லூன மாம்பவ பந்தம் விடுத்தனள். (௩௪)

அன்ன தாசியின் புத்ர பௌத்திர ராதி யாகிய பந்து க்கண் மித்திரர், துன்னு சேவகர் தாயிவ ரியாவருந் தூய சொர்க்கப தத்தை யடைந்தனர், பின்னு ஞானியின் சேவை யினுறுபலர் பிரம ஞானம் பரோட்ச மிலாமலே, மன்னி யப் பர ஞானப லத்தினுன் மாத வாபவ பந்தம் விடுத்தனர். ()

எங்கு நித்தமு ஞானி யிருப்பனோ வென்று மியாமவி டத்தி லிருப்பமாற், பங்க மில்பர ஞானி யிருப்பிடம் பாரி னில்வெகு தூரம தாயினுந், துங்க ஞானம் விரும்பினர் யா வருந் துனைவி லவ்விடஞ் சென்றவன் சேவையைச், சங்கை யின்றி யியற்றிட வேண்டுமியாஞ் சந்தத மவ னுக விருப்ப தால். (கூசு)

எங்கு தத்துவ நிட்ட னரைக்கண மேனும் பங்கய நாப விருப்பனோ, வங்கு தீர்த்த மனைத்து மிருந்திடு மைய மே தொன்று மில்லை யறைந்ததிற், பங்க மில்பர ஞானிக்க னிட் டமார் பண்ணுவ னறி யாமையி னுலுமே, யிங்கெ னக்கவ னென்று மனிட்டமே யியற்றி னேனிதி லையமு மில்லையே.

என்று மியாவரும் பாகிய ரர்கினே ரேக ஞானிகண் மாத்திர மாதவா,வென்று மென்னுடை யான்மசொ ரூபமே யீதி னுற்பர ஞானிக ளென்றுமே, யென்ற னக்குமற் றென் னொரு தேவிக்கு மினிய ராதலி னுலிவர் தங்களை, யென்ற னக்கய லாக விசைப்பவ ரீன மோக மிருந்தவ ருண்மையே.

ஆத லாலென தான்மசொரூபமே யான ஞானிக டம் மை யெவர்களும், போதம் வேண்டுவ ராகின் முயன்றுமே

போந்து பூசனை செய்திட வேண்டுமால், வேதம், வேதாந்தி னந்தம னைத்தினும் விகித மாம்பொரு ளுணமை யனைத் தையு, மாதவாவுனக் கிங்ஙன டக்கமாய் மன்னு முன்னு ளப் பத்தியி னுற்சொனேன். (௩௯)

இங்குச் சொல்லிய விப்பொரு ளுக்சய லியாவுஞ் சா த்ர விருத்தம தாதலாற், றுங்க ஞானம் விரும்பின புத்தி மான் றாய சாத்திர மியாவையு மோதிமுன், பங்க மில்குரு வாலத னுட்பொருள் பாங்க தாக வுணர்ந்தபின் மாதவா, தங்கு தானியம் பெற்றவன் வைக்கலைத் தள்ளு மாறவை யாவையுந் தள்ளுக. (௪௦)

ஏக மாய்ப்புவி மண்டல மியாவுமே யெங்கும் வாரி நிர ம்பி யிருந்திடிற், றுக மேவின ருக்கொரு கூபநீர் தன்னி னுற்பய னின்றிய தன்மைபோ, லேக பூரண நித்திய வத் துவே யென்று நாமெனக் கண்டவ ருக்குமே, பாக மார்பல கன்மத்தி னுலவை பன்னும் வேததி னுலு மிலைபயன். ()

வித்தை யிலதி காரமி லாருக்கே வேதங் கன்மம னைத் தும் விதித்திடும், வித்தை யிலதி காரமு ளோருக்கவ் வேதங் கன்ம மனைத்துந் தவிர்த்துடன், வித்தை சாதக மானவி ரரமே விமல மாக விதித்திடு மாதலால், வித்தை வேண்டி னர் நன்று விசாரித்தே விரவு பந்தம் விடுத்திட வேண்டு மால். (௪௨)

அரிய மானிட சன்மம டைந்ததி லார ணர்த்தந் தெரி ந்திட வேதுவாய், மருவு மந்தணத் தன்மையும் பெற்றவன்

மாசி லாமறை யந்தவி சாரத்தாற், பரம பூரண சத்திய சிற்சுக பரம நானென் றிறிந்திட வில்லையோ, நரனவ னெந்தக் காலுத்தின் முத்தியை நண்ணிப் பந்தம் விடுத்திடு வன்சொ லாய். (சுஙு)

நின்ற ஞானுத்தி ஞற்கதி யன்றியி னீண்ட கன்மத்தி ஞற்கதி யில்லையா, மென்று மானிட ரிங்கொரு சர்மம்போ லெங்கு மான விசும்பைச் சுருட்டுவ, ரன்று சதத்திய சிற்சுக பூரண மான வென்னை யறிந்திடு ஞானமே, யின்றி யிச்சில கன்மத்தி ஞலுமே யீன மாம்பவத் துன்பம் விடுக்கலாம். ()

மாத வாவெகு சன்ம மியற்றிய மாவ றங்கணி றைந்தத ஞன்மனக், கோதி லாவதி காரிக ளுக்குநங் குற்ற மில்லீரு ளாற்றிட மாகவே, ஞாது ராதியி லாமல கண்டமா ஞான மிங்கு சனித்திடு மாதலா, லோது கன்ம முணர்வின் றுவா ரமா யூன.மில்பர முத்தியி னேறுவாம். (சுடு)

எந்த வாக்கையின் ஞானம் பரோட்சமே யின்றி நற்றிட மாக வுதித்திடு, மந்த வாக்கை நசித்திடு மட்டுமே யமர்ப வம்விவ காரத்திற் றேன்றிடுங், தொந்த மாம்பவ முண்மையின் முன்னமே தோற்ற வேயிலே யெங்கணு மாதலால், பந்த வாக்கைந சித்தபி னெவ்விதம் பாத கப்பவந் தோற்றிடு நீசொலாய். (சுகூ)

ஆத லாற்பர முத்தி யளிப்பதா மமல சீவ பரைக்கிய ஞானமே, நீதி யாமரு ளாற்றிட மாகவே நிகழ்வு றுமுடிவாகிய வாக்கையிற், போத மேவிய வாக்கை விழுந்தபின்

பொய்ய தாம்பவ மீண்டொரு போதுமே, பேத மாயெவ்
விடத்திலுந் தோன்றிடா பின்னை நாயக் பேசிய துண்மையே.

**வேறு.**

அருள்வடிவா யகிலர்க்கு மிட்டந் தன்னை யளிப்பவனு
யம்பிகையின் பாக னுகித், திரிநயனந் தரிப்பவனுய்ப் பவபா
சத்தைத் தீர்ப்பவனு யீசர்க்கு மீச னுன், சுருதிமயப் பர
மேச னிந்த வாறு சுருதியுடைப் பொருளையெலாஞ் சுருக்க
மாகப், பிரியமுட னுபதேசித் தப்பா லன்னேன் பிரமர்களை
மோனத்தைச் சார்ந்தா னுங்கே. (சஅ)

அச்சுதனு மவ்விதமா யறையப் பட்ட வமலமதாம்
வேதார்த்த மனைத்துங் கேட்டுத், துச்சமிலாப் பத்தியுடன்
சுகத்துக் கெல்லாந் தொடரிடமாம் பரசிவனை வணங்கி யே
த்தி, யுச்சமதாம் பரமசிவன் பாதப் போதை யுபயகரந் தன்
னுலு முடியிற் சூட்டிச், சச்சிதுருச் சிவனருளாற் றிடஞா
னத்தைச் சார்ந்தவனுய்ச் சம்சார மியாவுந் தீர்ந்தான். (சக)

பரவியிடுந் தேவதைக ளனைவ ராலும் பத்தியுடன் சேவி
க்கப் பட்டோ னுன,வரிய்சிவ னுனந்த லகிரி கூர்ந்தவ் வச்சு
தன்முன் னுனந்த நடன மாடி, யருளியபின் னெல்லோர்க்கு
மானந் தத்தை யளிப்பவனு யரியுடனே பூலோ கத்தின்,
மருவுசிதம் பரமென்னும் புரத்தில் வந்து மகிழ்வுடனே சபா
திபனுய் வீற்றி ருந்தான். (ருo)

அங்குசபா திபனுக விளங்கி யார்க்கு மானந்த மளித்தி
டவே கருணை கூர்ந்து, துங்கவுமா தேவியுடன் சார்ந்தோ

ஞகித் துகளறவே யானந்த நடனஞ் செய்யுஞ், சங்கரனைக் கணங்களெலா மகிழ்ந்து நோக்கிச் சாலவுமே மலர்மாரி பொழிந்தன் போடும், பங்கமற வனவரதம் பூசை செய்தார் பரம மகா முனிவரரே யென்றான் சூதன். (நக)

மெத்தவுமே சருவஞ்ஞ ஞகி யென்று மிகுகருணை நிதியான வந்தச் சூத, னித்திறமே கருணையினு லிசைத்த வார்த்தை யாவையுமிம் மாமுனிவர் கேட்டு மிக்க, பத்தியுட னவனுடைய பாதப் போதைப் பணிந்தறவு மகிழ்வுடனே யொருமைப் பட்டு, நித்தமுமே யவனுடைய சேவை தன்னை நியமமுட னடைவாகச் செய்தா ரன்றே. (நஉ)

ஏழாவதத்தியாயம் முற்றும்.

ஆக வத்தியாய மேழுக்குத் திருவிருத்தம் உசுகூ.

---

எட்டாவது

# நடேசன் பிரமாதி தேவதைகட்குச் சொரூபஞானமருளிய வத்தியாயம்.

அகிலமுநன் னறிந்தவனே கருணை மூர்த்தி யாகியசற் குருபரனே யறைந்த வண்ண, மகிமைமிகும் பரசிவனுன் மாயோன் ஞான மருவியபின் செய்தவகை யருள்வா யென்றே, புகலுமகா முனிவர்க்குச் சூதன் சொல்வான் புனிதசிதம் பரமுற்ற பின்ன ரன்னேன், றகைமைமிகு மாதேவன் றன்னைப் போற்றிச் சாற்றரிய துதிகளினுன் மிகத் துதித்தான். (க)

மற்றுமவன் மாதேவ னனுஞ்ஞை பெற்று மகிழ்வுடனே மாகருடன் மீதி லேறிச்,சுற்றிவருந் தேவர்களாற் றுதிக்கப் பட்டுச் சுந்தரமாம் வைகுந்தந் தன்னிற் சென்றான், மற்ற விடந் தன்னிலயன் முதலாந் தேவர் மாதவனை யன்புடனே வணங்கி யேத்திக், குற்றமிலாச் சிவனருளக் கேட்ட வெல் லாங் குறுக்கியெமக் கருளெனவே வினவ லுற்றார். (௨)

அரியமரர்க் கோதியதை யறையக் கேண்மி னயன்முத லாந் தேவர்களே யும்மாற் கேட்ட,பொருளெல்லாச் சீவர்க்கு மிதமா னாலும் பொருளதனை யாமின்று புகல வொண்ணா, மருவுசுராட் டையமனக் கமலத் தூடே மன்னுசிதம் பர மென்னும் பதியிற் சென்று, புரிவுடனே யங்குசபா திபனைக் கண்டு பொருளிதனைக் கேட்பீரேற் புகல்வ னன்னோன். (௩)

தில்லைவனப் பதிமகிமை யென்னே யென்னே தினந் தோறு மல்லதொரு பட்சந் தோறு,மல்லதொரு மதிதோறு மயனந் தோறு மமரர்களே யல்லதொரு வருடந் தோறு, மில்லதுடல் விழுமளவி லொருக்கா லேனு மினிதடைந்து சபாதிபனை யன்பாய்க் கண்டோர்க், கொல்லையிலப் பதிதொ ல்லைப் பவபந் தத்தை யொழித்துடனே பரமுத்தி தனையே நல்கும். (௪)

பின்னுமஃ தொல்லையிலே பாவ மெல்லாம் பேதிக்கும் போகத்தை யிச்சிப் போர்க்கு,முன்னியவப் போகத்தை யளி க்கு முத்தி யுவந்தோர்க்கு முயர்முத்தி யுதவா நிற்கும், பன்னிய விம் மகத்தான தானஞ் சென்று பரவியநற் பத்தி

யுடன் றவம் புரிந்து, பின்னமிலாச் சத்தியசிற் சுகமெய் யாகப் பிறங்குசபா நாயகனைப் பூசை செய்மின். (௫)

வரமதுவாஞ் சிவகங்கா தீர்த்தத் தாடி வாஞ்சித்த சித்தி யெலா மளிப்ப தான, பெருமையுறும் பஞ்சமகா வக்க ரத்தைப் பிரணவமோ டொருநூறு யிரமாவிர்த்தி, பரிவுடனே செபித்தந்த நடேசன் றன்னைப் பரவியவப் பஞ்சமகா வக்க ரத்தாற், றிரமுறவே பூசித்தா லுங்கட் காங்கே திகழுமகா தேவனருள் செய்வா னன்றே. (௬)

ஆதியிலா வம்பிகையி னாத னாகி யானந்த நடனமதிற் சதுர னாகிப், பூதிகொடே யங்கமெலாம் பூண்டோ னாகிப் பூத னுமாய்க் கங்கைதிகழ் சடையிற் றோன்றும், பாதிமதிச் சேக ரனாய்க் காள கண்டம் பரிப்பவனாய்த் திரிநயனந் தரிப்போ னாகிச், சீதளமா முகமலராற் சிறந்தோ னாகிச் சிறுமுறுவல் செறிந்தவனாய்த் திகழ்வ னன்னோன். (௭)

வேதமய வெண்ணூலைத் தரிப்போ னாகி வெகுவிதநா காபரணம் பூண்டோ னாகிச், சாதகமா நான்குபுயஞ் சார்ந் தோ னாகிச் சரப்பளிக ளாரங்கள் கேயூ ரங்கள், சோதிமிகுங் கடகங்கண் மகுட மாதி சுந்தரவா பரணத்தாற் சொலிப்போ னாகிக், நோதிலதா மதியம்போற் கோவின் பால்போற் குரு ந்தமலர் போலுமிகத் திகழ்வ னன்னோன். (௮)

விகலமிலாச் சீருடனே விளங்கு வோனாய் வியாக்கிரசர் மாம்பரனாய்ப் பரேசனாகிப், பகவனுமாய்ப் பவித்திரபா ணியு மேயாகிப் பரவியமுப் புண்டரமே தரிப்போ னாகி,யகிலசெகன்

னுயகனு வனந்த சத்தி யடைந்தவனு வானந்த கனமேயாகிச், சகலவிலக் கணமோடுஞ் சார்ந்தோ னாகிச் சகலவலங் கார மொடுந் திகழ்வ னன்னோன். (கூ)

கரமொன்று லன்பர்கடம் பவத்தின் பீதி கடிதினிலே தவிர்த்தபய மளிப்போ னாகிக், கரமொன்று,லன்பர்க்கே வர ங்க டம்மைக் கணத்திலளித் தன்னவரைக் காப்போ னாகிக், கரமொன்றுற் றரித்துளநற் றமரு கத்தின் கஸங்கமறுந் தொனிதன்னை முழக்குவோனாய்க், கரமொன்றுற் சொலிக்கி ன்ற வன்னி தன்னைக் கலக்கமறத் தரித்தவனாய்த் திகழ்வ னன்னோன். (கo)

அருளதனு லதிகோர வான்மாஞ் ஞான மாகியவெம் முயலகனை யழுத்துவோனாய்ச்,சொருபமாதா மானந்தவனுப வத்தைச் சுயமாக வடைந்ததனை நழுவா தோனு, யுரைமன முங் கோசரியாச் சொருப னேனு மூனமிலா வன்பர்தமை யாள வேண்டி, யரியதிரு வுருக்கொண்டே யெழுந்த வந்த வானந்த நடேசனைநீர் சரணாய்ச் சார்மின். (கக)

நடராசன் கருணையினு லுங்கட்கெல்லா நவையற்ற ஞானத்தை யருள்வா னென்றே, திடமாக வச்சுதனே திய தைக் கேட்டுத் தேவரெலாந் தில்லைவனப் பதியிற் சென்று, ருடனுர்க்கு நாயகனு யகிலான் மாவா யுமாபதியா யானந்த நடனஞ் செய்யும், வடிவான சபாதிபனல் லருளை வேண்டி வருந்திழிக வரிதான தவம் புரிந்தனர். (கஉ)

தீதறவே சிவகங்கா தீர்த்தத் தாடித் திகழ்பூதி ருத்ராக் கந் தரித்துத் தேவ, ராதரவாய்த் தவந்தானம் விரத மாதியகி

லர்க்கு மிதத்தினையே வேண்டிச் செய்தார், வேதமுத லெவ ற்றினுமே சார மாகி விளம்பியநற் பஞ்சமகா வக்க ரத்தைப், பேதமற வொருநூறு பிரமா விர்த்தி பிரணவமோ டவர் நித்தஞ் செபித்தா ராங்கே. (கங)

அகிலசகத் துருவாகி யமல ஞகி யம்பிகையி னுயகனுய்ப் போக மோட்சஞ், சகலமுமே யளிப்பவனு யனந்த சத்தி சார் ந்தவனுய்ச் சகலர்க்கு மீச ஞகி, நிகரிலதாய் நித்தநிரஞ் சன மாய் மேலாய் நின்றசொரூ பானந்த வனுப வத்தாற்,றகுநட னம் புரிகின்ற பரனை நோக்கித் தண்டெனவே யன்புடனே மிகப் பணிந்தார். (கச)

வேதியரே விதிமகவான் முதலாந் தேவர் வெகுவிதமாம் பசுக்கட்கும் பதியே யாகிச், சூதிலதா மனமொன்று லடை யத் தக்க சொரூபனுமாய்த் தேவர்க்குந் தேவனுகி,யாதிவியா திகளெல்லாம் மழித்தா னந்த மளிப்பவனுஞ் சபாதிபனை மிக ப்பூசித்து, வேதமுதல் விசித்திரமாந் துதிகளாலே வெகுவி தமா யன்புடனே வழுத்த லுற்றார். (கரு)

வேறு

பரிந்துபோற்றி யர்ச்சனை புரிந்ததேவர் தங்களைப் பரே சனுஞ் சபாதிபன் கடாட்சதிட்டி யானுறப், பொருந்தவே நிரந்தரம் பரிந்துபார்த்த பார்வையாற் புகன்றதேவ ரன்ன வர் மனத்தின் சுத்தி மேவினர், பிரிந்திடாத வம்பிகா சமேத னை சங்கரன் பினும்பிறங்கு தேவருக் கருள்கிடைக்க வேண் டியே, விரிந்தவேத சரத்திர மனைத்தினும் விசேடமாய் விளம்பலுற்ற தாண்டவந் தனைப்புரிந்து காட்டினன். (கசு)

மகிழ்ந்துதேவர் முன்பதாய் மகாநுபாவ ஞகிய ஃகேசஞ லியற்றிய மகத்ததான தாண்டவங், தகுந்தஞானி கண்மனங் தனிற்றெறிங் திடத்தகுங் தளர்ச்சியுற்ற முத்தியை யளித்தி டத் தகுந்ததா. மிகுந்த லோக ரட்சணம் புரிந்திடச் சமர்த்த மா மிதம்பெருத மாட்சிமை பொருந்துகின்ற வின்னதைப், புகழ்ந்துதேவ ரியாவரு நிரந்தரித்த வன்புடன் பொருந்தி நின்று கண்டனர் மகாசுகஞ் செறிந்தனர். (கள)

விரிஞ்சஞதி தேவர்கள் விசுத்தமான தாண்டவம் விள ங்குகின்ற தன்மையை விசேடமாக நோக்கவு, நிரஞ்சனச் சுபாவமாய் நிரந்தரித்த வின்பமே நிரம்பிநின்று சேட்டைக ளனைத்துமே தவிர்த்துடன், புரஞ்சலித் திடாதுதஞ் சுதந்த ரம் விடுத்தனர் புகன்றவிம் மகாசுகம் புகுந்தபின்ன ரன்ன வர், பரஞ்சகங்க ளென்னுமோர் பகுப்பிலா நடேசனற் பதார விந்த மீதினிற் பணிந்துமே துதித்தனர். (கஅ)

சிரத்திலஞ் சலித்ததங் கரத்தராகி யன்னவர் சிறந்தவி ன்ப பாஷ்பமும் விதிர்த்த ரோமராசியுங், தரித்துநன் மனத் தராய் வணக்கமோடு கூடியே தயங்குதிவ்ய மூர்த்தியா யனை த்துமே தெரிந்தவை, கருத்தினுட் டரிப்பஞ யெவர்க்குமீச ஞகியே களங்கமி லிலக்கண மனைத்துமேவி நிற்பஞப், பரித் திடுஞ் சுபாவையா முமைக்குநாத ஞகிய பரேசஞ நடேச னைக் குறித்திவை விஞவிஞர். (கசு)

இடம்பொருந்து மிப்பவத் துயர்களைந்து வைப்பதா யிலங்குமுத்தி யேதுவாூ யெவர்க்கு மிட்டமாகிய, திடம்பொ

ருந்து தேவதவீ றின்சத்தநல்ல ஞானமே திருத்தமாக வெங் களுக் குரைத்தருள்க வென்னவே, தடம்பொருந்து தேவரன் புடன்வினவ லோடுமே, தயாளுவா யெவர்க்குமே குருத்து வம் பொருந்திய, நடம்பொருந்து சிற்பரா நடேசனு மகிழ்ந் துளே நலம்பொருந்து ஞானமே நவின்றிடத் தொடங்கி ஞன். (உ0)

## வேறு.

சுரவரரே யதிகுய்ய மான ஞானஞ் சொல்லிடுவா மூங் கட்குச் சிரத்தையோடு, மொருமையொடு மிவைகேண்மி ஞன்மா வென்று முள்ளதுவாஞ் சகலவதிட் டான மாகும், புரணமதா மான்மவதிட் டானம்வேறு பொருந்தியிடா தோ ருபோது மற்று மான்மாத், தெரிவுருவாய்ச் சுயமாக விளங்கு மற்றுந் திடமான வானந்த வடிவ மாகும். (உக)

பூரணமை தன்னியமா மவ்வான் மாவே புரையற்ற பிர த்திய கான்மாவா வென்று, மாரியரே யாதலினுற் சத்தாய்ச் சித்தா யானந்த கனமாகி யான்மா வாகிப், பூரணமா யோதி யவிச் சொருப மோர்ந்து புகலுமசத் தசித்தசுக மனுன்மாச் சின்னங், தீரவிவை யனைத்தையுமே யுணர்வாற் றள்ளித் திடமாக வகண்டத்தைத் தெளியவேண்டும். (உஉ)

ஏகரச வான்மாவிற் சகஜீ வாதி யெவ்விதமா யிலங்கு மெனிற் சுரரே கேண்மின், மோகமிகு மாயையெனுஞ் சக ஜீவாதி மூலமதா யொருசத்தி யான்மா வுக்குண், டாகை யினு லவிசார தெசையி லியாவு மம்மாயா கற்பிதமாத் தோ

ன்றுமேனு, மூகமிகும் விசாரணையா லுணர்வுண் டாகி லோ
தவொணு மாயையுட னொழிந்து போமே.  (உ௩)

உரைசெயுமிம் மாயைசதா மித்தை யேனு முணர்வுறியா
தாகிலொருக் காலு நீங்காச், சுரவரரே யிம்மாயை நீங்காதா
கிற் சொன்னசக சீவாதி தாலு நீங்கா, மருவியவிம் மாயை
மகாப் பிரள யத்தின் மாய்வதனுன் மற்றிந்தச் சகசீ வாதி,
வருவதுதா னெவ்விதமா மென்று சங்கை வந்திடுமே லத
ற்குரையு முரைப்பக் கேண்மின்.  (உ௪)

மூலமதா மாயையிவை பிரள யத்தின் முழுவதுமே
நசிக்கவிலை பின்னே னென்றான், ஞாலமெலாந் தன்னிடையே
யடக்கிக் கொண்டு ஞானகன வான்மாவி லபேத மாகத்,தூல
மற வுள்ளதுவா மதனு லிந்தத் துவிதசக வாதனைக ளனைத்து
மக்காற், சாலவுமே சகலவதிட் டான மான சத்தியவான
மாவின்கண் சார்ந்து நிற்கும்.  (உ௫)

சுரவரரே பக்குவகன் மங்க டம்மின் சுபாவமதால் வாத
னைகள் சலிக்குங் காலை, மருவியவோர் விகாரமிலாப் பரமான்
மாவு மாயைமுதல் விகாரிடன் புணர்வி னாலே, விரவியவா
தனைகடமின் சலனம் பற்றி விகாரியெனக் காலத்தின் பரிபா
கத்தை, மருவியெலா மாக்குவமென் றெண்ணி முன்போன்
மற்றுமயன் முதலியதாஞ் சகம் படைப்பன்.  (உ௬)

திரிகுணமா மாயைக்கு மப்பா லாகத் திகழ்கின்ற பர
மான்மா வொருவன் றனே, யுரவியசத் துவகுணமே மேலா
மாயா வுபாதியினை யடைந்தீச னுகிச்சீவ, கருமங்கட் கனுகு

ணமாய்ச் சிருட்டிப்போனுய்க் கருதுமிரா சதமேலா மாயோ பாதி, மருவியிடுஞ் சீவரையுந் தமசே மேலா மாயைமயச் சகத்தினையுஞ் சிருட்டி செய்வான். (உஎ)

பன்னியவர் லீலையினுற் படைக்கு மான்மாப் படைத்த தனிற் பிரவேசஞ் செய்தங் கங்கே, பின்னமிலாத் தாதான் மிய வபிமா னத்தைப் பெற்றதனுன் ஞாதுருஞே யாதி ரூப, மன்னியதாய் மலின மதாய்க் கனவு போன்று மகத்தாகி யனுதியுமாஞ் சம்சா ரத்திற், றுன்னிவினைக் கொரத்தடடி நானு யோனி தொடர்ந்தின்ப துன்பங்கண் முதலாற் சோர்வன்.

இன்னவிதம் வெறும்பொய்யா மாயை யாலே யின்னன்மிகுஞ் சீவத்வ மிசைந்த வான்மா, முன்னமுறும் வெகு சன்ம வறங்க ளாலே மொழிந்த துணர் நரனுகப் புவியி னுண்டா யென்னுடைநற் கருணையினுல் வேதந் தன்னி லிசைத்தவினை யியற்றிமனச் சுத்தி பெற்றுத், துன்னியவிச் சகமெல்லா மசார மித்தை துயர்தருமென் றுசாவிமிக விரத்த னுவன். (உகூ)

பின்னையுநற் சமமாதி குணங்கள் பெற்றுப் பிரிவில்லாப் பரமுத்தி தனையே வேண்டி, யன்னையெனச் சுருதியினு லழிவிப் பித்த வகண்டான்ம ஞானமெனு மோட்சோ பாயம், பன்னியவென் னருளாலே நன்றுய்ப் பெற்றுப் பரமான்மா மாத்திரமாய் நிற்பதான, வன்னியமில் பரமுத்தி தன்னை யான்மா வடைந்திடுவ னமரர்களே யுறுதி யீதே. (௩0)

ஓதியவே தாந்தமகா வாக்கி யத்தா னுரைத்தவகண் டார்த்தத்தைச் சிரவ ஞாதி, சாதனையா லைடவாக விசாரஞ் செய்து சார்ந்தவகண் டாகார ஞான மொன்றாற், பேதமி லாப் பரமுத்தி கிடைப்ப தன்றிப் பின்னொன் றாற் பரமுத்தி கிடையா தென்று, மோதியவிஞ் ஞானத்துக் கனிய மெல்லா முயர்ஞான முதி பதனி லேது வாகும். (௯க)

நல்லவிவே கஞ்செறிபு மதிசா ரிக்கே நவின்றசம தம மாதி யனைத்து மிங்கே, யெல்லையிலாப் பரவித்தைக் கேது வாகு மிலகுவிவே கமிலாதோர் விவேக முள்ளோ, ரெல்லா ர்க்குங் காசிமுதற் சுத்த மான வென்னுடைய தானத்தின் மரணஞ் சாரல், சொல்லியவா மரணத்தைச் சார்ந்து பின்ன ர்ச் சுத்தமதாம் பரவித்தைக் கேது வாமே. (௯உ)

பலவிதமந் திரங்கட்குட் சீர்மி குந்த பஞ்சமகா வக்கர மே யுயர்ந்த தாகும், பலவிதவா கமமுதலா மார்க்கங் கட்குட் பயிலுமறை மார்க்கந்தா னுயர்ந்த தாகும், பலவிதமாய்ப் பற்றியிடத் தக்க தான பலன்கட்குட் பரமுத்தி யுயர்ந்த தாகும், பலவிதமா யிருக்கின்ற தேவர்க் குள்ளே பரசிவனு நானென்று முயர்ந்தோ னேவன். (௯௯)

இப்படியே பலவிதமாந் தானங்கட்கு ளென்னுடைய தானங்கண் முக்கி யங்கள், செப்பியவென் றானங்கட் குள் ளுங்காசி சீர்பெருகுங் காளத்தி சிதம்ப ரந்தா, னப்படியே விருத்தகிரி திருவா ரூரு மமலமதாம் வேதவன மாதி யான, விப்பதிக ளுயர்ந்தனவா மிவைகட் குள்ளு மிலங்கியிடுங் காசி மிக வுயர்ந்த தாமே. (௯௪)

இத்திறமே சிதம்பரமு மிகமே லாகு மெமக்குமிகப் பிரியமதாம் விரைவி லீது, புத்தியுடன் முத்தியுமே யெவர்க்கு நல்கும் புனிதமுறும் பத்தியினாற் பொருந்த லாகு முத்தமரே யிவ்வண்ண ஞானோ பாய முன்னதமா ஞானமுநா முங்கட் கெல்லாஞ், சுத்தமுறும் புத்தியினா லறியும் வண்ணஞ் சுருக்கமதாய்க் கருணையுட னுபதே சித்தோம். (ஙரு)

ஆதலினா லனைத்துமுணர் முனிவ ராலு மமரர்களே யும்மாலு நரர்க ளாலும், பேதமிலா முத்தியினைப் பெறுவ தற்கே பேணியநம் பத்தியுடன் மிகமே லாக, வோதியவிச் சிதம்பரமாம் பதியிற் றானே யுறுதியுடன் வசித்திடவே தகுமிவ் வாறு நீதிலதாஞ் சுருதியுமே செப்பு மென்று சிறந்தசபா நாயகனாங் கருளிச் செய்தான். (ஙசா)

வேதியரே வேதாந்த வேத்ய னாகி வெகுவிதமாம் பசுபாசம் விலக்கு வோனாய்ச், சாதமுறுஞ் சகலசகன் னாதனாகிச் சந்ததமு மனைத்துக்குஞ் சாட்சி யாகிப், பேதமிலா வம்பிகையின் பாக னாகிப் பிறங்குசபா திபனை தேவ தேவ, னோதியவிஞ் ஞானத்தைத் தேவ ரெல்லா மோங்கியநற் பத்தியுட னுவந்து கேட்டார். (ஙஎ)

இவ்விதமா யகிலர்க்கு மீச னாக விலங்கியசிற் சபாபதியினிடத்தி னின்று, மவ்விதியே முதலான தேவ ரெல்லா மகண்டமதாம் பரமுத்தி யளிப்ப தாகத், திவ்வியமா மறைமுடிவாற் செப்பலுற்ற திகழ்பிரம விஞ்ஞானந் தன்னைக் கேட்டுச், செவ்வியதா மனதுடனே பத்தி கூர்ந்து தயாநிதியாம் பரசிவனை மிகப் பணிந்தார். (ஙஅ)

பத்தியினாற் பரவசராய்ப் பணிந் தெழுந்து பரமானு வான ந்த லகிரி கூர்ந்து, வித்தரமாம் லௌகிகநற் றுதியி னாலும் வேதத்தில் விளம்பியநற் றுதியி னாலுஞ், சத்தியசிற் சுகக னமா யகண்ட மான சபாதிபனை வெகுவிதமாய்த் துதித்துப் பின்னர்ச், சுத்தமதாம் பஞ்சமகா வக்க ரத்தாற் சுரர்களெ லாஞ் சுபமுறவே பூசை செய்தார். (௺௬)

வேறு.

இத்திற மோதிய சூதனை நோக்கி யிலங்கு மகாமுனிவர்
மெத்திய பத்தி சிரத்தை யவன்மிசை மேவின ராகியுடன்
சத்திய சிற்சுக பூரண மாகிய சங்கர னிவனென்றே
புத்தியி லெண்ணி யவன்பத பங்கய பூசனை செய்தனரால்.

எட்டாவதத்தியாய முற்றிற்று.

ஆகவத்தியாய மெட்டிக்குத் திருவிருத்தம் ௲௦௬.

ஒன்பதாவது

# ஆனந்த நடேசன் வியாசன் முதலிய சகல முனிவர்க்கும் ஆனந்தத் தாண்டவ தரிசன மருளிச்செய்த வத்தியாயம்.

அருள்வடிவா யெழுந்தருளி யெம்மை யாண்ட வாரி யரே யனைத்தையுநீ ரெங்கட் கெல்லாம், விரிவுறவு மடக்கி யுமே யருளிச் செய்தீர் விமலமதா மும்மருளா லவற்றை யெல்லாங், கரதலவா மலகம்போ லியாம றிந்தேங் கலக்க

யிலே யாகினுமே மற்று மெங்கட், கொருவினவ துள்ளதிதை யருளாற் கேட்டின் றுத்தரநீ ரருளுமென முனிவர் சொல் வரர். (க)

பத்தர்கட்கா மிடர்களெலா முடனே தீர்த்துப் பரமசுக மளிப்பவனுய்ப் பரமான் மாவாய்ச், சத்தியசிற் சுகபூன்ற பிர ம மாகிச் சகலத்தின் சான்ருகி யெவைக்கு மேலாய், நித்த மெலாத் தேவாக்குந் தேவ ஞகி நிகழுமமா பதியாகி நடே ச ஞனை, வத்தனியற் ருனந்த நடனந் தன்னை யகிலருமே நோக்கமிக வாசிக் கின்ருேம். (உ)

ஆதலினு லெங்கட்குச் சபாந டேச ஞனந்த நடன மதைக் காண்ப தற்குச், சாதகமா முபாயத்தை யருளா லின்று சாற்றிடுவீ ரெனவினவு முனிவ ரர்க்குச். சூதமகா முனிசொல்வான் முன்ன மோர்காற் சுந்தரனு நந்தீசன் றன்னை நோக்கி, யேதமிலாச் சௌனகமா முனிவ னென்போ னிவ்வர்த்தந் தனையன்பால் வினவி னுைல். (௩)

நந்தியுமே வினவியவச் சௌன கற்கு நடனமிடு மாதே வன் றன்னைப் போற்றிப், புந்தியினுற் சிந்தித்து மகிழ்ந்து சொல்வான் பூரணனும் பரமசிவன் கைலா யத்தி, லந்தமிலா மகிழ்வுடனே சத்தி நேரத் தானந்த நடனத்தைச் செய்வா னங்கே, சுந்தரியா முமையொருத்தி காண்பண் மற்ருேர் சொல்லியவந் நடனத்தைக் காணு ரென்றும். (ச)

பகுதிமுத லனைத்துக்கு மப்பா லான பரமசிவன் கரு ணையினுற் சிதம்ப ரத்தின், மகிமைமிகுஞ் சிற்சபையின் மகிழ்வு கூர்ந்து மகத்தான வானந்தத் தாண்ட வத்தைத்,

றகைமையுட னவரதஞ் செய்வா னுங்குற் றடையறவே யம்பிகையுங் கணேசன் றானுஞ், சிகரமுறுங் வேலவனு மென்ற னோடே சேத்திரபா லகனுமதைத் தினமுங் காண்பர். (௫)

ஏனையர்க ளதுகாண ரெனினு மீச னீனமிலா மகத்தான வருளுண் டாமேன், ஞானசபா மத்தியிலே நடனஞ் செய்யு ஞானகன வானந்த நடரா சன்ற, னீனமிலா நடனத்தை மற்று ளோரு மிப்பதியிற் சௌனகனே நேராய்க் காண்பா, ரானதனு லவனருளை யடைய வேண்டி யன்புடனே யப்பதியை விரைவிற் சார்தி. (௬)

அங்குநிகழ் தனுமதியில் வருவ தான வாதிரையி னுதயத்தி லெழுந் திருந்து, பங்கமிலா மனதுடனே யொருமைப் பட்டுப் பாவனமாஞ் சிவகங்கா தீர்த்தத் தாடிச், சங்கரநற் பத்தர்க்கே தனதான் யாதி சத்தியள வளித்தொருநா ளுபவா சித்துத், துங்கமுறுந் திருமூலத் தான நாதன் றுகளற்ற வாலயநீ யன்பாற் சார்தி. (௭)

திருமூலத் தானத்தி னுதன் றன்னைத் திடவன்பான் மூன்றுமுறை வலமாய் வந்து, தரைமீதிற் றண்டெனவே வணங்கிப் போற்றித் தகைமைமிகும் பஞ்சமகா வக்க ரத்தாற், பரிவாக வவ்வீசன் றனைப்பூ சித்துப் பரவியவப் பஞ்சமகா வக்க ரத்தைத், திரமாக வொருபதின யிரமா விர்த்தி தினந்தோறுஞ் சௌனகனே செபித்தி ருப்பாய். (அ)

இவ்விதமா யொருவருடஞ் சென்ற பின்ன ரிங்குமுனஞ் சொன்னபடி யித்தீர்த் தத்திற், றவ்வியிடா மனதுடனே

தீர்த்த மாடித் தபோநிதியாந் திருமூலத் தான நாதன், றிவ்
வியமா மிலிங்கத்தைப் பூருவம்போற் றிடமாகப் பூசிக்க
பின்ன ராங்கே, யவ்விதமே யானந்த நடேசன் றன்னை யன்
புடனே சௌனகநீ யாரா திப்பாய். (௯)

நித்தமுமே மூன்றுதர நியம மாக நிகரில்சபா நாயகனை
வலமாய் வந்து, பத்தியுடன் வணங்கிமிக வாரா தித்துப் பஞ்
மகா வக்கரமுன் சொன்ன வாறே, நித்தமுநீ யாதரவாய்ச்
செபித்தோ ராண்டு நீங்கியபி னடேசர்க்கு மவரன் பர்க்குஞ்,
சத்தியுள மட்டங்கே தனுதி யீந்து சலனமற முன்போலப்
பூசை செய்வாய். (௧௦)

ஓதியவா றியற்றினையேற் சபாந டேச னெங்குமரு
ஞானக்குண்டா மனேகர் முன்ன, மாதியிலா நடராச னரு
ளாற் றானே யானந்த நடனத்தைக் கண்ட வற்றாற், சாத
கமா யவரவர்கள் வாஞ்சை செய்த சகலமுமே சார்ந்தனர்க
ளாத லாலே, யோதியவா சௌனகநீ செய்தி யென்றே யுணர்
வுமிகு நந்தீச னோதி நின்றான். (௧௧)

வேதியரே யிவ்விதமாய் நந்தி கேசன் விளம்பியதைச்
சௌனகமா முனிவன் கேட்டுப், பேதமுறாச் சிரத்தையுட
னடைவே யாகம் பேசியதி யாவையுமே செய்த வற்றாற்,
போதகன நடராச னருளைப் பெற்றுப் புருடார்த்த மனைத்
துக்கு மேது வாக, வோதியதா மானந்தத் தாண்ட வத்தை
யுவகையுடன் சிற்சபையி னூடே கண்டான். (௧௨)

ஞானசபா மத்தியிலே நடனஞ் செய்யு ஞானசதா னந்
தகன நடேசன் றன்னை, யூனமிலாப் பரவித்தை யுருவாய்

நின்ற வுமையுடனே சௌனகமா முனிவன் கண்டிங், கின மிலா வானந்த மிகவு மெய்தி யினிமையுடன் பணிந்துவெகு விதமா யேத்தி, யானமகா பத்தியினுற் பரவ சத்தை யடைந்தவனுய்ச் சிலகாலம் வறிதி ருந்தான். (கங)

மற்றுமவ னனந்த நடனஞ் செய்யு மாதேவன் றனைக் கண்டு மகிழ்வு கூர்ந்து, பற்றியவம் மகிழ்வுடைய வதிச யத நாற் பரவசனுய்த் தோன்றியவ னானு மாட, வுற்றனனக் காலத்திற் றேவ தேவ னுவந்தவனுய்ச் சௌனகனை நோக்கிச் சொன்னுன், குற்றமிலா வெமதருளா னீயிப் போது குறை வறவே பெறுவமெலாம் பெற்றே னுனுய். (கச)

வேதமதின் முந்தியதா மிருக்கு வேதம் விமலமதா யுலகத்தில் விளங்கும் வண்ண, மேதமிலா வெம்முடைய வாஞ்ஞை யாலே யின்றுமுதற் செய்திடுவா யதினு மிக்க, வாதரவாய்ச் சாகலிய சாகை தன்னை யதிசயமா யகிலர்க்கும் விளக்கு வாயென், றோதியவிப் பரமசிவ வசனங் கேட்ட வுடனன்னே னவ்விதமே யனைத்துஞ் செய்தான். (கரு)

இன்னவித மவனுடைய சீட னுன வாசுவலா யனமு னிவ னவன்வாக் காலே, முன்னுரைசெய் நெறியாகத் தில்லை சென்று மூதுணரும் பகவானுய் முக்க ணுனே, வன்னையுடன் சிற்சபையி லானந் தக்கூத் தாடியநம் பரசிவனைக் கண்டின் பங்கூர்ந், துன்னியவச் சிவனருளாற் சூத்தி ரத்தை யுலகினு ளோர்க் குபகார மாகச் செய்தான். (கசு)

இவ்விதமு னனேகருமே சிரத்தை யோடிங் கிசைத்த படி யியற்றியதா னடரா சன்றன், றிவ்வியமா நடனத்தைச்

சபையின் கண்ணே திட்டியினாற் கண்டுடனே பேறுபெற்றா, ரவ்விதமே முனிவரீர் நீவி ரெல்லா மனுட்டித்தப் பரமசிவ னருளைப் பெறறுச, செவ்வியதா மானந்த நடனந் தன்னைச் சிற்சபையிற் றரிசித்து முத்தி சேர்மின். (கஎ)

தேசிகரிற் றேசிகனுய்க் குணங்க ளெல்லாந் திகழ்நிதியா யெனையாண்ட வாசா னாகிக், கேசவனல் லவதார மான வியாசன் கிருபையினு லதிகுய்ய மான விந்த, மாசிலதாம் பரமுத்தி யுபாய மியாவு மன்னியவென் சிரத்தையினு லருளிச் செய்தா, னுசறுமா முனிவரரே யந்த வண்ண மனைத் தையுநா னுங்கட்கின் றுபதே சித்தேன். (கஅ)

மாசறவே புராணமெலா மறிந்த சூதன் மாமுனிவர்க் கிவ்வண்ண முரைத்த பின்னர்ப், பேசியதன் குருவான வியா சன் றன்னைப் பிரியமுடன் றியானித்தா னக்கா லத்திற், றேசிகனும் வியாசமுனி சூதன் செய்த தியானத்தை யறிந் துடனே கருணை கூர்ந்து, நேசமுறும் பெருவிதராஞ் சீட ரோடு நிறைந்தவனுய் நிமிடத்தி லாங்கு தித்தான். (கக)

பூதிகொடீட யங்கமெலா முத்தூ ளித்துப் பொற்புறு முப் புண்டரமே தரிப்போ னாகி, நீதியதாய் வுருத்திராக்க மாலை பூண்டு நிருமலமாம் பஞ்சமகா வக்க ரத்தை, யாதர வாய்ச் செபிப்போனுய்ச் சைவ சின்ன மனைத்தையுமே தரிப் போனும் வியாசன் றன்னை, யோதியவிவ் விலக்கணமே யுற்ற சீட ருடனுங்கே சூதமுனி தரிசித் தானல். (உ0)

தேசிகனும் வியாசமகா முனியைச் சூதன் றெரிசித்த வுடன்றனது சீட ரோடே, யாசையுட னெழுந்தன்பின்

வணங்கிப் போற்றி யவனுடைய வுபயபத பங்கயத்தை, நேசமுடன் றனதுசிரங் கண்கண் மார்பு நிகழ்த்தியவில் வங் கத்திற் றரித்தோ னாகிப், பேசியவவ் வாசிரியன் பாதந் தன்னைப் பிரியமுடன் வாரியினால் விளக்கி னானால். (உக)

விமலமதாம் பாதசலம் பானஞ் செய்து விதிப்படியே சீடருடன் வியாசன் றன்னை, நிமலமதா யர்ச்சனைசெய் தவ ன்வாக் கெல்லா நிகழ்மறைபோ னிசமென்றே தனது சீடர்க், கமலமதா யறிவித்தா னப்பாற் சூத னகிலமகா முனிவரொடு மாசா னேடுஞ், சமமதுவாம் புருடார்த்த மளிப்ப தாகச் சாற் றியவச் சிதம்பரநற் பதியிற் சென்றான். (உஉ)

அங்குமகிழ் வியாசமுனி யாதி யான வகிலமகா முனி வரருந் தனுமா தத்திற், றுங்கமுறு மாதிரையிற் சிரத்தை யோடு துகளற்ற சிவகங்கா தீர்த்தத் தாடிச், சங்கரன்றன் பத்தர்க்கே தனதான் யாதி சத்தியள வீந்தொருநா ளுபவா சித்துப், பங்கமுறாத் திருமூலத் தான நாதன் பாவனமா மாலயமே சென்று நின்றார். (உஙு)

நின்றவுடன் றிருமூலத் தான நாத னிருமலமா மிலிங் கத்தைப் பத்தி யோடே, துன்றினராய் மூன்றுதரம் வலமா வந்து துகளறவே மேதினியில் வணங்கிப் போற்றி, நன்றது வாம் பஞ்சமகா வக்க ரத்தா னன்றாக வவ்வீசன் றனைப்பூ சித்து, நின்றுதின மொருபதினா யிரமா விர்த்தி நிகழ்பஞ் சாக் கரசெபமு மன்னோர் செய்தார். (உச)

இப்படியே யொருவருடஞ் சென்ற பின்ன ரிம்முனி வர் சிவகங்கா தீர்த்தத் தாடிச், செப்புசிவ பத்தர்க்கே தனதி

யீந்து திருமூலத் தானத்தி னாதன் றன்னை, யற்புதமாய்ப் பூசித்தார் மற்று மன்றே ளானந்த நடராசன் றனையு மாங் கே, நிற்பரமாம பத்தியுட னியம மாக நிகழ்த்தியவா நிதந் தோறு மாரா தித்தார். (உரு)

முனிவரெலா நடராசன் றன்னை நித்த மூன்றுமுறை வலம்வந்து வணங்கிப் போற்றித், தினமுமவ ரொருபதினு யிரமா விர்த்தி திகழ்பஞ்சாக் கரசெபமுஞ் செய்தோ ராண் டு, சொனவிதமாய் நீங்கியபின் சிவபத் தர்க்குஞ் சொர்ன சபா நாதர்க்குந் தனுதி யீந்து, பினுமவர்கள் பஞ்சமகா வக்க ரத்தாற் பிறங்கியசிற் சபாதிபனைப் பூசை செய்தார். (உசு)

இன்னவித முனிவரெலாஞ் சிரத்தை யோடே யிலங் கியசிற் சபாதிபனைப் பூசிக் குங்காற், பன்னியநல் வேதாந்த சபைகட் கெல்லாம் பதியாகி யீசர்க்கு மீச னான, வன்னசிவ னருள்கூர்ந்து முனிவர் முன்னே யப்பிகையோ டபரோட்ச மாகத் தோன்றித், தன்னுடைய வானந்த நடனந் தன்னைத் தயையதனா லவர்க்கெல்லாந் தரிசிப் பித்தான். (உஎ)

மேவுமெலா நன்றாகத் தெரிந்த வந்த வியாசமுனி முத லியமா முனிவ ரெல்லாஞ், சோதிமிகுஞ் சதகோடி கோடி பானு சோதிக்கு மேலான சோதி யுற்றுத், தீதறவே திகழ் பவனாய்த் துன்ப மெல்லாந் தீப்பவனாய்த் திவ்வியமா மிலக்க ணங்க, ளனைதையுமே பெற்றவனா யிலங்கு மிந்த வீசனுடை யானந்த நடனங் கண்டார். (உஅ)

கண்டவுடன் கவலையெலாந் தீர்ந்தோ ராகிக் கரையற்ற வானந்தங் கூர்ந்தோ ராகித், தண்டெனவே மேதினியிற்

பணிந்தோ ராகித் தடையறவே வெகுவிதமாந் துதிக ளாலே, யண்டர்முத லனைவர்க்கு மதிப னான வானந்த நடராசன் றன்னைப் போற்றித், தொண்டர்களாய் முனிவரெலாஞ் சேட்டை யின்றிச் சொரூபத்திற் பரவசராய்ப் பந்தந் தீர்ந்தார். ()

இவ்விதமா யானந்த நடரா சன்ற னிலங்கியநற் கருணையினுன் முனிவ ரெல்லாந், திவ்வியமாஞ் சொரூபசுக மேவி நிற்குந் தெசையின்மலர் மாரிமிகப் பொழிந்த தாங்கே, செய்வியதாய் வேதங்கள் வேதாந் தங்கள் செப்பியமங் களவொலியு முதித்த தாங்கே, யவ்விதமே காளமுதல் வாச்சி யங்க ளறைந்தவொலி முகுமுகுவென் றுதித்த தாங்கே.

தேவதைக டானவர்கண் முதற்ச னங்கள் திகழு திலோத் தமைமுதலாந் தேவ மாத, ரேவருமே மகிழ்வுடனே யங்குப் போந்தா ரினிமையுட னவ்வீசன் சேவை செய்தா ராவலுட னடேசனையே நோக்கி நோக்கி யானந்த பாஷ்பமுறல் ரோமாஞ் சித்தல், கேவலமா நிட்டையுற லாடல் பாடல் கிளர்துதிகண் முதலியவை நிரம்பிற் றங்கே. (௩௧)

பின்புமகா மங்களமே செய்வோ னாகிப் பேதமுறுஞ் சகலசகன் றாதை னை, வின்பகன வடிவமுறு சபாந டேச னிதத்தினையே யெல்லோர்க்கு மீச்சிக் கின்ற, வன்புமிகு மம்பிகையோ டமைந்தோ னாகி யன்பரெலா மீடேற வருளி னாலே, யின்பமிகு முற்சவமே யாரம் பித்தங் கிருந்தவர்க ளெல்லோர்க்குஞ் சுகஞ்செய் வித்தான். (௩௨)

பததிமிகுஞ் சுரரசுரர் முனிவ ராதி பலவிதமாஞ் சனங்களினுற் சேவிப் புற்றங், கத்திமுக னறுமுக னந்தி யாதி

யனந்தகணக் குழுவுடனே விஞ்ஞை மாகச, சித்துருவா மு மையொடுசிற் சபாநடேசன் சிதம்பரமா நகரத்தை வல மாய் வந்து, சுத்தமதாஞ் சிவகங்கா தீர்த்தத் தாடிச் சுற்றி வரு மியாவர்க்குந் தீர்த்தந் தந்தான். (௩௩)

அருள்வடிவா நடராசன் றீர்த்தந் தந்த வக்கணமே யம ராமுத லானோ ரெல்லாம், பரமசிவன் சந்நிதியிற் சிரத்தை யோடு பாவனமாஞ் சிவகங்கா தீர்த்தத் தாடித் திரவியமுந் தானியமுந் துகிலுங் கோவுந் திலமுடனே மேதினியுஞ் சிவ பத் தர்க்கே, பிரியமுட னளித்துமிக வன்புற் றோராய்ப் பிற ங்குசபா நாயகனைப் போற்ற லுற்றார். (௩௪)

சத்தியசிற் சுகபூன்ற பிரம மான சங்கரனே நின்னு டைய சொரூபம் போற்றி, சித்திலதாஞ் சகலசக சாட்சி யான சின்மயனே நின்னுடைய சொரூபம் போற்றி, வித்தர மாஞ் சகசிவ பரமாய் வேறாய் விபுவான பரசிவநற் சொரூபம் போற்றி, நித்தமுமே சிவகாம வல்லி யோடு நிகரில்சபா நாயகநின் சொரூபம் போற்றி. (௩௫)

சகலசகத் தான்மாவா யனந்தங் கைகால் சட்சுமுத லடைந்தசபா நாத போற்றி, யகிலசகத் துள்ளோரு முய் யும் வண்ண மருள்வடிவா யெழுந்தருளு நடேச போற்றி, நிகழுமதிச் சேகரமே யாதி யான நிகிலவிலக் கணமுமுறு நடேச போற்றி, தகைமைமிகுந் தனுபாண முதலா மியாவுந் தரித்ததிருக் காறனை தேவு போற்றி! (௩௬)

உன்னுடைய பத்தரிடர் தூரத்தி வைக்கு முருத்திரனே நின்முனிவைக் குறித்துப் போற்றி, நின்னுடைய பழுதற்ற

பாணம் வில்லு நிகரற்ற கரங்களையிங் 'குறித்துப், போற்றி, மன்னுசபா நாயகநின் சாந்த மான மங்களமாந் திருவுருவை க் குறித்துப் போற்றி, துன்னுசடை காளகள முக்கண் ணுதி துலங்கியநின் றிருவுருவைக் குறித்துப் போற்றி. (கஎ)

தருலதைகள் சிறுசெடிகள் சிகரி யாதி தாவரமா முரு வான சபேச போற்றி, சுரர்நரர்கள் பசுக்கண்முத லனேக மாகச் சொன்னசர வுருவான நடேச போற்றி, பிரிவுபெ றும் பஞ்சமகா பூதந் தாலே பெற்றசகத் தனைத்துருவா மகேச போற்றி, பரவுசரா சரமான சகத்துக் கெல்லாம் பதி யாயு மிருக்கின்ற பரேச போற்றி. (கஅ)

அரியமறை முதலான வனந்த நூல்க ளாக்கியிடுங் கார ணமா நடேச போற்றி, மருவியவம் மாமறையே முதலா நூல்கண் மதித்தபொருள் வடிவான நடேச போற்றி, சரு வவதிட் டானமதாய்ச் சருவான் மாவாய்ச் சருவத்துக் கதிப தியா நடேச போற்றி பரவியெலா மறிபவனு யன்ந்த சத்தி பரிப்பவனுய்ப் பரனுன நடேச போற்றி. (கக)

'தேவர்முத லியாவருமே யாரா திக்குந் தேவசிகா மணி யான மகேச போற்றி, மூவரையு மாக்கியவர்க் கருளிச் செ ய்த மூலபர தத்துவமாம் பரேச போற்றி, யோவலிலா வே தாந்த சபையா யாங்கே யோதியிடும் பொருளான நடேச போற்றி, பாவனமாம் வேதாந்த சபைகட் கெல்லாம் பதி யாயு மிருக்கின்ற சபேச போற்றி. (சo)

மூன்றுவித தேகங்கண் மூன்ற வத்தை மூன்றபிமா னியுமான நடேச போற்றி, யூன்றியவிவ் வொன்பதுவாம்

வகைக்கு மேலா யொளிர்கின்ற வுணர்வுருவா நடேச போற்றி, தோன்றியவொன் பதுவகையுஞ் சற்று மின்றித் துலங்கியவோ ருருவான நடேச போற்றி, யீன்றிடுமோர் விகற்பமிலா வுணர்வாந் தூக்கத் திலங்கியிடு மகண்டசபா நடேச போற்றி. (சக)

தனிமுதலாய்த் தானாகித் தன்னை யல்லாற் றுக்கியவோ ரணுவுமிலா நடேச போற்றி, நனவுமுதற் கப்பாலாந் துரியந் தன்னி னன்றுணரத் தக்கசபா நடேச போற்றி, யனவரத மானந்த லகிரி கூர்ந்திங் கானந்த நடனமிடு நடேச போற்றி, யுனைநம்பு மன்பருறு மிடர்க ளெல்லா மொருநிமிடத் தொழித்தருளு நடேச போற்றி. (சஉ)

காலமுதன் மூன்றுவித பரிச்சே தத்தைக் கலவாத விபுவான நடேச போற்றி, தூலமுத லொருவடிவு மின்றி நின்ற தூயசிதம் பரவடிவா நடேச போற்றி, ஞாலமெலா மாகியுமோ ரணுவு மாகா ஞானசதா னந்தகன நடேச போற்றி, மூலநடு முடிவின்றி முற்று மான முதற்பொருளா மானந்த நடேச போற்றி. (சங)

ஊனுரு மாக்கைமுதற் கப்பா லான வுணர்வுருவா மானந்த நடேச போற்றி, வானுதி யனைத்துக்கு மதீத மான வஸ்துவதா மானந்த நடேச போற்றி, நீநானுய் நானீயாய்ப் பேத மின்றி நிறைவுற்ற வானந்த நடேச போற்றி நானுவாம் விகற்பமிலார் நல்லுள் ளத்தி னண்ணியிடு நடராச போற்றி போற்றி. (சச)

இவ்விதமாய்ப் போற்றிமிக வன்பு கூர்ந்தங் கிருக்கின்ற சுரர்முனிவர் முதலோர்க் கெல்லாந், திவ்வியமாங் கெம்பீர வசனத் தாலே தேவசிகா மணியாமச் சிற்சபேசன், செவ்வியதாஞ் சொரூபசுக முங்கட் கெல்லாஞ் சிதையாம லெப்போதுஞ் செறிக வென்றே, யவ்விதமா யனுக்கிரக மளித்த பின்ன ரகண்டமதாம் வடிவாக விருந்தானங்கே. (சரு)

வேறு.

இவ்வித மாய்ச்சிவ கங்கா தீர்த்த மிசைந்த மகாமகிமை
செவ்விய தான சிதம்பர சேத்திரஞ் செறியு மகாமகிமை
திவ்விய சிற்சுக மானச பாபதி திகழு மகாமகிமை
தவ்வியி டாதிவை யாவுமு ணர்ந்தவர் தடையற வீடுறுவர். ()

வேறு.

இன்னவா றமல மாக விசைத்தவிம் முத்தி கண்டந்
தன்னைநல் லன்பி னோடே தளர்வறப் படிப்போர் தாமு
மன்னவா கேட்போர் தாமு மானந்த நடரா சன்றன்
றுன்னிய வருளி னாலே தூயமா முத்தி சேர்வர். (சஎ)

பரமுணர் ஞானந் தன்னைப் பரிவுட னென்ற னக்கும்
வரமதா யருளு கின்ற வாதரா யணனைப் போற்றிச்
சருவபூ ரணமா யார்க்குஞ் சாட்சியா மான்மா வாகி
யருளுமா தேவி யோடு மமைந்தநஞ் சிவனைப் போற்றி. ()

வாதரா யணனிவ் வாறு வடமொழி யதனுற் சொன்ன
சூதசங் கிதையி னுள்ளே சுத்தமா முத்தி கண்ட
மீதினைச் சிற்ச பேச னீந்தநற் கருணை கொண்டே
மாதமிழ்க் கவிதை யாக மருளற வமைக்க லானேன். (சகூ)

இப்படி யுமைக்கப் பட்ட விக்கவி மாலை தன்னை
யொபபிலா விருசை யான வுமையுடன் வீற்றி ருக்குந
தற்பர நடரா சன்றன் றயங்கிய சரணப் போதி
லற்பமின் மகிழ்வி னோடே யற்பணஞ் செய்ய லானேன். ()

இன்னவா மகிமை கூர்ந்த விடைமரு தூரின் கண்மே
மனனியே வாசஞ் செய்யு மகிமைகூ ருலக நாதன்
பன்னுமிந் நூலி லேதும பற்றிய பிழைபொ றுத்துச்
சின்னமில் லாத மேலோர் செவ்விதென் றெப்ப வேண்டும.

வேறு.

சுத்தமதாய்ப் புராணமெலா மருளிச செய்து சுகநல்குஞ் சூதமகா முனியைப் போற்றித், தத்துவமா யவனுக்கட புராண மெல்லாந் தந்தருளும் வியாசமகா முனியைப் போற் றிப், பத்தர்களை யாளவருள் வடிவாத தோன்றும் பரமான சாமபசாம் பிடினைப் போற்றிச், சத்தியசிற் சுகதனமாப் பூன்ற மாகிச சாந்தமதாஞ் சொரூபத்தைப் போற்றி போற்றி.

ஒன்பதாவதத்தியாய முற்றும்.

வத்தியாய மொன்பதுக்குப் பாயிரமுள்படத்

திருவிருத்தம் - ௩௭௦.

## முத்திகண்டமுற்றும்.

---

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# சூதகீதை

## பாயிரம்.

சுக்கன கடன ராஜன் சுத்தமாஞ் சொருபஞ் சார்ந்த
வகிலநா யகியா மம்மை யருளிய தனய னாகிச்
சகலமா மிடருந் தீர்த்துச் சச்சிதா னந்த மாகப் [வாம்
புகல்பத மடைவிப் பிக்கும் பொருளினைப் போற்றல் செய்

சருவபூ ரணவ கண்ட சச்சிதா னந்த சாந்த
நிருமல நிருவி கார நித்திய சுத்த முத்த
நிருமம நிரகங் கார நிஷ்கள வடிவாய் நின்ற
பிரமமாம் பரசி வத்தைப் பிரிவறச் சிந்தை செய்வாம். (௨)

சூதசங் கிதையி னான்காச் சொல்லிய கண்டங் கட்கு
ளோதிய நான்காங் கண்டத் துத்தர பாகந் தன்னிற்
கோதிலாக் கிரந்த வாக்காற் குறைவறக் கூறப் பட்ட
சூதகீ தையினை யின்று சுத்தமாந் தமிழிற் சொல்வேன். (௩)

சருவமு[illegible]கர்ந்தோ னான சத்திய வியாசன் சொன்ன
வரியதா மிந்த நூலை யற்பமா மென்றன் வாக்கா
லுரைசெயு நீதி யோரி லோவிய விந்து நானும்
புரணம[illegible]ந்து வின்முன் பொலிவனென் றோதல் போலாம்.

பாயிரம் முற்றிற்று.

முதலாவது

# நைமிசாரணிய முனிவர் சூதமா முனிவரைத் துதித்து வினவும் அத்தியாயம்.

சத்திய ஞானா னந்த சந்ததா நந்த மான
வத்தமில் பரசி வத்தை யகமென வனுப வித்து
நித்தரங் காழி யேபோ னிச்சல பூன்ற னாகிச்
சுத்தமா நிட்டை யின்கண் சூதமா முனியி ருந்தான். (க)

மந்தவா சகம்பொ ருந்தி மலர்முகத் தெளிவு டைத்தாய்ச்
சந்தீதந் தனது தேசாற் சகமனைத் தையும் விளக்கி
யிந்தமே தினியின் மற்றோ ரினனென விளங்கு கின்ற
சுந்தர வடிவா மந்தச் சூதமா முனியை நோக்கி. (உ)

பரமமா முனிவ ரியாரும் பரவிய வன்பி னோடே
தரணியிற் றண்ட மேபோற் றாழ்வுற வீழ்ந்தெ ழுந்து
சிரசிலஞ் சலியங் தத்தைச் செய்திடு கரத்த ராகி
விரிவுறு மகிழ்வி னோடே விவிதமாய்ப் போற்ற லுற்றார். ()

பரசிவ னருளாற் பெற்ற பரவறி வுடையோய் போற்றி
பரசிவ னுபய பாத பதுமவன் புடையோய் போற்றி
பரசிவ னன்ப ருக்குட் பரமனே சாந்த போற்றி
பரசிவ னன்ப ருக்கே பரமறி வீய்வோய் போற்றி. (ச)

வேதவே தாந்த மாகும் விவிதமாம் பதுமக் கூட்டு
மியாவையும் விகாசஞ் செய்திங் கிலங்கிய வினனே போற்றி

யாதியாம் வியாச ஞான மாகிய தீபந் திற்கோர்
சோதிசெய் திரியே போற்றி சுத்தமாம் பகவ போற்றி. (௫)

நிகிலமாம் புராண மென்னு நித்தில மாலை கோக்க
வகலுஞ்சூத் திரமா கின்ற வமலநின் சரணம் போற்றி
பகவநம் பவமா கின்ற பரவிய மரஞ்சே திக்க
நிகழ்வுறு குடார மான நிமலநின் சரணம் போற்றி. (௬)

கருணைவா ரிதியே போற்றி கலங்கிய சீவர்க் கெல்லாம்
பிரியமே யளிக்கா நின்ற பெரியநின் சரணம் போற்றி
சருவமாந் துகளு மற்ற சாந்தநின் சரணம் போற்றி
நிருமலக் குண நிறைந்த நிமலநின் சரணம் போற்றி. (௭)

தரணியின் மனிதர்க் கெல்லாந் தாயுமா னவனே போற்றி
யரியனும் வியாச னுக்கிங் கானநற் சீட போற்றி
கருமநிட் டையினைச் சார்ந்து களங்கமற் றவனே போற்றி
பிரமநிட் டையினைச் சார்ந்து பேதமற் றவனே போற்றி.

தரணியிற் சாட்சா துண்மைத் தத்துவ நம்பி னோர்க்குப்
பொருவிலா வந்த வுண்மைப் பொருள்வடி வானோய் போற்
சருவமாம் பூதங் கட்குஞ் சாரனே சமனே போற்றி [றி
சரணமா ரெமக்கு நேரே சற்குரு வானோய் போற்றி. (௯)

சந்தத போதா னந்த சாந்தமா மான்ம ரூபர்
தந்தநங் குருவே போற்றி தந்தையு மானோய் போற்றி
யந்தநின் சரணம் போற்றி யகண்டவா னந்த போற்றி
பிந்தியும் போற்றி போற்றி பிரியனே பின்பும் போற்றி.

இந்தவா றறிஞ ரியாரு மிதமெலா மளிக்கா நின்ற
சுந்தர வடிவ மான சூதமா முனியை யேத்தி

யிந்தனா லத்தி னுள்ளோ ரெவர்க்குமே யிதத்தை வேண்டித்
தந்தைநின் கீதை தன்னைத் தயையினா ருள்வா யென்றார்.

சொன்னவை வினவப் பட்ட சூதமா முனியும் பின்ன
ரன்னதன் சொருபா னந்த வனுபவ நின்று மீண்டிங்
குன்னிய வாறெ வர்க்கு முவந்ததை யளிக்கா நின்ற
தன்னுடை யாசா னென்னத் தகுவியா சனைநி னைந்தான்.

புகலுமா நினைத்த லோடும் பூரண முணர்ந்த வியாச
னகிலமா மவய வத்தி லணிந்தநீ றுடையோ னாகி
நிகழ்திரி புண்ட ரத்தை நெற்றியா கியிலு டைத்தாய்
மகிழ்தரு ருத்தி ராக்க மாலையா பரண னாகி. (கரு)

சருமவத் திரமு டுத்திச் சைவசின் னங்க ளியாவும்
பிரியமாய்த் தரித்துச் சீடன் பேணிய தளிக்க வேண்டிக்
கருணையா லுதித்தான் முன்னே கருணைவா ரிதியா மந்தக்
குருபர வியாசன் றன்னைக் குறைவிலாச் சூதன் கண்டான்.

தேசிய ரரசர்க் கெல்லாந் தேசிக னாகா நின்ற
மாசிலாக் குரவன் றன்னை மகிழ்வுடன் சூத னோக்கித்
தேசுள தனது சீடத் திரளுடன் பணிந்து நன்றா
யாசன முதல ளித்தே யர்ச்சனை யடைவாய்ச் செய்தான்.

ஏதுமே யறிந்த வியாச னினிமையா யிவனை நோக்கிச்
சூதவென் சீட மெத்தச சுபமுனக் குற்ப விக்கு
மாதவ முனிவ ருக்கு மகனேயின் றுனக்கு மென்னா
லேதுதா னாகத் தக்க திதையியம் பெனவே சொன்னான்.

ஈதினைக் கேட்டுச் சூத னெவர்க்குமே யிதத்தை வேண்டிச்
சாதுவாங் குருவை நோக்கிச் சாற்றுவான் மதுர மாக
மாதவ வலியாற் சித்த மலமிலா முனிவ ரீவர்
கேதமி லெனது கீதை கேட்பமா விச்சை யுள்ளோர். (௧௭)

நாதநின் னருளி ருந்தா னவிலலா மெனது கீதை
யீதுதா னிலாத தாகி லிஃதினை நவில வொண்ணா
வாதலா லெங்கண் மீதின் றருளுனக் கிருக்கு மாகிற்
சூதநின் கீதை தன்னைச் சொல்லென வாஞ்ஞை செய்வாய்

என்னலுங் கேட்டு வியாச னினியநற் கருணை கூர்ந்தின்
றுன்னுடைக் கீதை கேட்ப வுவந்தவிம் முனிவர்க் கெல்லா
மன்னதை யருள்வா யென்று னவனைமற் றுலிங் கித்தான்
பின்னவ னிதயந் தன்னைப் பிரியமாய்ப் பரிசஞ் செய்தான்.

சருவநா யகனே யான சாம்பமூர்த் தியைநி னைந்து
கருணைகூர் விழியா னோக்கிக் களங்கமி லவன் மனத்திற்
றிருமகா தேவன றன்னைத் திரமுற விருத்தி யன்னோன்
சிரசினை மோந்து பார்த்துச் சீக்கிர மறைந்தான் வியாசன்.

பின்னரு மந்தச் சூதன் பிறங்குமுக் கண்ண னாகி
யன்னிய தேவர்க் கெல்லா மதிபனாஞ் சாம்ப மூர்த்தி
தன்னினைத் தியானஞ் செய்து தண்டென மிகப் பணிந்து
தன்னுடை யாசான் வியாசனறன்னையுந் தியானஞ் செய்தான்.

சிரசிலஞ் சலிபந் தத்தைச் செய்துபஞ் சாக்க ரத்தைப்
பிரியமாய்த் தான்செ பித்துப் பின்னரம் முனிவர் தம்மை

யருண்மிகு விழியாற் பார்த்தா னவ்விதச் சூதன் றன்னை
யரிமா முனிவ ரெல்லா முவகையாற் பணிந்து நின்றார். ()

### வேறு.

சருவ மாகிய சந்துக்க ளுக்குநற்
பிரிய மேசெயப் பேணிய சூதனும்
புரையி லாது பொலிந்திடுந் தன்னுடை
யரிய கீதை யறையத் தொடங்கினான். (உங)

ஆ திருவிருத்தம் உங.

சூதகீதை க-வது அத்தியாயம் முற்றிற்று.

---

இரண்டாவது

## அத்துவிதவுண்மையும் உருத்திரமூர்த்தியின் மேன்மையுமுரைக்கும் அத்தியாயம்.

பிரமவித் துக்க ளான பெருமைசேர் முனிவ ரேநீ
ரிருதய வொருமை தன்னை யெய்தினோ ராகி நின்று
சுருதிசம் மதமாய் மெத்தச் சூக்கும மாகா நின்ற
பரசிவ ஞானந் தன்னைப் பகருவம் பாங்காய்க் கேண்மின்.

சத்திய ஞானா னந்த சாந்தவத் துவித மாகி
நித்திய சித்த மாகி நிகழ்ந்திடும் வத்து வொன்றே
யித்தனை சகத்தி னுக்கு மேகமாங் கர்த்தா வாகி
வித்தரப் பசுபா சத்தின் விலட்சண மாகி நிற்கும். (உ)

ஆதிவா ணாதி யைந்து மதனுடைக் குணங்க ளைந்தும்
போதமார் பொறிக ளைந்தும் புகல்கன்மப் பொறிக ளைந்து
மோதுபிரா ணாதி பத்து முளமுதற் கரண நான்கு
மீதெலாஞ் செய்வ தற்கிங் கேதுவா மவித்தை யொன்றும்.

ஓதிய முப்ப தேசடைந் துருவமா மிவைகள் சீவர்க்
கேதமாம் பந்தஞ் செய்த வேதுவாற் பாச மாகு
மீதிறற் பந்தப் பட்டிங் கிசைந்துள சீவ ரியாருங்
கோதுறு பசுக்க ளென்றே கூறலாங் குறைவற் றோரே. (௪)

சகலமாஞ் சகசீ வர்க்குஞ் சந்ததங் கர்த்தா வாகி
நிகழ்வுறும் பரசி வன்றா னித்தமும் பதியா கின்றோ
னிகழ்வுசெய் யஞ்ஞா னத்தோ டிசைந்துள பசுக்க ளுக்குப்
பகருமவ் வஞ்ஞா னந்தான் பற்றிய தனாதி யாக. (௫)

அகிலமாஞ் சீவ ருக்கு மனாதியா மஞ்ஞா னந்தா
னிகழ்வுசெய் சம்சா ரத்துக் கேதுவா மெதனா லென்னி
னிகழ்வுறுந் தஞ்சொ ரூப நிலைமையை யறியா தத்தால்
வெகுவித சுகதுக் கத்தை வெறிதிவ ரடைந்தா ரன்றே. (௬)

இரவியின் பிரகா சத்தா லிருளெலா நீங்கு மாபோற்
சொருபஞா னத்தி னாலே சொன்னவஞ் ஞான நீங்கும்
பரவிய வவித்தை தன்னின் பலவிதப் பகுப்பாற் பேத
முரைதருஞ் சீவர்க் குண்டா முண்மையிற் பேத மில்லை. (௭)

பரவிய மாயை தன்னின் பலவிதப் பகுப்பாற் பேத
மொருமையா மீசர்க் குண்டா முண்மையிற் பேத மில்லை

விரிதரு முபாதி யாலே விவிதமாங் கடவிண் மாவிண்
பிரிவுபோற் சீவே சாக்கும பேசிய பேதந் தோன்றும். (௮)

ஓதிய சீவ னுக்கிங் குபாதியின் பேதத் தாலே
பேதமு முயர்ச்சி தாழ்வின் பிரிவுமே கற்பி சய்யோ
லோதிய வீச னுக்கு முபாதியின் பேதத் தாலே
பேதமு முயர்ச்சி தாழ்வின் பிரிவுமே கற்பி தந்தான். (௯)

தேகவிந் திரிய மாதித் திரளினை யனுச ரித்த
மோகவா தனைபே தத்தான் முளைத்தபே தத்தை யுற்ற
சோகமா ரவித்தை தானே சொல்லிய சீவ பேதத்
தாசின வேறு வன்றி யன்னிய மேது வன்றால். (௧௦)

மிருந்தமுக் குணபே தத்தை மேவுவா தனைபே தத்தாற்
பருந்துள மாயை தானே பரபேத வேது வன்றிச்
செகந்தனி லப்பே ததனைச செய்யவே றேது வில்லை
வருந்துள பரபே தத்தின் வகுப்பினை யுரைப்பக் கேண்மின்.

மருவுமுக் குணங்க ளுக்குண் மாயையின் சத்து வந்தான்
சரிரமாம் யாவ னுக்குச் சகத்தினைச் சங்க ரிக்க
வுரவிய தாம தந்தா னுதவியே யாகு மன்றேன்
றிரிவித மூர்த்தி கட்குட் டிகழுருத் திரனு கின்றேன். (௧௨)

மருவுமுக் குணங்க ளுக்குண் மாயையின் ரூம தந்தான்
சரிரமாம் யாவ னுக்குச் சகத்தினைப் பாலிப் பிக்க
வுரவிய சத்து வந்தா னுதவியே யாகு மன்றேன்
றிரிவித மூர்த்தி கட்குட் டிகழ்ந்திடு மரியா கின்றேன். (௧௩)

மருவுமுக் குணங்க ளுக்குண் மாயையி னிராச தந்தான்
சரீரமாம் யாவ னுக்குச் சகத்தினைச் சிருட்டி செய்ய
வுரவிய ராச் தந்தா னுதவியு மாகு மன்றேன்
றிரிவித மூர்த்தி கட்குட் டிகழ்ந்திடு மயனு கின்றேன். ()

உரைதரு மூர்த்தி கட்கு ளுருத்திர மூர்த்தி வெண்மை
கருதிய வரியென் மூர்த்தி கருமையவ் விரிஞ்சன் மூர்த்தி
ப்ரவிய விரத்த மென்று பகர்ந்தவிவ் விதமே யாகப்
புரையற நினைக்க வேண்டும் யோகமோட் சப்பொருட்டால்.

சத்துவ குணத்தி னாலே சாதமாம் வெண்மை யென்று
மெத்திய ரசோகு ணத்தான் மேவிய திரத்த மென்றுந்
தொத்திய தமோகு ணத்தாற் றொடர்ந்தது கருமையென்று
மித்திர நியமத் தாலே யிவர்களிவ் வண்ண ரேயாம். (கசு)

பரவுமும் மூர்த்தி கட்கும் பரமநா மென்னும் புந்தி
பரவியே யிருப்ப தாலே பலமறை மிருதி மற்றும்
பரவிய புராண மியாவும் பாரத முதல னைத்தும்
பரவுமம் மூர்த்தி தம்மைப் பரமமே யென்று ரைக்கும்.(கள)

சுத்தசத் துவவு பாதித் தொடர்பினன் மூவ ருக்குந்
தத்துவ முணரு ஞானத் தகைமைதா னிருப்ப தாலே
வித்தகப் பரமத் துக்கும் விளம்புமும் மூர்த்தி கட்கு
மொத்திடாப் பேத மில்லை யுண்மையா நோக்குங் காலே. ()

அரனரி யயனென் றிவ்வா றாகிய வுபாதி சார்ந்த
வுருவமாய் நோக்குங் காலை யோதுமும் மூர்த்தி கட்கும்

பரமுடன் பேத முண்டு பரமிவ ராகா சேனு
முறைதரு மூவ ருக்கு ளுருத்திர னுத்த மன்றன். (கக)

ஏதெனி லின்ப ஞான மெவைக்குமே யேது வாகி
யோதிய விருகு ணத்தி னுயர்ந்துள சத்து வந்தைத்
தீதிலா வுருத்தி ரன்றன் றேகமா யடைந்த தாலே
யோதிய வனைவ ருக்கு முருத்திர னுத்த மன்றன். (உ0)

உரைதரு மேது வாலே யுருத்திரன் றனக்கே மெத்தப்
பரமுண ரறிவி லங்கும் பலவித மான மற்ற
வரியயன் முதலாந் தேவர்க் கவ்வறி விவள விலலை
விரிவுற விவ்வர்த் தத்தை விளம்புவா முனிவர் கேண்மின்.

பரவிய சத்து வத்தாற் பரமமாந் தத்து வத்தை
யுரைதரு முருத்தி ரன்ற னுருவமாய் மிகம திப்ப
னரியய னாதி தேவ ரஃதிலாத் தன்மை யாலே
யரியய னாதி ரூப மகமென மிகம திப்பர். (உஉ)

அரியய னாதி தேவ ரமலமாஞ் சத்து வத்தை
யுருவமாய் மருவா நின்ற வுருத்திரன் றன்னை யென்றும்
பரமதத் துவமா மென்றே பாங்குற மதிப்ப ரன்றிச்
சருவதாத் தங்க ளோடே சமமென மதிக்க மாட்டார். ()

உருத்திரன் காரி யார்த்த முருத்திர வபிமா னத்தைக்
கருத்துற வெத்த னத்தாற் கருதுவ னெப்போ தேனும
பரித்திடு மரியே யாதி படிவுடை யபிமா னத்தைத்
திருத்தமா யரியே யாதி தேவர்கண் மதிப்ப ரன்றே. (உச)

அரிய ஞாதி தேவ ரமலமாந் தத்து வத்தை
யுரவிய முயற்சி யாலே யுணருவர் சொரூப மாகப்
பரவிய வுருத்தி ரன்றான் பரமமாந் தத்து வத்தை
மருவுமோர் முயற்சி யின்றி மாசற வனுப விப்பன். (உரு)

சத்துவ மிகுந்த தாலே சந்தத முருத்தி ரற்குந்
தத்துவ முணருமபுந்தி தடையிலாச் சுபாவ மாகுஞ
சத்துவ மிகாத தாலே சாற்றிய வரியா திக்கு
மெத்தரி யாதி புந்தி மேவிய சுபாவ மாகும். (உசா)

ஓதிய நீதி யாக வுத்தம னுருத்தி ரன்றா
ஞதலா லரியே யாதி யமரரை யர்ச்சிப் போர்க்குக்
கோதிலாப் பரம்ப தத்தைக் கூடுதல் விரைவி லில்லை
யோதிய வப்ப தத்தை யொன்றலா மடைவே யாக. (உஎ)

வேதவித் துக்க ளான விமலமா முனிவர் கேண்மி
ஞதியா முருத்தி ரன்ற னர்ச்சனை செய்ப வர்க்குக்
கோதிலாப் பரமப தத்தைக் கூடலாம் விரைவிற் றானே
யோதிய வப்ப தத்தை யொன்றவோ ரடைவு மில்லை. (உஅ)

சத்துவ வடிவ மாகச் சாற்றிய வுருத்தி ரன்றான்
மெத்தவுந் தேவர்க் கெல்லா மேன்மையாய் நிற்போ னென
மித்திற வுறுதிப் புந்தி யேகமா முத்திப் பேற்றை [ஞா
நித்தமா யடைவ தற்கு நிமித்தமாஞ் சீவர்க் கெல்லாம். ()

சத்துவ வடிவ மாகச் சாற்றிய வுருத்தி ரற்கு
நித்தமு மேலா கின்றோர் நிகழரி யாதி யோரென்

ஜித்திற வுறுதிப் புந்தி யீனமாஞ் சம்சா ரத்தை
மெத்தவு மடைவ தற்கு மேவிய நிமித்த மாகும். (௩௰)

பரவுமோ ருவமை யற்ற பரமமாம் பிரமத் துக்கே
யரணரி யயனே யாதி யமரர்கண் மேலோ ரென்று
மருவிய வுறுதிப் புந்தி மயக்கமாஞ் சம்சா ரத்தைப்
புரையுற வடைவ தற்குப் பொருந்திய நிமித்த மாகும். ()

அரணரி யயன்சு ராட்டு மாகிய சம்மி ராட்டும்
விரவிய புரந்த ராதி விளிதரும் பிரம மென்றே
மருவிய வுறுதிப் புந்தி மாசிலா முத்திப் பேற்றை
நரர்களிங் கடைவ தற்கு நண்ணிய நிமித்த மாகும். (௩௨)

அரியயன் றிரியி டத்தி ரைசெனச் செய்த புந்தி
புரையறு பயனை நல்கும் புகன்றவவ் வரசி டத்தின்
மருவிய வமைச்ச புந்தி மாவனர்த் தங்கொ டுக்கும்
பரிசுபோற் பிரம புந்திப் பான்மையுங் கண்டு கொண்மின்.

ஆதலாற் பிரமத் தின்க ணன்னியப் புந்தி செய்த
லேதமா மனர்த்தந் தன்னை யீன்றிடு மைய மில்லை
பேதமாம் பொருளனைத்தும் பேதமில் பிரமமேயென்
றோதமில் பிரம புந்தி யீன்றிடும் புருடார்த் தத்தை (௩௪)

இத்திற மாகி ஞானு மீனமி லுருத்தி ரன்கண்
மெத்தவும் பிரம திட்டி மேன்மையா மற்றோ ரின்க
ணத்திற மேன்மை யாகா தவரிடைப் பரவி ளக்க
நித்தமு மற்ப மாக நிகழ்வதால் வேதி யோரே. (௩௫)

அரியநற் சத்து வந்தா னுந்தர மரனுக் காகும்
வரமிலாத் தீரம தந்தான் வாகிய மன்னோனுக்கா
மருமையி ரும தந்தா னுந்தர மானுக் காகும்
வரமெனுஞ் சத்து வந்தான் வாகிய மன்னோ னுக்காம். ()

அருமையி லிராச தந்தா னுந்தர வாகி யங்க
ளிருமையும் விரிஞ்ச னுக்கா மிந்தவா றறியா மூடர்
மருவுசத் துவகு ணத்தை மாத்திரம் பற்றிக் கொண்டே
யரியுமே லரனுக் கென்றே யறைவரிம் மோக மென்னே. ()

சருவதா வுட்பு றத்துஞ் சத்துவ மிலாத தாலே [ணா
யொருவரும் விரிஞ்சன் றன்னை யுயர்ந்தவ னெனவே யெண்
நரர்களம மயலை விட்டு நவின்றவிவ் வரனே யார்க்கும்
பெருமையான் மேலோ னென்று பேணியேயறியவேண்டும்.

சுருதியான் மிருதி யாலுஞ் சொல்லிய தனுட்டா னித்து
விரிவுறு வெகுசென் மத்தில் விமலமாஞ் சித்த ருக்கே
யரியினு மரனே மேலோ னுனவ னென்னும் புந்தி
மருவிடு மற்றோ ரார்க்கு மதியிது மருவ மாட்டா. (௩௯)

சருவதா மாபா வத்தைச் சார்ந்துள மானி டர்க்கே
யரனினு மரியே மேலோ னுனவ னென்னும் புந்தி
மருவிடு மதனு லன்னோர் மயக்கமாஞ் சம்சா ரத்திற்
சருவதா வுழலா நின்று சகலமாந் துயருஞ் சார்வர். (௪0)

நிருவிகற் பமதே யாக நிகழ்பர தத்து வத்திற்
சருவதா யாவர்க் கேனுஞ் சலனமி னிட்டை யுண்டேற்

பொருவிலா வன்னோ ருக்கே புரியுமோர் முயற்சி யின்றி
யருமையா முத்தி சித்தி யாயிடு மைய மில்லை. (சக)

நிருவிகற் பமதே யாக நிகழ்பர தத்து வந்தான்
கருதில ராகு மென்னிற் களங்கம்யா தொன்று மற்ற
நிருமல நிருவி கார நித்திய போதா னந்த
பரசிவன் றானே சாட்சாத் பரமதத் துவமா சின்றேன்.(சஉ)

அன்னவன் லீலை யாலே யம்பிகா சகித னாகி
மன்னுமுக் கண்ண னாகி மதியரை முடியோ னாகி
யன்னதன் சொரூபா னந்த வனுபவ மிகுந்த தாலே
மன்னிய தாண்ட வத்தின் மாமகிழ் வுடையோ னாகி. (சங)

திரிவித மூர்த்தி யாலுந் தினமுபா சிக்கப் பட்டுச்
சருவமு மறிந்தோ னாகிச் சருவசத் தியுமு டைத்தாச்
சுருதியின் முடியி னாலுஞ் சொல்லொணா மகிமை யோனா
யருளினா லெமையொத் தோரை யாளவே யமையா நிற்பன்.

அரியநா மிவித மூர்த்தி யகிலரின் விசேட மாகச்
சருவதா யாவ னுக்குச் சகந்தனில் விளங்கு மந்தப்
பரசிவன் றானே சாட்சாத் பரமதத் துவமற் றொன்றும்
பரமதத் துவமே யன்று பகர்ந்தன முண்மை யாக. (சரு)

அரியய னாதி யான வமரரை மோகத் தாலே
பரமதத் துவமா மென்று பகருவர் சிலரன் னோர்க்கிங்
கரியநற் கதியே யில்லை யாதலா லமர ரன்னோர்
பரமதத் துவமா மென்னல் பகரல்மாத் திரமே யாகும்.(சசா)

ஆதலான் முன்னு ரைத்த வவ்விதத் திவ்ய மூர்த்தி
யாதொரு பரசி வற்கிங் கிலங்கிடும் விசேட மாகப்
போதவா னந்த வுண்மைப் பூரண வடிவா மந்தச்
சாதுவாஞ் சிவனே சாட்சாத் தத்துவ மற்றோ ரன்றால். (௪௭)

அரனரி யயனென் றிவ்வா றவர்வகுப் புற்ற போதும்
பரனுடை வகுப்பைத் தானே பற்றினோ ரன்றிச் சீவர்
மருவிய வகுப்பைப் பற்றார் மற்றுமே யிவ்வர்த் தத்தை
விரிவுற விளம்பக் கேண்மின் விமலராம் வேதி யோரே. ()

ஓதிய வவித்தை தன்னை யுபாதியா வுடைய சித்தே
கோதுறு சீவ னென்று கூறலா மற்ற தன்றிங்
கோதிய மாயை தன்னை யுபாதியா வுடைய சித்தே
கோதிலாப் பரனு மென்று கூறலா மற்ற தன்றால். (௪௯)

மாயைகா ரியமே யாக மருவுமுக் குணமே தத்தை
யாயதம் முபாதி யாக வடைந்தர னாதி யாமோர்
மாயையே யுபாதி யாக மருவிய பரன்வ குப்பே
யாயவ ரிருப்ப ரன்றி யன்னிய வகுப்பே யாகார். (௫0)

பரனுடை வகுப்பைத் தானே பற்றிநிற் கின்ற தன்மை
சருவதா வரனு திக்குச் சமானமே யான போது
மரியய னனைய ருக்கு மமமோ மரனே மேலோ
னுரைதரு மிவ்வர்த் தத்தி லொன்றுமோ ரைய மில்லை. (௫௧)

ஏதெனி லரிவி ரிஞ்ச ரிவர்தம துருவி னானும்
பேதமா மவதா ரத்தைப் பெற்றதம் முருவி னானுந்

நீதிலா வரனைத் தானே திரமுறப் பூசிக்கின்ற
ராதலா லரனே யன்னோர்க் கதிகனென் றறியலாமே.(௫௨)

ஈதுபோ லுருத்தி ரன்ற னியல்பதா முருவி னோடே
யோதிய வரிவி ரிஞ்ச ரொன்றிய வுருவை யேனும்
பேதமா மவதா ரத்தைப் பெறுமவ ருருவை யேனு
மேதுமே பூசை செய்யா னிதனினு லிவனே மேலோன். ()

அருளினு லுலகர் தம்மி னனுக்கிர கத்தை வேண்டி
யரனுமே யெப்போ தேனு மடைந்ததன் னவதா ரத்தா
லரிமுத லமரர் தம்மை யர்ச்சனை செய்வ னந்த
வரியயன் முதலோர் செய்யு மர்ச்சனை யவ்வா றன்றால். ()

உரைதரு முண்மை யோரா வுணர்வில ரரனு மேதா
னிருவரை யர்ச்சித் தானென் றிவளவு மாத்தி ரத்தைக்
கருதியே மாயை யாலே கலங்கிய மனத்த ராகிச்
சருவதா மூவ ருந்தான் சமானரே யென மதிப்பர். (௫௫)

இப்படி மோகித் தோரா யின்னவர் சமான ரென்றே
செப்புவர் வருந்தி யுந்தான் சிலவர்கள் சிலவர் மற்று
மொப்பிலா வரனின் மேலோ ரோதரி விரிஞ்ச ரென்றே
பற்பல விதமே யாகப் பகருவர் மோகத் தாலே. (௫௬)

அரனொடு சமானத் தன்மை யரியய னிருவ ருக்கு
மருவிடு மென்ப தாக மாயையான் மயங்கு கின்றோ
ரருமகா பாத கத்தை யறவுமே யடைந்தோ ராகி
நரகமாஞ் சாக ரத்தி னடுவினில் விரைவில் வீழ்வர். (௫௭)

அரனினு மரிவி ரிஞ்ச ரதிகரே யாவ ரென்று
புரையுறு மோகந் தன்னைப் பொருந்தியே புலம்பு கின்றோர்
விரிவுறு நரகத் தீயால் விவிதமாய் வெதுப்பப் பட்டுச்
சருவதாத் துன்பஞ் சார்வர் சத்தியஞ் சங்கை யில்லை. (ருஅ)

உரவிய பூனைக் காகு மொன்றிலே யுறுதி போலப்
பரமவத் துவித மொன்றே பற்றிய சிலவ ரிங்கு
பரவுசோ பாதி யான பான்மையா லிருவ ருந்தா
னரனொடு சமான மென்ப ரவரறிந் தவரே யன்றால். (ருகூ)

சிரசுபா தங்க ளியாவுந் தேகமாந் தன்மை யாலே
யொருமையாய் நின்ற போது மோதிய சிரசி னோடே
சருவதீர்ப் பாதங் கட்குச் சாமிய மிலாத தேபோ
ரனொடு மரியா திக்கின் கானசா மியமே யில்லை. (சுo)

ஆனவர்ய் குதமி ரண்டு மகல்வெளி வடிவா னானு
மூனமில் வாயி னோடே யூனமாங் குதத்தி னுக்கிங்
கானசா மியமே யில்லை யந்தவா றரியா திக்கு
மீனமி லரன்ற னோடே யெய்துசா மியமே யில்லை. (சுக)

உரைதரு நீதி யாக வுபாதியைச் சார்ந்து நின்ற
வுருவினு லிங்கெல லோரு மொத்தவ ரென்ப தொண்ணு
தரியயன் முதலோ ரிவ்வா றரனொடு சமமா காரே
லரனினு மன்னோர்க் கெங்ஙன் னதிகமாந் தன்மை சொன்மின்.

சுருதியு மிருதி தானுஞ் சூசகமாம் புராண வாக்கு
மரியய னிந்தி ராதி யகிலரி னுருத்தி ரன்றான்

பரமமாம் வடிவி னாலும் பகர்ந்ததன் வடிவி னாலுஞ்
சருவதா வதிக னென்று சாற்றுதே விவித மாக. (கங)

சுருதியே முதலாம் வாக்கு சொல்லிய வரியா திக்கு
மரனினு மதிகத் தன்மை யறைகுதே யென்னிற் கேண்மின்
பரவிய வந்த வாக்குப் பரமமாம் வடிவி னாலே
யரியய னாதி யோர்க்கு மதிகமாந் தன்மை சாற்றும். (கச)

அரியய னாதி யாக வமைந்துள வடிவி னாலே
பரவிய சுருதி யாதி பகர்ந்தவவ் வரியா திக்கே
யரனினு மதிகத் தன்மை யறைந்திட வில்லை யென்று
முரைதரு விதமே யாக வுத்தமத் தன்மை காண்மின். (கரு)

விரிவுற விளம்பி யென்ன விவிதமாஞ் செந்துக் கட்கு
மரனரி விரிஞ்சர் தம்மி னவதார வுருவ மேலாம்
பரவுமவ் வவதா ரத்திற் பரவிய வன்னோர் மேலா
முரைதரு மன்னோ ருக்கு ளுருத்திரன் மேலோ னாவான். ()

அவனினு மும்மூர்த் திக்கு மாதிகா ரணமாய் நின்ற
சிவனுரு மேலா மத்தின் சிவனெனுஞ் சத்தி யென்னு
மிவிதமாம் பகுப்பு டைந்தா வீட்ண வவுத்தை யுற்றுத்
தவறிலாச் சத்தி யாதி தகைமைசேர் சிவனே மேலாம். ()

இருவிதப் பகுப்பு மற்றே யேகமாய்ப் பூன்ற மான
நிருமல நிருவி கார நித்திய போதா னந்தப்
பரசிவ னவனின் மேலாம் பகர்ந்தவிப் பரசி வற்குப்
பெரியதாய் வேறொன் றில்லை பேசிய துண்மை யேயாம். ()

உரைதரும் பரசி வன்ற னுருவினை யாலோ சித்து
விரிவிலா தொடக்க மாக விளம்பிய வுறுதி கேண்மின்
பரசிவன் றனக்கு வேறாய்ப் பலவிதங் காண்ப தெல்லாம்
பரசிவன் சொரூப மேயாம் பகர்ந்ததி லைய மில்லை. (சுகூ)

பரசிவன் றனக்கு வேறாய்ப் பலவெனக் காணப் பட்ட
வுருவெலாஞ் ஜீவனே யென்றிங் குறுதியாய் வேதாந் தத்தா
பிரிவற வறிப வன்றான் பிரமமாந் தத்து வத்தைப் [ற்
புரையற வரிந்தோ னீதிற் பொருந்துமோ ரைய மில்லை. ()

கருதுவே தாந்த வாக்காற் கற்பித மான யாவும்
பரவதிட் டான மான பரசிவ னென்றே பார்ப்போன்
புரணமா முத்தி சார்வன் புகன்றதி லைய மில்லை
யுரியரே பரமார்த் தத்தை யுள்ளவா றுமக்கு ரைத்தேம். ()

அறிந்திடப் பட்ட ஞால மகிலமு மறிவே யாகச்
செறிந்துள சிவமே யாகுஞ் சிறிதும்வே றில்லை யென்றிங்
கறிந்தவ னியாவ னன்னோ னறிவுருப் பரசி வத்தைச்
செறிந்துடன் முத்த னாவன் சிறிதுமே சங்கை யில்லை. (எஉ)

சுருதியா லூகந் தன்னாற் சுத்தமா மனுப வத்தாற்
றெரிவுறப் பட்ட வந்தத் திரிசிய ஞால மியாவுந்
தெரிவுருச் சிவமே யென்று திடமுற வறிப வன்றான்
பரமமாந் தத்து வத்தைப் பாங்குற வறிந்தோ னாவன். (எங)

சருவதாப் பிரமந் தன்னைச் சகத்தெனப் பார்ப்போன் ஞான
மரியநன் ஞான மாகா தஃதுதான் மயக்க மேயாஞ்

சருவமும் பிரம மென்றே சந்ததம் பார்ப்போன் ஞான
மரியநன் ஞான மாகு மறைந்ததி லைய மில்லை (எச

தெரிந்திடப் பட்ட தாயுந் தெரிந்திடப் படாத தாயும்
பொருந்திய பாவா பாவப் பொருள்வடி வான யாவும்
விரிந்துள பரசி வன்றன் விமலசிற் சொரூப மென்றே
நிரந்தரம் வேதாந் தங்க ணிகழ்த்திய *கருத்தா மென்றும். ()

அருதியின் வசனத் தாலே சொல்லிய படியே யாமு
மருளினு லகில மான வருத்தமு முமக்கு ரைத்தே
முரியரே யிவையை யெல்லா முளந்தனிற் றரிப்பீ ராகிற்
பரமமாங் கதியுங் கட்குப் பாங்குற விங்கே யுண்டாம்.(எசு)

வேறு.

பிரிவு போலப் பிறங்கிய யாவையுந்
தரள வானந்தத் தாண்டவ மாடுநம்
பொருவி லாச்சிவன் பூரண ரூபமென்
றரிய மாமறை யாய்ந்துரைக் கும்பொருள் (எஎ)

இரண்டா மத்தியாயம் முற்றிற்று.

ஆக வத்தியாய மிரண்டுக்குத் திருவிருத்தம். க00.

மூன்றவது

## சுருதிக்கிப் பிரமாணத்துவந் தாபித்து அதன்வழியா யத்துவிதவுண்மையறையும் அத்தியாயம்.

சச்சிதா னந்த மாகச் சாற்றிய சிவனி டத்திற்
சிச்சட வடிவ மான செகமெலாந் தோன்று மன்றேன்
நிச்சல நிருவி கார நிருமல வேக னேனு
மிச்சர வசர மெல்லா மீன்றிடுந் தகைமை யோன்றான். (க)

மந்திர மாம ருந்து மணிமுதன் மகிமை தன்னைச்
சிந்தனை செய்வ துந்தான் செகந்தனி லருமை யாமேற்
சந்தத மனந்த சத்தி சார்ந்தவிப் பரசி வன்ற
னந்தமின் மகிமை தன்னை யறிந்திட வெவரே வல்லோர். ()

நிருமல மானோ னென்று நிகிலமு மீன்றோ னென்று [மின்
மிருமையு மொருவ னுக்கிங் கிசைந்திடா தென்னிற் கேளா
சருவமா னங்க ளுக்குஞ் சாரமா வனாதி யான
சுருதியே யிவித மாகச் சொல்வதால் விரோத மில்லை. (௩)

அரியமா மறை யறிந்த வனகரே பரசி வற்கே
நிருமல நிருவி கார நிர்த்வயத் தன்மை யுந்தான்
பிரிவுறு மிச்ச கத்தின் பிறப்பிருப் பிறப்பை யுந்தான்
பரமமாம் வேதந் தானே பகர்ந்திடக் கண்டோ மன்றோ. ()

நிருவிகா ரத்தி னுக்கு நிகிலமும் படைக்குந் தன்மை
விரவிய திட்ட யுத்தி விரோதமா மென்ன வொண்ணா

கரியரே சூக்கு மார்த்த மறிவதிற் சுருதி தானே
சருவதா மான மன்றிச் சஞ்சல யுத்தி யன்றால். (ரு)

சுருதியா லறியத் தக்க சூக்குமப் பொருளின் கண்ணே
பரவிய யுத்தி யாலோர் பயனிலை யான போதும்
விரவிய சுருதி யோடே விரோதமே வாதி ருந்தாற்
சுருதியின் சகாய மீதாஞ் சுதந்தர மான் மாகா. (சு)

அருமறை யனாதி யாகு மஃதுதான் சிவனு லிங்கு
புரையற விளங்கு மென்பர் புகலுமீ மாஞ்சை யோர்ந்தோர்
பரவிய மறையுண் டாக்கப் பட்டதாஞ் சிவனு லென்று
விரிவுறு தர்க்க மோர்ந்தோர் விளம்புவர் வேதி யோரே. (எ)

சொன்னவே தத்தி னுக்குச் சுபாவமாந் தோட முந்தா
னன்னிய தோட முந்தா னமைந்திடாத் தன்மை யாலே
பன்னிய விரும தத்தும் பகர்மறை மான மேயாம்
பின்னுமிவ் வர்த்தந் தன்னைப் பிறங்கவே பேசக் கேண்மின்.

அன்னது மெய்ம்மை யான வருத்தமே யறைவ தாலே
தன்னதாந் தோட மில்லை தானனு தியதா லென்று
மன்னிய தோட மில்லை யாதலான் மறையனாதி
யென்னுமிம் மதத்தில் வேத மிலங்கிய மான மேயாம். (கூ)

சொன்னவே தத்தி னுக்குச் சூக்கமாய் நோக்குங் காலை
தன்னதாந் தோட மில்லை தானஃ திருக்கு மாகி
லின்னதா லிசைக்கப் பட்ட விவ்விவ கார மெல்லா
நன்னிலை யடையா வண்ண நாசமே யடையு மன்றே. (கo)

அருமறை படைத்தோ னாக வன்னிய னிலாத தாலே
யரியரே மாம றைக்குங் கன்னிய தோட மில்லை
சுருதியிவ் விதமே யாகச் சுபாவமாய் மான மித்தைப்
புரையுறு சிலவ ராத்தன் புணர்வினுன் மான மென்பர். (கக)

சுருதிதான் சுபாவமு மாகத் துட்டமாய் நின்ற போதும்
புரையிலா வாத்தன் றன்னின் புணர்வினுன் மான மாமென்
றுரைதரும் வார்த்தை யுநதா னோதன்மாத திரமே யாகு
மரியரே சூக்க மாக வாய்ந்துதா னோக்குங் காலை. (க௨)

புரையிலா வன்னி யன்றன் புணர்வினுற் சுருதி யெங்ஙன்
னரியரே மான மாகு மன்னிய சமபந் தத்தா [ன்
லொருபொரு ளிடத்தி லொன் றிங் கொன்றுமே லஃத லற்றி
மருவிய மயக்க மன்றி மற்றதன் சுபாவ மன்றே. (க௩)

ஒருசபர் குசுமந் தன்னி லுலோகிதம் படிகத் தின்கண்
மருவினு மயக்க மன்றி மற்றதன் சுபாவ மாகாப்
பெரியதீச் சம்பந் தததாற் பிறந்துள விர்த்தங் கல்லின்
மருவினு மயக்க மன்றி மற்றதன் சுபாவ மாகா. (க௪)

ஓதுவர் நோக்குங் காலை யொன்றிலொன் றின்வி ளக்கங்
கோதுறு மயக்க மேயாங் குறைவிலா வேதி யோரே
யாதலா லாதத னென வன்னியன் சம்பந் தத்தால்
வேதமா மான மென்று விளம்புதல் வீணே யாகும். (க௫)

ஓதிய நீதி யாக வுலகுள சத்த மெல்லாந்
தீதறத் தானே தானுய்த் திகழ்ந்திடு மான மாகிற்

சூதூறு மனாத்த னாலே சொல்லிய சத்த முந்தான்
யிதலின் மான மாக வேண்டுமே யென்னிற் கேண்மின். ()

புகன்மறை தனக்க னாத்தன் புணர்வினாற் சுபாவ மாகத்
திகழ்வுறு பிரமா ணத்வந் தெரிவற மறைந்த தாகு
மகுதினா லனாத்த னாலே யறைந்திடுஞ் சத்த மெல்லா
நிகழ்வுறு மான மாகா நிமலராம் வேதி யோரே. (கஎ)

இந்தவா மறைய னாதி யென்றிடு மிம்ம தத்திற்
சுந்தர மான வேதஞ் சுதந்தர மான மாகு
மிந்தமா மறையை யீச னிசைத்தவ னெனு மதத்துஞ்
சந்தத வாத்த னீசன் சாற்றிய மறைமா னந்தான். (கஅ)

மருவுரா காதி யின்றி மாவருட் கடலே யாகிச்
சருவமு மறிந்தோ னாகிச் சாருமா வரண மின்றிப்
புரையிலாப் பரசி வற்கோர் புரையுமே யிலாத தாலே
சருவதா வன்னோன் றானே சாலவு மாத்த னானோன். (ககூ)

சருவமாந் துகளு முற்றுச் சாலவுங் கருணை யற்றுப்
புரையுறு மனமு டைத்தாய்ப் பொருந்துமற் பஞ்ஞ னான
புருடனே புரைக ளெல்லாம் பொருந்தலா லனாத்த னவ [ன்
னுரைதரும் புரைக ளின்றி யொளிர்ந்திடுஞ் சிவனே யாத்த

நிகழுமெவ் வீசன் றன்னை நினைந்தது மாத்தி ரத்தாற்
சகலமா மலமுற் றோருஞ் சாலவு நிமல ராவர்
மிகவுமே நிமல னான மெய்ம்மைசொ லவ்வீ சன்றன்
பகருமா மறையு மென்றும் பரமமாம் பிரமா ணந்தான். ()

ஆதலா லீரும தத்து மருமறை மான மேயா
மீதிலோ ரைய மில்லை யிவற்றினு ளெமக்கி சைந்த
தீதாதிடக் கேண்மின் வேத மோரந்திடு லுறுதி யேயா
தீதிலாச சிவனி வற்றைத் திகழுவே விளக்கி வைப்பன். ()

வீதலில் சிவனுல் வேதம் விளங்கிய தன்மை பற்றி
யீதினை யீசன் றானே யிசைத்தவ னென்றுரு சொல்லை
யோதுவார் வேத மென்று முண்மைசொல் மான மேயா
மாதலால் வேதஞ் சொன்ன வகிலமாம பொருளு முண்மை.

பரசிவ னிருவி காரன் பரமவத் துவித னென்றுங்
கருதிய ஞால மெல்லாங் கற்பித மவனு லென்றுந
தெரிவுற வுரைதந்தோ மன்றோ திரிசிய மான ஞாலஞ்
சருவமுந திருககாய் நின்ற சங்கரன் வடிவே யாகும். (௨௪)

திரிசிய மான தெல்லாந திருக்கினிற் கற்பி தந்தா
னிருமைசோ சொப்ப னத்தி லிவ்விதங் கண்டோ மன்றோ
பரவிய கற்பி தந்தான் பரவதிட டான மேயா
மரியரே ரச்சு சாப்ப மாதியி லிதுவே கண்டோம். (௨௫)

பரவதிட் டான மான பரசிவ னிடத்தின் மாயா
நிருமித மான ஞால நிகிலமு மாயுங் காலை
நிருமல நிருவி கார நித்திய போதா னந்த
சொரூபமாஞ் சிவனே யாகுஞ் சுருதிச மதமு மீதே. (௨௬)

தெரிவுருப் பரசி வற்குந் திரிசிய ஞாலத் திற்குஞ்
சருவதா விரோதந் தானே சாரலா லிந்த ஞால

பொருசிவன்வடிவேயென்னலொவ்வுமெவ்விதமென்றிவ்வா
றுரைதருஞ் சங்கைக் கெல்லா மொன்றுமே யிடமிங் கில்லை.

சுருதிசம் மதமி லாமற் சொல்லிய பொருளிற் சங்கை
பரவுமே யன்றி வேதம் பகர்ந்ததிற் சங்கை யில்லை
சுருதிசம் மதமே யாகச் சொன்னயா காதி தன்மம்
புரையென வவற்றிற் சங்கை புகலுவ ரொரு முண்டோ.(உஅ)

எதுபோல் வேதந் தானே யிருமையாஞ் சகமனைத்தும்
போதவா னந்த வுண்மைப் பூரணச் சிவனே யென்றிங்
கோதலா லிவ்வர்த் தத்தி லொன்றுமே சங்கை யில்லை
வேதமிங் குரைத்த தெல்லாம் விமலரே யுண்மை போாம்.()

அரியரே விரோத மாக வமைந்துள மருந்து ரோக
மிருமையுஞ் சாத்தி ரத்தா லிசைத்திடப் படுவ தேபோ
லொருமையாம் பரசி வன்ற னுருவமு நானு வாக
விரிவுறுஞ் சகமும் வேதம் விளம்பிய பொருளே யாகும். ()

அதலாற் பரசி வன்ற னகண்டமாஞ் சொரூபமீதும்
பேதமா மிச்ச கத்தின் பிறப்பிருப் பாதி மீது
மீதலாற் பரோட்ச மாக விசைந்தசொர்க் காதி மீது
மேதமில் வேதந் தானே யெவையினு நமக்கு மானம்.(௩௧)

சுருதியாம் பிரமா ணத்தாற் சொன்னவா பரமே சர்க்கு
நிருவிகா ரமதாம் ரூப நிகிலமாஞ் சகத்து ரூப
மிருமையு மொவ்வு மென்றோ மினியிரு மாயை யாலே
யுரைதரு முபய முந்தா னெவ்வுமா றுரைப்பக் கேண்மின்.

அரியரே தேவ தேவர்க் ககடித கடனஞ் செய்யும்
பெருமைசேர் மாயை யென்று பெயருள சத்தி யுண்டு
பரவுமச் சத்தி யாலே பரமனுக் கிங்கு ரைத்த
சருவமு மொவ்வு மீதிற் சங்கையா தொன்று மில்லை. (௩௩)

துகளிலாப் பரசி வத்திற் றோற்றமாத் திரமாய் நின்ற
பகருமிம் மாயா சத்தி பரசிவ வசமே யாகி
யகடித கடனஞ் செய்யு மதனினாற் பரசி வத்திற்
சகலமுங் கடித மாகுஞ் சங்கையா தொன்று மில்லை. (௩௪)

அகடித கடன மெல்லா மமைத்தவிம் மாயா சத்தி
துகளிலாப் பரசி வத்திற் றோற்றுமென் பதுவு மற்று
மகிலமும் வேதஞ் சொல்லி யறிந்திடத் தக்க தாகுந்
தருமறை சொல்வ தெல்லாந் தத்துவ மெனவே கொள்வீர்.

எதுமே சங்கை செய்ய விடமிலா வேதாந் தத்தி
லேதமாஞ் சங்கை செய்வோ னிங்கதப் பதித னாவ
னாதலால் வேதி யோரே யகிலமுந் தூர விட்டு
வேதமா மான மொன்றை விருப்புட னம்ப வேண்டும். ()

பேதமாம் ரூபந் தன்னைப் பிறங்கவே காண்ப தற்கு
வீதலில் சட்சு வொன்றே விசேடகா ரணமா மன்றோ
வீதுபோற் பிரமங் கன்ம மெவையுமிங் கறிவ தற்கு
வேதமா மான மொன்றே விசேடகா ரணமா மென்றும். ()

பேதமாம் ரூபந் தன்னைப் பிறங்கவே காண்ப தற்கு
வீதலி னாசி யென்றும் விசேடகா ரணமா காதே

யீதுபோற் பிரமங் கன்ம மிவையெலா மறிவ தற்கு
மோதிய யுத்தி தானே யுற்றகா ரணமா காதே. (௩௰௮)

அரியரே யதனால் வேத மறைந்தவா றாயுங் காலை
பரசிவ னகண்ட மான பரமவத் துவித ரூப
னிருமல னிருவி கார னித்திய சுத்தா னந்த
னொருமையா வெவ்வி டத்து மொளிர்சிதா காச மானோன்.

ஆகினு மாயா சத்தி யமைந்தவப் பரசி வத்தி
லேகமி லிந்த ஞால மெவையுமுற் பத்தி யாதி
மோகமா யடையு மீது முழுவது மாயுங் காலை
சோகமி லகண்டா னந்த சொரூபமாஞ் சிவமே யாகும். (௪௰)

இப்படி வேதந் தானே யேகமாம் பரசி வற்கிங்
கொப்பிலா நிருவி கார வுருவுமிச் சகத்தா கின்ற
பற்பல வுருவு மியாவும் பரமெனப் பகர்த லாலே
செப்பிய விவ்வர்த் தத்திற் சிறிதுமே சங்கை யில்லை. (௪௰௧)

நிருவிகா ரத்தி னுக்கு நிகிலமாம் விதத்தி னாலும்
விரிசக வடிவ மாக விளங்குத லொவ்வா தென்றிங்
குரைதரும் யுத்தி யாலே யோதிய பரசி வன்றன்
பெருமையை யாவ ராலும் பேசுவ தரிதே யன்றோ. (௪௰௨)

உரியரே யிவித மாக வோதிய பரசி வன்றன்
பெருமையை யறிவ தற்கும் பிறங்கவே பகர்வ தற்குஞ்
சருவதா வென்ற னக்குச் சத்தியே யில்லை யந்தப்
பரசிவன் மகிமை தன்னைப் பகர்ந்திட வாரே வல்லோர். (௪௰௩)

பரமவத் துவித மான பரமமாந் தன்ரூ பத்தைச்
சருவதா வனுப விந்தே சகலமாஞ் சகரூ பத்தைப்
பரவியே பார்ப்போ னான பரசிவ னொருவ னேதன்
பெருமையை யறிவ தற்கும் பேசுவ தற்கும் வல்லோன். ()

அன்னியர் வல்லை ராகா ரன்றியும் வேத முந்தா
னின்னசிற் பரசி வத்தோ டிசைந்துதான் பொருளை யெல்
துன்னியே விளக்கு மன்றிச் சுதந்தர மாய் விளக்கா [லாந்
மின்னிய வன்னி தன்னை மேவயப் பிண்ட மேபோல். (சரு)

அரியரே யயத்தி னோடே யக்கினி புணர்வ டைந்து
தரணியிற் றகிக்கு மாபோற் றயங்கிய சிவனு மென்றும்
புரையிலா வேதத் தோடே புணர்வினை யடைந்தே யெங்கும்
பரவிய பொருளை யெல்லாம் பாங்குற விளக்கி வைப்பன். ()

நிருமல் வீசன் சாமா னியவறி வாத லாலே
யுரைதரும் வேத மாகு முபாதியோ டொன்றி டாமற்
சுருதியாம் பிரமா ணத்தாற் சொல்லிய தரும மாதிப்
பொருளினை விளக்க மாட்டான் பொருவிலா வேதி யோரே.

வேதமுஞ் சடம தாலே விமலசிற் சிவனை யன்றி
யேதினு மான மாகா தெனறுமே யாத லாலே
போதமா மீச னோடே புணர்வினை யடைந்தே வேத
மேதமில் பிரமங் கன்ம மெவையினு மான மாகும். (சஅ)

அரியரே சொன்ன வர்த்த மறவுமே ரகசி யந்தான்
பரவிய விந்த வர்த்தம் பற்றிய வடைவைக் கேண்மின்

பெருமைசேர் மேரு வின்பாற் பெருகிடு தவம்பு ரிந்தேன்
பரசிவன் றன்னைக் கண்டேன் பகர்ந்தன னிஃதை யன்றோன்

சருவமாஞ் சகத்தி னுக்குஞ் சற்குரு வான சம்பு
வருளினு லிவ்வர்த் தத்தை யன்றுநா னறிந்தோ னேனன்
சருவநா யகனு மந்தச் சம்புவி னுஞ்ஞை யாலே
சுருதிசம் மதமா மிந்தச் சூதசங் கிதையுஞ் சொன்னேன். ()

சருவநா யகனு கின்ற சங்கர னுஞ்ஞை யாலே
யரியமா வேதி யோரே யற்பமா மியானுங் கட்கும்
குருபர னேன னன்றோ குறைவிலாப் பரசி வாஞ்ஞை
தரணியி லியாவ ராலுந் தாண்டிடத் தகாத தன்றோ. (ருக)

அரியரே சிவாஞ்ஞை யாலே யரிவிரிஞ் சன்வி ராட்டுப்,
பரவிய சம்மி ராட்டுப் பகர்சுராட் டாதி யானோ, ரொரு
பொரு ளிடத்தி லோர்கா லுற்பவித் தடங்கு கின்றார், கரு
தொணுச் சிவாஞ்ஞை தன்னைக் கடந்திட வெவரே வல்லோர

ஈசனெவ் வாஞ்ஞை யாலே யீனமா மொட்டை பன்றி
வேசரி முதலு மற்றும் விவிதமாந் தருவு மிங்குப்
பேசரி விரிஞ்ச னுதி பிறங்கிய வுருவ மாகு
மாசிலவ் வாஞ்ஞை தன்னை மாற்றிட வல்லோர் யாரே. ()

ஆதலாற் பரசி வன்ற னுஞ்ஞையா லென்ற னக்குங்
கோதிலாக் குருவாந் தன்மை கூடலா முங்க ளுக்கு
மேதமில் சீடத் தன்மை யிசையலா மைய மில்லை
சோதியாஞ் சங்க ரன்றான் சுதந்தர னன்றோ வென்றும். ()

பரசிவ னடியா ரந்தப் பரசிவ னடியார் தம்மை
மருவிய வடியார் தாமு மாசுதந் தரரே யாகிற்
சுருதிகள் புகழு மீசன் சுதந்தர னென்ப தற்கு
விரிவுற வாரை யேனும் வினவவேண் டிடுமோ சொன்மின்.

இதஞ்செயு மமுதந் தன்னை யெஞ்சிவ னுண்டி டாமல்
விதம்வித மாக நின்ற விவிதமா முயிர்க ளுய்ய
வதஞ்செயுங் காள கூட மாகிய விடத்தைத் தானே
சுதந்தரத் தன்மை யாலே சோர்விலா துண்டா னன்றோ. ()

சருவநா யகனு மீசன் றன்னுடைச் சுதந்த ரத்தால்
விரவிய விரிஞ்சன் சென்னி விழுந்திடச் செய்தான் மற்று
மரியுடை யுதிரந் தன்னை யறவுமே பெருகச் செய்தான்
சுருதிகள் புகழு மீசன் சுதந்தர மென்ன சொல்வேன் ()

அரியரே யந்த வீச னருளினு லகில முமியான்
விரிவுற வழிந்தேன் கையுள் வில்லுவக் கனியே போலப்[தே
பொருவிலவ் வருளா லுண்மைப் பொருளெலா முமக்குரைத்
னருளிலா திவ்வர்த் தத்தை யாவர்தா மறைய வல்லோர். ()

## இக்கவிமுதல் பரமாத்துவிதஞானம் பகர்தல்.

ஆதலா லான்மா னுன்ம வடைவினை யறிவி வேகி
யேதமா மனுன்மக் கூட்ட மியாவையு மறவே தள்ளி
வேதமோ தியவா றென்னுல் விளம்புமத் துவிதான் மாவைப்
பேதியாச் சிரத்தை யோடே பிரிவற வறிய வேண்டும்.(௫௧)

ஓதுமத் துவித ஞான மொழிந்துமற் றொன்றி னாலு
மேதமில் முத்தி சித்தி யில்லையி துறுதி யேயா

மாதலா லகண்டா னந்த வமலவத் துவித வான்ம
போதமே யடைமி னீரும் பொருவிலா விவேகராவீர். (௬௰)

பரசிவ னருளி ஞலே பரமவத் துவித ஞான
மரியரே சுவானு பூதி யாகவே யென்ற னக்குச்
சருவதாச் சித்த மேயாஞ் சாற்றுமிஞ் ஞானத் திற்கே
யரியமா மறையே யாதி யகிலமும் பிரமா ணந்தான். (௬௧)

சுருதியான் மிருதி யாலுஞ் சூக்கமாம் புராணத் தாலுஞ்
சுருதியை யனுச ரித்த சுத்தமாந் தர்க்கத் தாலும்
பரமவைத் துவிதந் தன்னைப் பழுதறப் பற்ற வேண்டும்
புரையுறுந் தர்க்கத் தாலே புகன்றதைக் கெடுக்கவொண்ணு.

பரமமாம் வேதஞ் சொன்ன பரமவத் துவிதந் தன்னைச்
சருவதா வுள்ளந் தன்னிற் றரித்திட வலியற் றோரா
வரையிலா மோக முற்ற வாதியர் சிலவ ரென்றும் [ல்வர்
பொருளலாச் சகத்தின் பேதம் பொருளதா மெனவே சொ

ஓதுபப் பேத மெய்யே லுபசிட மியாவுஞ் சொன்ன
போதவத் துவித மான பொருளினுக் கானி நேரு
மாதலான் மோக முற்ற வன்னவர் வேதஞ் சொன்ன
கோதிலத் துவிதந் தன்னைக் குறைவற வறிந்தோ ரன்றால்.

அருமறை யொன்றி ஞலே யறிந்திடத் தக்க தான
பரமவத் துவிதந் தன்னைப் பகர்மறை நம்பா மூடன்
சருவதா வறிவ தற்குச் சமர்த்தனே யலன்மா தேவன்
கருணையான் மறையே நம்புங் கருத்துளோ னறிய வல்லோன்

உரியரே பேத வாத மோதிய தொவ்வ மாட்டாப்
பரமவத் துவித மாகிப் பரவிய சிவனை மற்றும்
பிரிவுறச் சிலவர் பின்னா பின்னாய் நிற்போ ராகப்
பெருகிய சிரமங் கொண்டு பேசுவ ரதுவு மொவ்வா. (௬௬)

பேதமோ டபேத மாகப் பேசிய விவ்வர்த் தத்திற்
பேதமெவ் விதத்துஞ் சித்தி பெற்றிடு மாகி லித்த
வாதமொவ் விடலாம் பேதம் வருந்தியுஞ் சித்தி யாதா
லோதிய விந்த வாத மொவ்விடா தொருகா லத்தும். (௬௭)

ஏதொரு வாதி யாலு மிசைத்தவிப் பேதந் தன்னை
நீதியா யிவித மென்று நிரூபணஞ் செய்ய வொண்ணா
தாதலாற் பரசி வத்துக் கன்னிய மணுவு மில்லை
யோதுமத் துவிதந் தானே யுண்மையா மற்றுங் கேண்மின்

துகளிலா வேதந் தானே துவிதஞா னத்தி னாலே
யிகல்பய முண்டா மார்க்கு மேகஞா னத்தி னாலே
சகலமா மோகஞ் சோகஞ் சாந்தமா மென்றா வாக்கா
னிகழுமத் துவிதந் தன்னை நிலைமையா நிகழ்த்து தன்றோ. ( )

ஆதலால் வேதாந் தத்தி னகிலமாம் வசனத் துக்கு
மோதுமத் துவிதந் தானே யுண்மையா மர்த்த மாகு
மீதலால் வேறோ ரர்த்த மிருக்குமேற் றுவித நிந்தை
சூதிலத் துவிதந் தன்னின் றுதியிவை யிரண்டுங் கூடா. (௭௦)

துகளிலா வேதந் தானே துவிதமே பயமா மென்று
நிகழுமத் துவிதந் தானே நித்திய மபய மென்று

மிகழ்வையுந் துதியை யுந்தா னிசைக்குமே யாத லாலே
பகருமத் துவிதந் தானே பரமவே தாந்த வர்த்தம். (௭௧)

தகைமைசேர் பரசி வன்றன் றடையிலா வருளி னாலே
மிகவுமே சித்த சுத்தி மேவிய புருட ருக்கே
பகர்மறை முடியின் வாக்காற் பரமவத் துவித ஞான
மகிழ்வுடன் செவ்விதாக மனத்தினி லுற்ப விக்கும். (௭௨)

பொருவிலாப் பரசி வன்றன் பூரண வருளி ருந்தாற்
பரமவத் துவிதந் தோன்றும் பாங்குற வஃதின் றென்னிற்
சருவதா மற்றெ தாலுஞ் சாற்றுமத் துவிதந் தோன்று
தரியுரே பரசி வன்ற னருண்மிக வரிய தன்றே. (௭௩)

ஆதலால் பரசி வத்தை யறியவிச் சித்த தீரன்
வேதமே சொன்ன மார்க்கம் விரும்பிமற் றுள்ள மார்க்க
மேதுமே தூரத் தள்ளி யேகவத் துவிதா னந்த
போதமாஞ் சிவரூ பத்தைப் புரிவுடன் பொருந்த வேண்டும்.

வேறு.

அரிய தாண்டவ மாடிய நஞ்சிவன்
சருவ மான சகத்தையு மீன்றன்
னிருவி கார னிரஞ்சன னியாவுமச்
சொரூப மேயெனச் சொல்லிடு மாமறை. (௭௫)

**சூதகீதையின் மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.**

**ஆக அத்தியாயம் மூன்றுக்குத் திருவிருத்தம் - ௧௭௫.**

நான்காவது

## அத்தியாரோபாபவாத நியாயத்தால் அத்துவிதவுண்மையறையு மத்தியாயம்.

பரமவத் துவித மான பரத்தினிற் சகசி ருட்டி
சுருதியின் வலியி னலுஞ் சொல்லிய மாயை யானு
முரியரே யொவ்வ லாமென் றேதின முன்ன மீற்றும்
விரிவுற வவற்றைத் தானே விளம்புவா மிங்குங் கேண்மின்.

அகிலமாஞ் சகத்தின் கர்த்தா வாகிய வீசன் முன்ன
மகடித கடன மியாவு மமைப்பதாய்ப் பூர்வ கற்பச்
சகலவா தனையு முற்ற தன்னுடை மாயை யோடே
மிகவுமே யபேதந் தன்னை மேவியே நின்றான் பின்னும். (உ)

அரியசேர் மாயை யோடே யபின்னனு நின்ற வீசன்
பரவிய கால கன்மப் பக்குவ மனுச ரித்துப்
பிரிவுறு மாயை யென்றும் பிறங்கிய வீச னென்று
மிருவித பேதந் தனனை யிவ்விதங் கற்பித் தானல். (ங)

கற்பித மான விந்தக் கருதொணுப் பேத மென்று
மொப்பிலா வபேதந் தன்னை யொன்றுமே விரோதஞ் செய்
கற்பித மான தெல்லாங் கருதிடிற் பொருளா காதாற் [யாக்
செப்பிய வபேதத் துக்குச் சிறிதுமே விரோத மில்லை. (ச)

போதமா மீசன் பின்னும் பூருவ நோக்கா நின்ற
வாதனை வலியி னுலே வரையிலாச் சகத்தை யெல்லாம்

பேதமாய் ிருட்டி செய்யப் பேணியே நூரு வம்போ
னீதியா லோருகு வானுய் நின்றனன் மாயை யாலே. (௫)

பின்னரு மாயை தன்னிற் பிரிந்தமுக் குணமே தத்தா
லன்னவ னரனே மாலே யயனேயுஞ் சிருட்டி செய்து
சொன்னவ ரிதயத் துள்ளே சூக்கமா மந்த ரியாமி
யென்னுமோர் வடிவ மாக வேகமாய்ப் பிரவே சித்தான் (௬)

முனிவரே யரனே யாதி மூவரும் பரத்தி னேடே
நனியுறும் பேத புந்தி நண்ணிய வேது வாலே
பனவருஞ் சகசி ருட்டி பாலன நாச மூன்று
மனையவர் செய்வ ரென்றே யறையலாம் பொதுவே யாக. ()

அன்னவர் வெவ்வே ருக வடைந்ததம் வடிவி னலே
பன்னிய சகசி ருட்டி பாலன நாச மூன்றிற்
பின்னமா மொன்றை யொன்றைப் பிரிவுறச் செய்வ ரன்றிச
சொன்னவிம் மூன்றுஞ் செய்யார் சுத்தமா வேதி யோரே.

அரியரே மும்மூர்த் திக்கு மாதிகா ரணமாய் நின்ற
பரசிவன் சூக்க மான பஞ்சபூ தங்க டம்மை
விரிவுறச் சிருட்டி செய்வன் விளம்பிய விரிஞ்ச னுக்குப்
பரவிய சூக்க பூத பஞ்சக சிருட்டி யில்லை. (௮)

கருதிய சமட்டி யந்தக் கரணமுஞ் சமட்டி யாக
மருவிய பிராணன் ருனு மற்றுமே சமட்டி யான
விருவித ஞான கன்ம விந்திய மிவைய னைத்து
மரியரே மும்மூர்த் திக்கு ளரன்றனு லமைக்க லாகும். (௧௦)

உரைதரு மும்மூர்த்திக்கு ளுருத்திரன் மேல தாலே
திரிவித மூர்த்தி கட்குட் டிகழுருத் திரனுற் றனே
கருதிய சமட்டி யந்தக் கரணமா நியினுற் பத்தி
மருவிய தென்ன லாகு மாசிலா வேதி யோரே. (௧௧)

ஆகினு மும்மூர்த் திக்கு மாதிகா ரணமாய் நின்ற
வேகமாம் பரசி வன்று னிந்தமூர்த் திகடம் மாலே
யாகிய சிருட்டி தன்னி லனுகூத னுத லாலே
யேகமாம் பரசி வன்று னியாவையுஞ் சிருட்டி செய்வோன்.

ஆதியாம் பரசி வத்தோ டபேதஞா னத்தி னாலே
யோதிய மும்மூர்த் திக்கு முபசார மாக விந்தப்
பேதமாஞ் சகசி ருட்டி பேசலா மாயுங் காலை
யேதுமே சிருட்டி செய்வோ னேகமாம் பரசி வன்றன். ()

பரவிய சமட்டி தன்னைப் பகர்ந்தவர் படைத்த பின்னர்க்
கருதுமச் சமட்டி யந்தக் கரணமே யாதி தம்மை
யுரவிய வுபாதி யாக வுற்றுநின் றந்த வீசன்
விரிவுற விவித மான வியட்டியைச் சிருட்டி செய்தான். ()

பரசிவ னுஞ்ஞை யாலே பரவிய சமட்டி தன்னிற்
சருவதே வதையு முண்டாஞ் சார்ந்தமுற் கற்ப மேபோ
லிருமையா மிவற்றை முன்ன ரியம்பிய மால்பா லிப்பன்
மருவிய வவற்றை மிக்க மூகைமசே ரரன ழிப்பன். (௧௫)

கலையுறு சமட்டி யந்தக் கரணத்தி லுண்டா யாங்கே
யிலகுதே வதைதா னென்று மிரணிய கர்ப்ப னுகுஞ்

சலனமார் பிராணன் றன்னிற் சமட்டியி லுண்டா யாங்கே
யிலகுதே வதைதா னென்று மியம்பியசூத்தி ரான்மா. ()

உரியரே சமட்டி யாக வுதித்துள சோத்தி ராதிக்
கருவியி லுண்டா யாங்கே கலந்ததே வதையைக் கேண்மின்
பரவிய திக்கு வாயு பானுதான் வருணன் பூமி
நிரையதா விந்த வைந்து நிகழுந்தே வதையா மன்றே. (கஎ)

உரியரே சமட்டி யாக வுதித்தவாக் காதி யான
கருவியி லுண்டா யாங்கே கலந்ததே வதையைக் கேண்மி
னுரியதீ யிந்தி ரன்று னுபேந்திரன் பிரமன் கால
னிரையதா யிந்த வைந்து நிகழுந்தே வதையா மன்றே. ()

உரைதரு சமட்டி தன்னி லுதித்ததே வதைக டாமே
கருதிய வியட்டி யான கருவிக ளனைத்தை யுந்தா
னிரையதா யெவ்வி டத்து நியமனஞ் செய்வ தாக
மருவுதே வதைக ளாகு மாசிலா வேதி யோரே. (கக)

கருதிப வியட்டி யந்தக் கரணமார் விருத்து நான்குக்
குரியதே வதையைக் கேண்மி னுளிர்ந்திடு மிந்து மற்றுஞ்
சுரகுரு வுருத்தி ரன்றன் சுத்தமா முமைதா னென்று
நிரையதா யிந்த நான்கு நியமனத் தெய்வ மாகும். (உ0)

உரியரே யாயுங் காலை யோதிய திக்கே யாதி
நிரையதாந் தெய்வங் கட்கு நியமனஞ் செய்யுந் தன்மை
மருவிடத் தக்க தில்லை மகிமைசேர் பரசி வன்றன்
சருவமாந் தெய்வங் கட்குஞ் சந்தத நியந்தா வானேன். ()

அரியரே சூக்க பூத மதனுடைக் காரி யங்க
ளிருமையு மீசன் றானே யிவ்விதம் படைத்த பின்னர்ப்
பரவிய வாகா சாதி பஞ்சமா தூல பூதங்
கருதிய வந்தப் பூத காரிய மெவையுஞ் செய்தான். (௨௨)

பரசிவ னுஞ்ஞை யாலே பஞ்சமா தூல பூத
முரைதரு சூக்க பூதத் துதித்ததா முன்கற் பம்போ
லரியரே யந்தப் பூதத் தனேகவண் டங்க ளுண்டாம்
பரவுமவ் வண்டங் கட்குட் பலவித வுலக முண்டாம். (௨௩)

சேதன ரான சீவர் செப்பிய வுலகத் துண்டா
மோதிய சீவ ருக்கிங் குற்றபோ கார்த்த மாகச்
சேதன மிலாத தாகச் செறிந்துள பௌதி கங்கள்
பூதவா தனேகன் மத்தாற் பூருவம் போல வுண்டாம். (௨௪)

உரைதருஞ் சீவ ரெல்லா முலகினிற் போத்தா வாவர்
பெருமைசேர் சிவனே போகப் பிரதனுஞ் சகம னைத்தும்
பரவுபோக் கியமே யாகும் பற்றிய சுகதுக் கத்தின்
மருவிய வனுபவந்தான் மன்னியபோக மாகும். (௨௫)

அரியரே போத்து ராதி யாகவே யறையப் பட்ட [ன்
சருவமுஞ் சொப்ப னத்திற் றன்னிடைத் தோன்று மாபோ
மருளறுந் தேவ தேவன் மாயையாற் சாக்கி ரத்தும்
பரவிய போத்து ராதிப் பகுப்பெல்லாந் தன்னிற் றோன்றும்.

மாயைகா ரியமே யாக மருவிய பொருள னைத்து
மாயநல் விசாரத் தாலே யாய்ந்திடின் மாயை யேயாந்

தூயவே தாந்த மெல்லாந் தோன்றுகா ரியம னைத்து
மாயகா ரணமே யென்றிங் கறுதியா யறையு மன்றோ. (உஎ)

கருதொணா விச்ச கத்தின் காரண மாயை யுந்தான்
பரவதிட் டான மான பரத்தினிற் கற்பி தந்தா
னரியரே யாத லாலே யாய்ந்திடி லந்த மாயை
பரவதிட் டான மான பரசிவ னுருவ மேயாம். (உஅ)

தரணியிற் சுத்தி யாதி தன்னிலே யாரோ பித்த
விரவிய ரசித மாதி விவிதமு மாயுங் காலை
பரவதிட் டான மேயாம் பரிசுபோற் பரசி வத்தின்
மருளுமா ரோப மான மாயையும் பரசி வன்றான். (உகூ)

விரவிய விந்த மாயை விவகார நோக்கி னாலே
கருதிய பிரமத் தின்கட் கற்பித மென்ன லாகு
மரியரே யுண்மை நோக்கி லகண்டவத் துவித மான
பிரமமே யிருக்கு மன்றிப் பின்னுமோ ரணுவு மில்லை. (கூ0)

கருதொணா மாயை மாயா காரிய சகசீ வாதி
யுருவமாய்ப் பிரம மொன்றே யொளிர்ந்திடும் பிரம மல்லா
லொருபர மாணு வும்வே றொளிர்ந்திட லில்லை யந்தப்
பரசிவ மகிமை தன்னைப் பகர்ந்திட வாரே வல்லோர். (கூக)

ஆகிலும் பிரம மன்றி யன்னிய மூளதா மென்னு
மோகமீ தென்னே யென்னே மூதுணர் வேதி யோரே
யாகையாற் சகசீ வாதி யாகவே பார்ப்போ னுக்கிங்
கேகமா முத்தி யில்லை யென்றுமே பந்த முண்டாம். (கூஉ)

அருமறை முடிமா னத்தா லிலைமாஞ் சகசீ வாதிப்
பிரிவுமே பரம மான பிரமமென் றறிவோ னுக்கே
யிருமைசேர் கோர மான விப்பவ பந்த மில்லை
பிரியமே யுடனே முத்திப் பேற்றினை யடைவ னன்றோ.

அரியமே சுருதி தர்க்க மனுபவங் குரவன் வாக்குப்
பரசிவ வருளி வற்றாற் பகர்ந்தவிச் சகசீ வாதி
சருவமும் பிரம மென்றே சலனமில் லாத றிநதோ
னுரவிய வழிவால் வெண்மை யொழிப்பதி லைய மில்லை. (௧௪)

ஓதிய ஞானம் வெண்மை யொழித்தபின் கதக ரேணு
நீதியே போலத் தானு நிமலசிற் சொருப மாக
மீதியா மிவிர மாக மிஞ்சிய கேவ லான்மாப்
போதமாய் நின்ற வன்றான் புரையுறு பந்த மற்றோன். (௧௫)

இந்தவா றூர ணார்ந்த மிங்கறிந் தவனே யெல்லாப்
பந்தமும் விட்டோ னாகிப் பரமமா முத்தி சார்வன்
பிந்தியும் பிடியோ மூங்காய்ப் பிறங்குமத் துவிதான் மாவைச்
சந்தத மறிவ தற்குச் சகாயமா நெறியைக் கேண்மின். (௧௬)

முன்னமே சுருதி ஞான முடிந்தபின் மனனந் தியான
மென்னுமோ ரிவ்வி ரண்டா லைமாந் தத்து வத்தைத்
தன்னிடை யனுப வித்துச் சங்கையில் லாத ஞானந்
துன்னிவிஞ் ஞான முந்தன் சொரூபமாய் நின்ற பின்னர். ()

அன்னவன் சகசீ வாதி யனைத்தையும் பார்த்த போது
முன்னிய சகசீ வாதி யுருவமாய்ப் பார்க்க மாட்டான்

பின்னையோ வென்று மியாவும் பிரமமே யென்று பார்ப்பன்
சொன்னவிவ் வர்த்தந்தன்னைச் சொல்லுவா மற்றுங் கேண்மின்.

தெரிவுறப் பட்ட விந்தத் திரிசிய ஞால மெல்லா
நிருமல நிருவி கார நித்தியா னந்த மாகி
யொருசிதா காச மாக வொளிர்ந்திடும் பிரம மேயென்
றருமறை முடிமா னத்தா லறிந்தவ னுடனே முத்தன். ()

பரமவத் துவித மாகப் பரவிய பிரமந் தன்னைத்
தெரிசன விடய மாயுந் தெரிசனக் கர்த்தா வாயுங்
கருதிடா தறிந்தோ னுக்கே கற்பிதச் சகத்தின் றோற்றஞ்
சருவமு மகண்ட மான தன்னுடைச் சொரூப மேயாம். (சO)

கத்துரு விடய பாவங் கருதிடா தென்று மேக
சித்துரு வாகத் தன்னைச் செவ்விதா யறிந்தோ னுக்குத்
தத்துவ ஞான மீறிற் றன்வடி வாவ தேபோன்
முத்தரே சகத்தின் றோற்ற முழுவதுந் தானாய் மிஞ்சும். (சக)

இந்தவா றிடஞா னத்தை யெய்திய சீவன் முத்தன்
றொந்தமா மிச்சை கத்துத் தோன்றினுஞ் சலிக்க மாட்டான்
முந்திய பாவா பாவ முழுதுமே விளக்கி வைத்த
சுந்தர மான ஞான சோதிமாத் திரமாய் நிற்பன். (சஉ)

இவ்விதஞ் சீவன் முத்த னிசைந்தவிந் நிட்டை தன்னிற்
செவ்விய ஞான மில்லை சிதையுமஞ் ஞான மில்லை
விவ்விதச் சகமு மில்லை விமலசித் துருவே யாகித்
துவ்வித மியாது மற்றுத் துலங்கவே யவனி ருப்பன். (சங)

பிரமமே யாவு நானும் பிரமமென் றறிந்த முத்த
னிருமலச் சித்தே யாக நிற்பனென் றுரைப்ப துந்தா
னரியமே மோக மன்றி யுண்மையி லதுவு மில்லை
பரமவத் துவிதந் தன்னைப் பகர்ந்திட விடமு முண்டோ. ()

அன்னவ னடைந்த தான வமலவத் துவித நிட்டை
தன்னையாய்ந் தறிவ தற்குந் தகவதை யறைவ தற்கு
மென்னினே யாத தேனு மேதுமே சிரத்தை யாலே
யின்னதை யுரைக்க லானே னிதுவுமென் மோக மேயாம். ()

ஆதலான் மனது வாக்கா லவ்வித நிட்டை தன்னை
யிதென வுணர்வ தற்கு மிதுவென வுரைப்ப தற்கு
மேதுமோ ரேது வில்லை யென்றுமே யாத லாலே
யோதலு முணர்த லும்விட் டோய்வதே யுண்மை நிட்டை.

மகிமைசேர் சங்க ராதி மனதினன் மகிழப் பட்டு
நிகில்மா முபநி டத்தா னிசமதா யுரைக்கப் பட்டு
மிகவுமே குய்ய மான மெய்ம்மையா மிவ்வர்த் தத்தை
யகமகிழ்ந் துரைத்தே னித்தை யறிந்தவன் பிரம வித்தாம்.

வேறு.

பரம தாண்டவம் பற்றிய நஞ்சிவன்
பொருவி லாப்பரி பூரண ரூபமெவ்
வுரையு ளங்கள்கொண் டோத வுணர்த்தவு
மரிய தாமென் றறைந்திடு மாமறை. (சஅ)

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

**ஆக அத்தியாயம் நான்குக்குத் திருவிருத்தம் உ௨௫.**

ஐந்தாவது

## தொம்பதார்த்த சோதனையால் பிரத்திய கான்மாவுக்கும் பிரமத்துக்கும் ஐக்கிய முரைக்கு மத்தியாயம்.

அரியரே பராக்க தான வகிலமா ஞாலத் துக்கும்
பரவதிட் டான மான பரமமே முமூட்சு வாலே [ம
யிருமையற் றுணரத் தக்க தென்றுமுன் னுரைத்தே மின்னு
பரமதைப் பிரத்திய கான்மப் படிவமாய்ப் பகரக் கேண்மின்.

பரமமே பிரத்திய கான்மப் படிவமென் றுணரு ஞான
முரியமா மறையா லுண்டா முத்தமோத் தமம தாகு
மரியரே யிந்த ஞான மறவுமே குய்ய மாகு
மொருமையாம் பத்தி யுள்ள வுங்களுக் கிதையு ரைப்பாம்.

அரனரி விரிஞ்ச னாதி யகிலமாந் தேக னர்க்கு
மருவகம் புந்தி யென்று மற்றிதம் புந்தி யென்று
மிருமைபுஞ் சுபாவ மாக விசைந்தநா மிவைக ளுக்குள்
வருமிதம் புந்தி யென்றும வாகியப் பொருளிற் றோன்றும்.

அருமையா மான்மா வின்க ணகமெனும் புந்தி தோன்று
முரைதரு மிவ்வர்த் தத்தி லொருவரும் விவாதஞ் செய்யா
ரரியரே யிதம்ப தார்த்த மாகின கடப டாதி
சருவமு மனான்மா வென்றே சம்மதஞ் சகல ருக்கும். (௪)

அருமையா மான்மாத் தானே யகம்பத வருத்த மென்று
சருவசம் மதமே யாகுஞ் சாற்றிய விவ்வர்த் தத்தி

விருண்மிகு மூட ருககு மேதுமே சங்கை யில்லை
யரியரே யிவீது பூாக வனுபவ மிருப்ப தாலே. (ரு)

விதனமார் பவமா கின்ற விடத்திரு மூலத் தோடே
சிதைவதற் கிச்சை யுற்ற செவ்விய முமூட்சு வெல்லா
மெதுவெதி லியல்ப தாக விதமெனும் புந்தி தோன்று
மதையதை யனுமா வென்றே யறிந்திட வேண்டு மன்றே.

எதிலெதி லியல்ப தாக விங்ககம் புந்தி தோன்று
மதையதை யான்மா வென்றே யறிந்திட வேண்டு மென்றாந
திதமிலாத் தேக மாதித் திரளிலே யுபய புந்தி
யுதயமெவ் விதமா மென்னி லுததர மிதற்குக் கேண்மின்.

மண்ணுடைத் தேக மீதா மிதநான் மனித னென்று
சொன்னவிம் மதியி ரண்டைச் சோதனை செய்யுங் காலை
யின்னலார் தேகந் தன்னை யிதுவெனும் புந்தி பற்றும்
பின்னமி லான்மாத் தன்னைப் பேசகம் புந்தி பற்றும். (அ)

தெரிவினு லறியப் பட்டுத் திரிசிய மாவ வெல்லாம்
விரவிய விதம்புந் திக்கு விடயமா நியம மாக
வரியரே யாத லாலே யறிந்திடப் பட்ட வாக்கை
விரவிய விதம்புந் திக்கு விடயமே யாகு மென்றும். (கூ)

திரிசிய மான தெல்லாந் திகழ்த்திய சாட்சி யாகி
நிருமல போத மாக நித்தமு நிகழா நின்ற
வொருமையா மான்மாத் தானே யோதிய வகம்புந் திக்குச
சருவதா விடய மாகுஞ் சங்கையா தொன்று மில்லை. (க0)

ஆதலா லிதம்ப தார்த்த மாகிய வாக்கை யின்கண்
சாதநான் பருத்தி ளைத்தேன் சந்தத மனீத ஞானே
ஞேதகம் புந்தி தன்னை யோர்ந்திடின் மயக்க மேயாம்
பேதமா யொன்றை யொன்றுப் பிறழ்வுற வறிவ தாலே. ()

கருதிய மண்ணி லுண்டாங் காரிய கடாதி யேபோற்
புரையுறுந் தேகம் பூத காரிய மாத லானு
மரியரே சடம தானு மகமதி விடய மாகாச்
சரிரமீ தாத லாலே சந்தத மனுன்மா வாகும். (கஉ)

இருவித விந்தி யங்க ளியங்கிய பிராணன் மற்றுந்
திரிசிய மனது புந்தி தெரிவிலாத் தன்மை யாலே
விரவிய வகம்புந் திக்கு விடயமே யாக மாட்டா
தரியரே யாத லாலே யவையெலா மனுன்மா வாகும். (கங)

உரவிய புந்தி யென்று முணர்வுரு வாத லாலே
விரவிய வகம்புந் திக்கு விடயமா மென்ன வொண்ணு
துரியரே புந்தி யுந்தா னுற்பவ நாசந் தன்னை
மருவலாற் கடாதி யேபோன் மற்றிது சடமே யாகும். (கச)

உரைதரு கடப டாதி யுற்பவ நாசந் தன்னை
மருவலாற் சடமே யாகு மதியுமே சடமா மிங்ஙன்
பரவகங் கார சித்தப் பகுப்புமே யறிவி லாதால்
விரவிய வகம்புந் திக்கு விடயமே யாகா தென்றும். (கரு)

சருவதா நானு னென்று சார்ந்திடு மகங்கா ரத்தை
விரவிய வகம்புந் திக்கு விடயமே யாகா தென்னல்

பரவிய நாவெ னகரூப பகர்வதற் கில்லை யென்றிங்
குரைசெயு நீதி யேபோ லொவ்விடா தெனனிற கேண்மின்.

நிலையிலா தகமே துக்கி நிகழ்சுகி யென்று நித்நம்
பலவித விருத்தி யாகப் பரிணமிக் கின்ற தாலே
யலையகங் கார மொன்று மகமதி விடய மாகாச்
சலனமா ராக்கை யேபோற் சந்தத மனுன்மா வேயாம். (௧௭)

பரிணமிக் கின்ற தான பால்முதற் பொருளி னுக்குச்
சருவதாச் சடமாந் தன்மை சகமிதிற் பிரசித்த மிந்தப்
பரிசுபோ லிவ்வாங் காரம் பரிணமிக் கின்ற தாலே
தெரிவிலாச் சடமே யாகுந் தெரிவுரு வான்மா வாகா. (௧௮)

அரியரே யாத லாலே யமலசித் துருவ மாகப்
பரவிய வான்மாத் தானே பரகம் புந்திக் கென்று
மருவிய விடய மாகு மற்றசித் துருவ மான
சருவமு மிதம்புந் திக்கே சந்ததம் விடய மாகும். (௧௯)

பரவிய கடாதி யேபோற் பராக்கதா யறியப் பட்டுத்
திரிசிய மாகா நின்ற தேகமே முதல னான்மா
சருவமு மிதம்ப தீர்த்தஞ் சந்ததம் பிரத்தியக் கான
தெரிவுருச் சாட்சி யான்மா திகழகம் பதார்த்த மாகும். ()

நிருமல போத மாக நிகழ்ந்திடு மான்ம ரூபம்
விரவிய வகம திக்கு விடயமா யிடுமே யாகிற்
சருவதா வான்மா வுக்குச் சார்ந்துள சொப்பிர காசப்
பெருமைபோ யிடுமே யென்று பேசிய சங்கை யொவ்வா.

அகமதி விடய மேனு மமலமா மான்மா வென்று
நிகழ்வயம் பிரகா சந்தா னிமலமா மிவ்வொன் றவுக்
ககமதி விடயத் தன்மை யமலமாஞ் சொப்பிர காசத் [மின்.
தகைமையிவ் விரண்டுஞ் சாரத் தகாதெனிற் சாற்றக் கேண்

அந்தமில் பிரத்திய கான்மா வகமதி விடய மேனுந்
தொந்தமாங் கடாதி யேபோற் றோன்றக மதியி னாலே
சந்ததம் விளங்க வில்லை சார்ந்தவம் மதியிற் றோன்றி
வந்தவம் மதிக்குஞ் சாட்சி வடிவமாய் விளங்கு மென்றும்.

தரணியிற் கடப டாதி தன்னுடை விடய மாக
மருவிய விருத்தி யின்கண் மன்னுசிற் பதிவிம் பத்தாற்
றெரியுறு மிதுபோ லான்மாத் தெரிவுறப் பின்னை யென்று
லரியரே தானே தோன்று மாதலாற் சொப்பிர காசம். ()

சொன்னவா றிந்த வான்மாச் சுயம்பிர காச மானன்
மன்னிய வகமா கார மனவிருத் தியினா லென்ன
வென்னிலிவ் விருத்தி யின்க ணேகமா யான்மாத் தோன்றித்
தன்னுடை யஞ்ஞா னத்தைத் தவிர்த்திட விருத்தி வேண்டும்.

அரியரே யிந்த வாறு யகம்பிர மாஸ்மி யென்று
விரவிய வகண்டா கார விருத்தியில் விளங்கா நின்ற [தின்
வொருமையாஞ் சொருப தேசா லொழிந்தவவ் வஞ்ஞா னத்
கருதொரு நிவிர்த்தி யுந்தான் களங்கமில் சொரூப மேயாம்.

பரவிய கடப டாதி பற்றிய விருத்திக் கிங்கு
விரவுமக் கடப டாதி விளங்கிடுந் திறமை யேபோற்

பொருவிலாவான்மா வின்கண்பொருந்திய விருத்திக்காங்கே
தெரிவுற விளக்கி வைக்குந் திறமையே யில்லை யென்னில்.

உரைதருஞ் சங்கை தீர வுத்தர முரைப்பக் கேண்மி
னரியரே பதிவிம் பித்த வறிவுடைச் சம்பந் தத்தாற்
கருதிய மனவி ருத்தி கடபடா தியைவி ளக்கு
மிரவியின் பதிவிம் பத்தை யிசைந்தகண் ணாடி யேபோல். ()

சருவதாக் கடப டாதி சடமதாந் தன்மை யாலே
தெரிவுறு மனவி ருத்தித் திகழ்வினால் விளங்கு மான்மா
வரியரே சொப்பிர காச மாதலான் மனவி ருத்தித்
தெரிவினை யபேட்சி யாமற் றிகழ்ந்திடுந் தானே தானாய். ()

யாதுடைப் புணர்வி னாலே யியங்கிய மனவி ருத்தி
போதகா ரணமே போலப் பொலிந்திடு மெங்கு மந்தத்
தீதிலாச் சொப்பிர காசத் திகழ்வுரு வான்மா வெவ்வா
றோதிய விருத்தி யாலே யொளிர்ந்திடும் வேதி யோரே. (௩௦)

ஓதுவா ரான்மா வின்க ணேடிய மனவி ருத்தி
யேதுமே விளங்குஞ் சத்தி யிசைந்திடா தாத லாலே
யாதியா மிந்த வான்மா வகமதி விடய மேனும்
போதமில் கடப டாதி போலவே யனான்மா வாகா. (௩௧)

சொப்பிர காச மாகச் சொலித்திடுஞ் சாட்சி தானே
யொப்பிலா ஞாதா வீதி லொன்றுமே சங்கை யில்லை
கப்பகங் கார முந்தான் கருதினா னறிவே னென்றிங்
கிப்படி ஞாதா வாக விலங்குதே யென்னிற் கேண்மின். ()

ஓதிய வகங்கா ரந்தா னொளிர்சோத சித்த மான
போதமா மிவ்வான் மாவின் புணர்வினு லறிவே னென்று
சேதன முற்ற தேபோற் செறிந்திடு மாயுங் காலை
யேதமி லான்மாத் தானே யெவற்றினு ஞாதா வாகும்.(௬௬)

ஞாதுரு வானு லான்மா ஞானகத் துருவாந் தன்மை
கோதிலா வான்மா வின்கட் கூடுமே யதனு லான்மா
வேதமாம் விகாரந் தன்னை யெய்துமே யதனு லான்மா [மின்.
போதமாத் திரமா மென்னல் பொருந்திடா தென்னிற் கேண்

கத்துரு வாகி தன்மங் கலந்துள வகங்கா ரத்தோ
டொத்ததா தான்மி யத்தா லுணர்வுரு வான்மா வின்கண்
மித்தையாய்க் கர்த்தா போத்தா மிகுசுகி துக்கி ஞாதா
வெத்தனென் றிதுவே யாதி பேதமாம் விகாரந் தோன்றும்.

இப்படி யான்மா வுக்கு மிவ்வகங் காரத் துக்குஞ்
செப்புதா தான்மி யத்தாற் செவ்விய வான்ம தன்மங்
கப்புறு மகங்கா ரத்துங் கருதகங் கார தன்ம
மொப்பிலான் மாவி டத்து மொன்றிடு மித்தை யாக. (௬௭)

ஆதலா லான்ம ரூப மகங்கர மிவ்வி ரண்டு
நீதியாய்ப் பகுத்துப் பார்த்தா னிருமல வான்ம ரூபம்
போதமாத் திரமாய்விஞ்சும்பொருந்திடாதொருவி கார[மின்
மோதுமிவ் வான்மாப் பேதித் தொளிர்வத னிமித்தங் கேண்

சத்தசித் துருவ மாகச் சொல்லிய விந்த வான்மா
நித்தமுந் தன்சொ ரூப நிகழ்ந்திட வஞ்ஞா னத்தான்

மெய்க்கியு கர்த்தா போத்தா மிகுசுகி துக்கி யொன்றிங்
கித்திற மாகப் பேதித் திலங்கிடு மித்தை யாக. (௩௮)

சருவமாந் தேகங் கட்குட் சார்ந்தனு சூத மாகப்
பரவக மனுபூ திக்குப் பரமசித் துருவ மான
வொருமைய மான்மாத் தானே யுரியரே சாட்சா தர்த்தம்
பிரிவுறு மற்றதெல்லாம் பேசிய வர்த்த மன்றால். (௩௯)

கோவெனு மனுபூ திக்குக் கோத்துவ மொன்றே யர்த்த
மாவதே போல விந்த வகமெனு மனுபூ திக்குங்
கேவலஞ் சித்தே யாகக் கிளத்திய வான்மாத் தானே
யோவலி லர்த்த மற்ற தொன்றுமே யர்த்த மாகா. (௪௦)

பிரிவிலாக் கோத்து வந்தான் பிரிவுறுங் கோக்க ளோடே
விரவிய சம்பந் தத்தால் வேறெனத் தோன்று மந்தப்
பரிசுபோற் போதான் மாவும் பலவகங் காரந் தோடே
விரவிய சம்பந் தத்தால் வேறுபோல் விளங்கா நிற்கும். (௪௧)

அகமெனு மனுபூ திக்கிங் கர்த்தமா மான்மாத் தானே
யகமெனுஞ் சத்தத் துக்கு மர்த்தமாம் வேதி யோரே
பகருமிவ் வர்த்தந் தன்னைப் பரவுகோ சத்த வர்த்தத் [மின்.
தகைமையாந் திட்டாந் தத்தாற் றடையறச் சாற்றக் கேண்

தரணியி லொருகோ சத்தந் தன்னுடை யர்த்த மாக
விரவிய கோத்து வந்தான் விளங்கிட மான கோவின்
பிரிவதாம் பேதத் தாலே பின்னமா மர்த்தந் தன்னை
யுரைசெயு நீதி கண்டோ முத்தம வேதி யோரே. (௪௩)

இன்னதிட் டாந்த மேபோ லிவ்வகஞ் சத்த முந்தான்
றன்னுடைப் பொருளா மான்மா தயங்கிட் டாகா நின்ற
பன்னிய வகங்கா ரத்தின் பலவித பேதத் தாலே
பின்னமா மர்த்தந் தன்னைப் பேசிடும் விரோத மில்லை. (௪௪)

ஓதிய கோசத் தத்துக் குரைதரு கோக்க ளனறும்
பேதமா மிந்த வர்த்தம் பிறங்குமே லெழுந்த வாறு
மீதுடை யுண்மை யர்த்த மிசைத்தகோத் துவமே யாகு
நீதிபோ லகஞ் சத்தார்த்த நியமமுங் கண்டு கொள்வீர். ()

பரவகஞ் சத்தத் துக்கும் பலவகங் கார மென்னும்
பிரிவுறு மிந்த வர்த்தம் பிறங்கிமே லெழுந்த வாறுய்ச்
சருவசா தகமா வெங்குஞ் சந்தத நிறைந்து விண்போ [ம்.
லொருமையாய் நின்ற வான்மா வொன்றுமே யுண்மை யர்த்த

ஓதிய பிரத்திய கான்மா வொருமையாய் நின்ற போதுங்
காதல்செய் கின்று வந்தக் கரணபே தத்தி னாலே
யோதிடுந் தேவ தத்த னொளிர்ந்திடு மெஞ்ஞா தத்த
னீதினை முதலாம் பேத மிசைக்கலா மான்மா வின்கண். ()

இடவெளி யான வான மெங்குமொன் றான போதுங்
கடமுத லுபாதி யோடே கலந்ததாற் பிரிந்த தேபோற்
றடமுறும் பிரத்திய கான்மாச் சாற்றிய வுபாதி யோடே
தொடர்பினாற் பின்னம் போலத் தோன்றிடுந் துகளற் றோரே

அரியரே யிவ்வா றான்மா வகம்பதப் பொருளா மென்றோ
மரனரி விரிஞ்ச னாதி யகிலரு மிந்த வாறே

பொருவிலா நிருவி•கற்ப போதமாத் திரவான் மாவே
பரவகம் பொருளா மென்று பகருவ ருண்மை யாக. (௪௯)

அரனரி யாதி யானோ ரகங்கர வுபாதி யுற்ற
தெரிவுரு வான வான்மா திகழகம் பதார்த்த மென்றிங்
குரைசெய வில்லை யெல்லா வுபாதியு மற்ற வான்மா
பரவகம் பதார்த்த மென்றே பழுதறப் பகரு கின்றார். ()

ஏதெனிற் சுழுத்தி விட்டிங் கெழுந்தவன் சுழுத்தி காலத்
தேதுமே பேத மின்றி யிலங்குதன் சொரூப மான [னென்
போதமாத் திரவான் மாவைப் பொருந்தினான் சுழுத்தி யே
றோதலா லவ்வான் மாவே யுண்மையா மகம்ப தார்த்தம். ()

அரியபே ரவத்தை யீதி லகங்கர மாதி யாவுங்
கருதொணாக் கார ணத்திற் கலந்ததி லயித்த தாலே
யிருமையாம் விசேடத் தோற்ற மில்லையிச் சுழுத்தி தன்னைத்
தெரிவினல் விளக்கித் தானுந் திகழ்ந்திடுங் கேவ லான்மா.

ஆதலா லகங்கா ராதி யனைத்துபா தியுமே யின்றிப்
போதமாத் திரமே யாகப் பொலிந்திடும் பிரத்திய கான்மா
வோதிய வகம்ப தத்தி னுண்மையாம் பொருளா மன்றி
யேதமா முபாதி யோடே யிசைந்துள வான்மா வன்றால். ()

இப்படிச் சுழுத்தி யின்க ணிலங்கிய கேவ லான்மா
செப்பிய வகம்ப தத்தின் செவ்விய பொருளா மென்றோங்
கப்புறு சாக்கி ரத்துங் கருதிய வகம்ப தத்துக் [ண்மின்·
கொப்பிலா வான்மாத் தானே யுண்மையாம் பொருளாங் கே

தரணியி லயமே மெத்தத் தகிக்குதென் றுரைத்த போது
மிருளறு மக்கி னிக்கே யெரித்திடுந் தன்மை யனறிச்
சருவதா வயத்தி னுக்குத் தகித்திடுந் தன்மை யில்லாப்
பரிசுபோ லான்மாங் காரப் பான்மையுங் கண்டு கொள்வீர்.

தெரிவுடன் றுதான் மியத்தாற் றிகழ்வுறு மகங்கா ரந்தான்
பரவகம் பதார்த்த மென்று பகர்ந்திடப் பட்ட போது
நிருமலப் போதான் மாவே நிகழகம் பதார்த்த மன்றித்
தெரிவுறப் பட்ட வீது திகழகம் பதார்த்த மன்றால். (௫௬)

எரியுடன் புணர்ப்பி னாலே யிலகயந் தகிக்கு தென்ன
றரணியின் மயலா மன்றித் தத்துவ மாகா தேபோற்
றெரிவுடன் புணர்ப்பி னாலே திகழகங் கார முந்தான்
மருவகம் பதார்த்த மென்னன் மயலலா னுண்மை யாகா. ()

தெரிவுடன் புணர்ப்ப டைந்து திகழகங் கார மோடே
சிரமுதற் பாத மட்டுஞ் செறிந்தகா லித்தே காதித்
திரளிலே யகமென் றேத றிகழுவே யகமென் றெண்ணா
லிருமையு மயலே யாக விசையுமீ துண்மை யாகா. (௫அ)

உரியரே யிவித மான வூகமார் விவேகத் தாலே
திரிசிய வகங்கா ராதித் தேகமீ றுன யாவும்
விரவிய வான்மா வுக்கு வேறெனப் பகுத்திவ் வான்மா
மருவகம் பதார்த்த மென்று மாசற வறிய வேண்டும். (௫௯)

பரவிய நீதி யாகப் பகரகம் பதார்த்த மாகிச்
சருவமும் விளக்கி வைக்குஞ் சாட்சியாய்ச் சொப்பிர காச

வுருவமாந் தன்னுண் மாவை யுண்மையா னந்த சித்தாய்ப்
பரமவத் துவிதமான பரமமென் றறிய வேண்டும். (௯௦)

பரவகம் பதார்த்த வான்மா பரமமே யென்று சொன்னோர்
பரவிய வுருத்தி ரன்மால் பங்கயன் முதலோ ரியாரும்
பரவிய வகம்ப தார்த்தம் பற்றியே யென்று நாமே
பரமமாம் பிரமமென்று பகருவர் பழுதற் றோரே. (௯௧)

ஓதிய வுருத்தி ராதி யுத்தம ரனைவ ருந்தான் [ளை
போதமாத் திரமா யொன்றாய்ப் பொலிந்தகே வலவான்மா
போதகம் பதார்த்த மாக வொப்பியே யென்று நாமே
போதமில் பிரம மென்று பேசுவ ரபேத மாக. (௯௨)

சரீரமா தியினைச் சார்ந்து சங்கமே யுற்ற வான்ம
சொரூபமே பிரம மென்று சொல்லிட வில்லை யாரு
முரைதரு மூபாதி சார்ந்த வுருவமா மான்மா வுக்கிங்
கரியரே பிரமத் தோடு மபேதமே யொவ்வா தன்றோ. (௯௩)

அரியரே யாதி லாலே யறிவுமாத் திரமா மான்மா
சருவபூ ரணமா யொன்றாய்ச் சச்சிதா னந்த மாக
மருவிய பிரம மேயா மற்றெது மாகா தென்றே
பிரமவித் துக்க ளான பெரியவர் ருறுதி யென்றும். (௯௪)

சகலவே தாந்த நூலுஞ் சச்சிதா னந்த மாகிக்
ககனமே போல வெங்குங் கலந்துகே வலமாய்த் தூய்தாய்
நிகழ்வுறும் வத்துத் தானே நிருமலப் பிரம மென்று
மிகவுமே சிரத்தை யோடே மெய்ம்மையாய்க் கூறு மன்றோ.

அரியரே யகம்ப தார்த்த மாகிய பிரத்திய கான்மாச்
சருவமாந் துவிதத் துக்குஞ் சந்ததஞ் சாட்சி யாகி
யுரைதருந் துவித மியாவு முண்மையி லிலாத தாகிச
சருவபூ ரணமா யொன்றாய்ச் சச்சிதா னந்த மாகும். (௬௬)

அரியமோ யிவித மாக வமலமாம் பிரத்திய கான்மா
வரியவே தாந்த நூலா லோதிய விலக்க ணங்கள்
யருவமு மருவ லாலே சந்ததம் பிரம மேயா
மிருதயந் தன்னி லென்று மெமதனு பவமு மீதே. (௬௭)

பரவுமே தாந்த நூலின் பழுதிலா விசாரத் தாலே
பிரமமுண் டென்ப தாகப் பிறங்கிடு மற்றொன் றுளு
மிருளறப் பிரம முண்டென் றிவ்விதம் பிறங்கா தார்க்கு
முரைதரு மிந்த வர்த்த முண்மையே யைய மில்லை. (௬௮)

சுருதியிற் மானத் தாலுஞ் சுத்தமாந் தர்க்கத் தாலுங்
குருபரன் வாக்கி னாலுங் குறைவறக் கூறப் பட்ட
பிரமசீ வைக்கி யத்தைப் பிறங்கவே யறியா மூடர்
வெருட்டும் பவக்க டற்குள் வெறிதினில் வீழ்வ ரென்றும்.

உரைதரும் பரசீ வைக்கிய முணர்வதி லடைவைக் கேண்மி
னரியரே முன்ன மாசா னருளிய சாத்தி ரத்தின்
முரையிலா வுபதே சத்தாற் போதமாத் திரமாந் தன்னைப்
பரவுசா தனசம் பன்னன் பழுதற வறிய வேண்டும். (௭0)

அருமையாஞ் சாத்தி ரத்தை யனுசரிக் கின்ற புத்தித்
திறனினாற் பின்பு தன்னைத் தேகவிந் திரிய மாதி

சருவமும் விளக்கி வைக்குஞ் சாட்சிசித் துருவ மாக
நிருமலப் புந்தி கொண்டே நிச்சயஞ் செய்ய வேண்டும். ()

பின்னர்தன் னவித்தை யாலே பிரிவுபோற் றன்னி டத்திற்
றன்னியே தோன்று நின்ற துவிதமாஞ் சகம னைத்தும்
பின்னமில் லாம லெங்கும் பிறங்கதிட் டான மான
தன்னுடை யுருவ மென்றே தடையற வறிய வேண்டும். ()

சருவமுந் தானே யென்று சலமற வறிந்த பின்னர்ப்
பரவிய தன்னுன் மாவைப் பரமவத் துவித மான
நிருமல நிருவி கற்ப நித்திய போதா னந்தப்
புரணமாம் பிரம மென்றே புரையற வறிய வேண்டும். (எங)

அருமையாம் பரசி வைக்கிய மறிந்தவிச் சாட்சாத் காரத்
தெரிவையுங் கதக ரேணு தீர்ந்ததிட் டாந்த மேபோ
லொருமையாய் நிருவி கார வுணர்வுமாத் திரமாய் நின்ற
பிரமமாந் தன்னி டத்திற் பிரவிலா பிக்க வேண்டும். (எச)

பிரவிலா பனமென் றிங்குப் பேசிய கிரியை யுந்தான்
பரவதிட் டான மான பரசிதா காச ரூபப்
பிரமமாந் தானே யென்று பிரிவறக் கண்டு பின்னர்
கிரியையா தொன்று மின்றிக் கேவல மாக வேண்டும். (எரு)

இப்பரி சாமொ ழுங்கா யேதுமே விகார மின்றி
யொப்பிலாக் கேவ லான்ம வுருவமாம் பிரம மாக
நிற்பவன் பிரம ஞான நிட்டையில் வரிட்ட னென்
செப்பிய விந்த நிட்டை சேர்வதி னிழித்தங் கேண்மின். ()

சுருதியாற் சொல்லப் பட்ட சுத்தமாஞ் சுவானு பூதி
யுருவமா மிந்த நிட்டை யுத்தமத் தேசி கன்றன்
கருணைகூர் நோக்கொன் றாலே கரதலா மலகம் போலப்
பருவமா ரதிகா ரிக்கே பழுதறச் சித்தி யாகும். (௭௭)

கருதொணாத் தேசி கன்றன் கருணைகூர் நோக்குத் தானும்
பரசிவ னருளி னாலே பழுதிலா வதிகா ரிக்கிங்
கொருமுயற் சியுமே யின்றி யுதித்திடு முண்மை சொன்னோ
முரைதரும் பொருளீ துண்மை யுண்மைமற் றுண்மை யீதே

பரவிய மகிமை கூர்ந்த பரசிவ னருளொன் றாலே
சருவமாஞ் செந்து கட்குஞ் சருவமுஞ் சித்தி யாகு
முரியரே கரமி ரண்டு முயரநா மெடுத்துக் கொண்டு
திரபிர மாண மாகத் திரமாய்ச் செப்பு கின்றோம். (௭௯)

பொருவிலாப் பரசி வன்றன் பூரண வருளி ருந்தாற்
சருவதாச் சுபாவ மாகச் சகலமும் பிரம மென்றே [றே
யொருமையா யொளிரு மார்க்கு மோதிய வுருண்மற் றின்
னுரைதரு நீதி யாக வொளிர்ந்திடா துண்மை சொன்னோம்

அரியரே யெந்தப் போதி லகிலமும் பிரம மென்றே
பிரிவறச் சுபாவ மாகப் பிறங்கிடு மந்தப் போதே
பொருவிலாப் பரசி வன்றன் பூரண மான சாட்சா
தருளுள தென்று கொள்வீ ரறைந்தன முண்மை யாக. ()

அரியரே யெந்தப் போதி லணுவள வேனு மிங்குப்
பிரமமல் லாது வேறாய்ப் பிறங்கிடு மந்தப் போதிற்

பரசிவ னருளு மில்லைப் பரமுண ரறிவு மில்லை
யிருதயந் தன்னி லென்று மெம்முறை யுறுதி யீதே. (௮௨)

ஆதலால் விவகா ரத்தி லகிலமும் பிரமத் துக்குப்
பேதமாய்த் தோன்றி னாலும் பெருகிய விவேக முள்ளோன்
நீதலா வுண்மை நோக்காற் றிரிசிய மான விந்தப்
பேதமாந் தோற்ற மெல்லாம் பிரமமென் றறிய வேண்டும்.

ஏதெனி லிவைய னைத்து மிதனதிட் டான மான
போதமாம் பிரமத் தின்கண் பொருந்துமா ரோபந் தானே
யோதுமா ரோப மென்று மொளிரதிட் டான மன்றிப்
பேதமா காத தாலே பிரமமே யிவைய னைத்தும். (௮௪)

ஆதலா லீசன் சீவ னகிலமாஞ் சகமென் றிந்தப்
பேதமாந் தோற்ற மெல்லாம் பிறங்கதிட் டான மான
போதவா னந்த வுண்மைப் பூரணப் பிரம மென்றே
நீதிலா விவேக முள்ளோன் றிரமுற நினைக்க வேண்டும். ()

சருவதாப் பிரம மொன்றே சகலவா கார மாயுந்
தெரிவது மற்றிங் கொன்றுந் தெரிந்திட வில்லை யென்றே
யொருமையா ஞானந் தன்னை யுரமதா யடைந்த வன்றான்
பிரமவித் துக்க ளுக்குட் பிறங்கிய வரிட்ட னானோன். (௮௬)

சருவதாச் சுபாவ மாகச் சகலமும் பிரம மென்றே
யிருமைதீர் பிரம நிட்டை யெய்திய சீவன் முத்தர்க்
கருமறை யுரைத்த கன்ம மாகம மறைந்த கன்ம
மருவிய லோக கன்ம மற்றெது மணுவு மில்லை. (௮௭)

எதுவெது வெவ்வி டத்தி லெவ்விதந் தோன்றி னாலு
மதையதை யவ்வி டத்தே யறிவுருப் பிரும மென்றே
சததமு நோக்கா நின்ற சலனமில் யோகி யெங்கு
நிதமும்லோ கோப கார நித்தமாய்ச் சஞ்ச ரிப்பன். (அஅ)

தரணியி லிந்த யோகி தன்னுடைச் சொரூப மன்றிப்
பிரிவதா நிஷித்த மேனும் பின்னொரு விகித மேனுந்
தெரிவுறப் பார்க்க மாட்டான் றிரிசிய மான யாவு
மிருமைதீர் தன்சொ ரூப மென்னவே பார்ப்ப னென்றும்.()

நிறைசிதா காச மான நிமலமாம் பரம றிந்த
மறுவிலா விந்த யோகி மறையவ ரில்லத் தேனும்
பறையர்தம் மில்லத் தேனும் பட்சிய போச்சி யாதித்
திறமதிற் பேதந் தன்னைத் தினையள வேனு நோக்கான். ()

சருவமும் பிரம மென்றே சந்ததம் பார்ப்போ னாயோர்
தரமுமில் லாத யோகி தன்னுடை யிச்சைக் கேற்ப
வரியரே திரிவ னன்னோ னப்படிப் பட்டோ னன்றோ
தரணியி லவனை யாருந் தகைகந்திட வல்லோ ரில்லை. (கூக)

விரிவதாய்ச் சொல்லி யென்னை விமலமாந் தேசி கன்றன்
பரவிய பார்வை யாலும் பரசிவ னருளி னாலுஞ்
சருவநா யகியா கின்ற சத்தியி னருளி னாலுஞ்
சுருதியிற் செய்யப் பட்ட சுத்தமாம் பத்தி யாலும். (கூஉ)

பரவிய புண்ணி யத்தின் பக்குவத் திறமை யாலுஞ்
சருவதாச் சுபாவ மாகச் சகலமும் பிரம மென்றே

பரவிய பார்வை யாகும பரமவத் துவித ஞான
நிருமல வதிகா ரிக்கே நிகழ்ந்திடுமே வேதியோரே. (௯௫)

ஈருமுரு சிவமே யென்னுஞ் சங்கர சொரூப ஞானப
பரவிய சோக மோகப் பகுப்பெலா நீக்கி வைக்குஞ்
சுருதியி னர்த்த மீதே சொன்னதின் வேற தாக
வருமறை யர்த்த மில்லை யறைந்தன முண்மை யாக. (௯௬)

சுத்தமாங் குருவி டத்திற் சுருதியிற் பரசி வத்திற்
பத்தியே யிங்கு ரைத்த பரசிவா னைக்கிய ஞான
சித்தியை யடைவ தற்குச் சீக்கிர மேது வாகுஞ்
சத்திய மாகச் சொன்னேனு சங்கையா தொன்று மில்லை. ( )

சுத்தமாய் முன்ன மிங்குச் சொல்லிய படியொ ழுங்கா
யெத்தினை மியாவி னுலு மெய்திய பிரம ஞானம்
வித்தர மான வர்க்கே விமலமா முத்தி யுண்டாஞ்
சத்திய மாகச் சொன்னேனுஞ் சங்கையா தொன்று மில்லை. ( )

வித்தர மாகச் செய்த விவிதமாங் கன்ம மல்லாற
சுத்தமா ஞான மொன்றுற் சுழல்வுறு மிபப வத்தின்
முத்தியுண் டாகு மென்று மொழிவதெவ் விதமா மென்னி
லுத்தர மிவற்றி னுக்கிங் குரியரே யுரைப்பக் கேண்மின். ( )

நித்திய முத்த மாக நிகழ்த்திடு மான்மா வுக்கிங்
கித்துணி பவமு தித்த லென்றுமே மயலா லன்றிச்
சத்திய மாகா தாலே சாற்றிய பவத்தின் முத்தி
சித்தியா ஞான மொன்றாற் செய்கையாற் சித்தி யாகா. (௯௮)

உரவிய மயலி னாலே யுதித்திடும் பொருளனைத்துந்
தரணியி லுண்மை ஞானந் தன்னினா னசிக்கு மன்றி
பருவிய கருமத் தாலே மற்றிவை நசிக்க மாட்டா
அரியரே பிரசங்க சர்ப்ப மாதியி லிவணங் கண்டோம். (௯௯)

ஆதலா லஞ்ஞா னத்தா லசத்திய மயலே யாகப்
போதமா மான்மா வின்கண் பொருந்திய பவத்தின் முத்தி
யோதிய வகண்ட ஞான மொன்றினாற் றிகழு மன்றித்
தீதற மற்றொன் றாலுந் திகழ்ந்திடா வேதி யோரே. (௧00)

ஆதலா லகண்ட ஞான மடைவதற் கிச்சை யுள்ளோன்
வேதமோ தியவா றிங்கு விவிதசா தனமும் பெற்றுத்
தீதிலாக் குணநி றைந்த திகழருட் கடலே யான
சாதுவாங் குருவை நேரே சரணமா வடைய வேண்டும். ( )

வேறு.

நிகரி லானந்த நிர்த்த மிடுஞ்சிவன்
புகழ்சி தானந்த பூரண ரூபமே
யகமெ னும்பொரு ளாகிய கண்டமாய்
நிகழ்வ தென்று நிகழ்த்திடு மாமறை. (௧0௨)

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ஐந்தக்குத் திருவிருத்தம் ௯௨௫.

ஆறவது

## முத்திக்குப் பரமசிவ சாம்பமூர்த்தித் தியானமே முக்கியமென்னும் அத்தியாயம்.

பரவிய விதமே யான பரசிவான் மைக்கிய ஞானம்
பரசிவ னருளா லன்றிப் பற்றிடத் தக்க தல்ல
பரவுமவ் வருள்சித் திக்கப் பழுதிலா வேறு வான
பரசிவ மூர்த்தித் தியானப் பான்மையைப் பகரக் கேண்மின்.

அரியதா மிந்த வர்த்த மறவுமே குப்ய மாகுஞ்
சருவமருஞ் சாத்தி ரத்தின் சங்கிர கார்த்த மாகு
முரைதரு மிவ்வர்த் தத்தை யுணர்ந்தவன் மற்று மிந்தத்
தரணியிற் சனிக்க மாட்டான் றளர்விலா வேதி யோரே. ()

சருவபூ ரணமா யொன்றாய்ச் சச்சிதா னந்த மான
பரசிவ சொருபந் தானே பரமதத் துவமா மீது
சருவமாஞ் சேதனர்க்குஞ் சந்ததஞ் சாட்சா தான்ம
வுருவமா யொளிர்ந்த போது முணர்வதற் கரிதே யாகும். ()

ஏதெனில் விசேட மொன்று மிலாததாற் சூக்க மான
தூயதாம் பரசி வத்தைத் தூலதிட் டியினா னோக்கத்
தீதிலா மகான்க ளான தேவரும் வல்ல ராகா
ராதலாற் பரத்தை நோக்க வறவுமே முயற்சி வேண்டும். ()

தன்னுடை யுருவ மாகத் தயங்கிய பரசி வத்தைப்
பன்னிய வுருத்தி ரன்றான் பழுதற வென்றும் பார்ப்ப

ணன்னதை யரியொ ருக்கா லறவுமே முயன்றுற் பார்ப்பன்
பின்னய னொருக்கான் மெத்தப் பேணினு லுதனைப்பார்ப்பன்.

சத்துவ மிகுந்த தாலே சாற்றிய வுருத்தி ரர்க்குத்
தத்துவ ஞான மென்றுந் தடையறத் தோன்று மந்தச்
சத்துவ மிகாத தாலே சாற்றிய வரிய யர்க்கு
வத்துவின் ஞான மெத்த வருந்தினு லொருகாற் றேன்றாய்.

இந்தவா றமரர் மூவ ரிசைந்தவிஞ் ஞானத் துக்குஞ்
சந்ததம் பரமன் ரூபஞ் சாட்சியாய் விளங்கு மன்றி
யந்தஞா னத்தி னுலு மவனுரு விளங்க மாட்டா
திந்தவர்த் தத்தி லேது வியம்புவாம் வேதி யோரே. (௭)

விரிவுறு கடப டாதி விடயமாம் விருத்தி யைப்போற்
பிரமவா கார மாகப் பிறங்கிய விருத்தி யுந்தான்
சருவசான் றாகி நின்ற சங்கரன் றேசி னாலே
திரிசிய வடிவ மாகத் திகழ்வதே யேது வாகும். (௮)

பரசிவ னருளொன் றாலே பரமமாந் தத்து வத்தை
யரன்முத லாய தேவ ரனைவரு மனுப விப்ப
ருரைதரு மனுப வத்து முணர்வுருப் பரமன் ரூப
மருவுசா தகமே யன்றி மற்றதன் விடய மாகா. (௯)

ஆதலாற் பரசி வன்ற னருளினை யடைய வேண்டிக் [டே
கோதிலா முமூட்சு வெல்லாங் குறைவிலாச் சிரத்தை யோ
யாதியாஞ் சாம்ப மூர்த்தி யாகிய பரசி வத்தைத்
தீதிலா விதயத் தின்கண் டியானமே செய்ய வேண்டும். (௧௦)

அரனரி விரிஞ்சர் மற்ற வவரவ தார மாக
மருவிய தேவ ருந்தான் மன்னிய வன்பி னோடே
பரமகா ரணமா கின்ற பரனுடைச் சாம்ப மூர்த்தி
யுருவினைத் தானே யென்று முறுதியாய்த் தியானிக் கின்றார்.

ஆதலாற் பரசி வன்ற னருளுடைந் தகண்டா கார
போதமுற் றென்று நித்த பூரண சிவத்தைச் சேர
வோதிய சாம்ப மூர்த்தி யுருவினை முமூட்சு வெல்லாந்
தீதிலா வன்பி னோடே தியானமே செய்ய வேண்டும். (கஉ)

ஓதிய சாம்ப மூர்த்தி யுருவமீ தகண்டா னந்த [னம
போதமாஞ் சிவத்தின் வேறாய்ப் பொருந்தலா லிவற்றின் றியா
பேதமில பூன்ற மான பிரமமாஞ் சிவத்தைச் சேர
வேதுவெவ் விதமா மென்னி லிதற்குரை யியம்பக் கேண்மின்

நிருமல வேதி யோரே நெய்யிடைக் கடினத் தன்மை
மருவிய நெய்யே யன்றி மற்றதின் வேறா காது
பரிசுபோற் சாம்ப மூர்த்திப் படிவமு மகண்டா னந்த
சொருபமாஞ் சிவமே யன்றிச் சொற்பமு மதின்வே றாகா.

ஆதலாற் சாம்ப மூர்த்தி யாகிய வுருவின் றியான
மோதிய வகண்டா னந்த வுருவமாம் பரசி வத்தைப்
பேதமில் லாம லென்றும் பெற்றிட வேது வாகு
மீதினான் மூர்த்தித் தியான மெவருமே யியற்ற வேண்டும்.

அரனரி விரிஞ்ச ரான வமரர்கள் பரசி வன்ற
ஊருவுடைத் தியானந் தன்னை யுறுதியாய்ச் செய்வோ ரேனும்

பரனுடை வகுப்பை யன்னோர் பற்றினே ரன்றிச் சீவர்
மருவிய வகுப்பை யென்று மன்னிடார் பூாசிலோரே. (௧௬)

அரன்முத லான தேவ ரவதார பேத மாகப்
பரவிய ரூப முந்தான் பரனுடை வகுப்பைத் தானே
மருவிய தன்றிச் சீவ வகுப்பினை மருவ மாட்டா
திருவிது வகுப்பி லேது வேறெனி லியம்பக் கேண்மின். ()

உரியரே யவித்தை தன்னை யுபாதியா யுடையோன் சீவன்
பரவிய மாயோ பாதி பற்றினேன் பரனிவ் வாறு
மருவிய நியமத் தாலே மாயையின் சத்து வாதிப்
பிரிவுபா தியைய டைந்தோர் பேசிய பரவ குப்பே. (௧௮)

இப்படி யவித்தை மாயை யென்னுமிவ் வுபாதி யாலே
கப்பிலாப் பிரம மொன்றே கருதுசீ வேச ரென்னும்
பற்பல வுருவம் போலப் பகுப்பினை யடைந்த தன்றி
யொப்பிலா வந்த வஸ்து வுண்மையி லொன்றே யாகும். ()

அரியரே சீவ ரெல்லா மவித்தையின் வசத்த ராகிப
பரவுபுண் ணியபா வங்கள் பற்றிரா காதி யானே
சருவமா மலமு டைத்தாய்ச் சன்மநா சங்க ளூற்று
விரிவுறு மிப்ப வத்தில் விவிதமாய்த் திரிவ ரென்றும். (௨௦)

மருளிலாச் சுத்த மான மாயையின் வசத்த ராகா
வரனரி விரிஞ்ச ருக்கு மவ்வரவ தார மாகப்
பரவிய ரூபத் துக்கும் பாவபுண் ணியமே யாதி
மருவிடத் தக்க தில்லை மாசிலா வேதி யோரே. (௨.௧)

அன்னவு ரவதா ரத்தை யடைவதே னென்னிற் கேண்மி
னின்னலார் சீவர்க்கெல்லா மிதத்தையே யளிக்க வேண்டி
மன்னிய சிவாஞ்ஞை யாலே மற்றவ ரவத ரிப்ப
ரன்னவர் மறைவ ரீச ஞஞ்ஞையை யார்பே திப்பார். (உஉ)

ஈருவதாச் சம்சா ரத்தைச் சார்ந்துள சீவ ரெல்லாம்
பரவிய போக மோட்சப் பயன்களைப் பற்ற வேண்டி
யரனரி யயனை மற்ற வவரவ தார மான
வுருவையு முறுதி யாக வுபாசனை செய்ய வேண்டும். (உங)

உரைசெயு மூர்த்தி மூன்று முபாசனை செய்யத் தக்க
பரிசினிற் சமான மேனும் பரவிய வரிவி ரிஞ்ச
ரிருவரி னரனே மேலா மிவர்களி னீன னாகான்
ஈருவராச் சமனு மாகான் சங்கையா தொன்று மில்லை. (உச)

அரியய னிருவ ரோடு மரனுமே சமனென் றேனு
மிருவரி னரனே மெத்த வீனனென் றேனு மியாவ
ரிருதயந் தன்னி லெண்ண மெய்துவ ரன்னோ ரென்றும்
விரிவுறு நரகத் தீயால் வெதும்பிமா துயரஞ் சார்வர். (உரு)

அரியய னாதி தேவ ரனைவரி னரனே மேலென்
றிருதயந் தன்னி லெண்ண மெய்தினோ ரியாவ ரன்னோர்
பரவுமா கோர மான பவமுறா முத்த ராவ
ருரைதரு மிவ்வர்த் தத்தி லொன்றுமே யைய மில்லை. (உசு)

நிருமல வேதி யோரே நிமலமா மிதயத் தின்கண்
பரமகா ரணமா கின்ற பரசிவ மூர்த்தித் தியானஞ்

சருவமா முமூட்சு வானுஞ் சந்ததம் பிரதான மாக
விருதய வொருமையோடே யியற்றிடத் தக்க தென்றும்.

கருதிய பரசி வன்றன் காரிய ரூப ரான
வரனரி முதலாந் தேவ ரனைவரின் றியானந் தன்னை
யிருதய பதுமத் தின்க ணென்றுமே பிரதான மன்றிப்
பரவிய முமூட்சு வானோர் பாங்குற வியற்ற வேண்டும்.(௨௮)

அரியரே சாம்ப மூர்த்தி யாகிய சிவனே யென்றுஞ்
சருவகா ரணமா கின்றோன் சருவவீ சனுமா கின்றோன்
வரையிலா மகிமை யுள்ள வல்லப மியாவு முற்றோ
னரியயன் முதலாந் தேவ ரவ்வித மாகா ரென்றும். (௨௯)

ஆனதா லகில வேது வாகிய சாம்ப மூர்த்தி
மேனியை முமூட்சு வானோர் மெத்தவும் பிரதான மாகத்
தியானமே செய்ய வேண்டுந் திகழுங்கா ரியவி குப்பே
யானவவ் வரனே யாதி யமரரின் றியானம் வேண்டா. (௩0)

அரியரே யுபாசிக் கின்ற வகிலமா மன்ப ருக்கும்
பரசிவன் றனே யென்றும் பரமமா மங்க ளத்தைத்
தருவதற் குரியோன் மற்றோர் தந்திடா ராத லாலே
பரசிவன் றியானந் தன்னைப் பத்தர்கள் செய்ய வேண்டும்,

மருவிய வரியா திக்கு மங்களஞ் செய்யுந் தன்மை
மருளறு பரசி வற்கு மங்களஞ் செய்யுந் தன்மை
நிரவதி யாகின் றப்போ னிகழ்ந்திடா தரற்கு மென்றுந்
தரணியிற் றன்சத் திக்குத் தகுந்ததா யிருக்கு மன்றே.(௩௨)

நிருமலவேதி யோர்கே ணித்தமங் களமே யாகிச்
சருவகா ரணமு மாகிச் சாம்பமூர்த் தியுமாய் நின்ற
மருளிலாப் பரசி வற்கே மங்களஞ் செய்யுந் தன்மை
சருவதாப் பூன்ற மாகச் சார்ந்திடுஞ் சங்கை யில்லை. (௩௩)

ஆதலாற் பரசி வத்துக் கன்னிய மான தெய்வம்
யாதையுந் தூரத் தள்ளி யென்றுமே பிரதான மாகக்
கோதிலா மங்க ளத்தைக் கூட்டிவைக் கின்ற தான
நீதிலாப் பரசி வத்தின் றியானமே செய்ய வேண்டும். (௩௪)

அரியரே சாம்ப மூர்த்தி யாகிய பரசி வன்ற
னிருமலத் தியானத் துக்கு நிமித்தமா யங்க மாகத்
திரமிலா மற்றத் தெய்வத் தியானமுஞ் செய்வ தல்லாற்
சருவதாப் பிரதான மாகச் சாற்றிய தியானம் வேண்டா. ()

சருவவே தங்க ளுக்குஞ் சந்ததஞ் சார மாகி
யரியதாய்ச் சாது வான வதர்வண சிகையென் கின்ற
சுருதியின் முடிவு மிங்குச் சொல்லிய விவ்வர்த் தத்தி
லாரிய மான மாக வுறுதியாய் முடிந்து நிற்கும். (௩௬)

ஓதிய விவ்வர்த் தத்தி லுபநிட மியாவு மானம்
போதமாம் பிரம மெல்லாப் பொருட்குமா தார மாகு
நீதிபோற் சுருதிக் கெல்லா நிகழுதர் வணவே தந்தான்
கோதிலா தார மாகுங் குற்றவிலா வேதி யோரே. (௩௭)

எப்படிப் பிரண வந்தா னெவையினு மேல தாகு
மப்படி யிந்த வேத மனைத்தினு மேலா மிவ்வா

ஞெப்பிய வேது வாலு மொளிரதர் வணவே தத்தாற்
செப்பிய பரசி வன்றன் றியானமே செய்ய வேண்டும்.(௯அ)

விரிவதாய் விளம்பி யென்னை விவிதமாந் தெய்வ மெல்லாஞ்
சருவதாத் தூரத் தள்ளிச் சந்தத மங்க ளத்தைப்
புரிவதாம் பரசி வத்தைப் போகமோட் சப்பொ ருட்டாற்
றிரமதாய்ச் சீவ ரெல்லாந் தியானமே செய்ய வேண்டும். ()

உத்தமோத் தமம தான வுண்மையாம் பொருளை யெலலாம்
வித்தர மிலாம லிங்கு விளம்பினேம் வேதி யோரே
நித்தமும் பத்தி யோடே நீங்களு மிகமு யன்று
சத்திய ஞான னந்த சம்புவின் றியானஞ் செய்மின். (௪O)

வேறு.

சருவ காரண சாம்ப நடேசன்ற
னுருவின் றியானமே யோங்கும் பவக்கடற்
கரையி லேற்றிடுங் கப்பல தாமெனச்
சுருதி யின்முடி சொல்லிய வான்பொருள். (௪க)

ஆறவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ஆறுக்குத் திருவிருத்தம் - ௬௬௬.

ஏழாவது

# தேகத்துக்குட்பட்ட தேவதைகளைத் தியானஞ்செய்தாற் பரம்பரையாகப் பரமசிவ னருளுண்டாகுமென்றுரைக்கு மத்தியாயம்.

அரியசன் ஞான வேது வாகிய பரசி வன்ற
னருளினை யடைவ தற்கிங் கவனுடை மூர்த்தித் தியானஞ்
சருவதா சாட்சா தான சாதன மாகு மென்று
பரவினே முன்ன மின்று பகர்ந்திடும் பொருளைக் கேண்மின்

பரவிய தேகத் துள்ள பலவித வவய வத்தும்
பரவுதே வதைக டம்மைப் பற்றிய தியான முந்தான்
பரசிவ னருளைச் சேரப் பரம்பரா வேது வாகும்
பரவிய விவ்வர்த் தத்தைப் பகருவா மிந்த வோத்தில். (உ)

குறைவிலா வேதி யோரே குய்யமாய் மேலா யெல்லா
நிறைவதற் கேது வாக நின்றவிவ் வர்த்தந் தன்னை
யறவுமே விரிவு தின்றி யடக்கமா யறைவா மீதை
நெறியதாச் சிரத்தை யோடே நின்றுநீ ரின்று கேண்மின்.()

சருவதே கத்து முள்ள சகலமா மவய வங்க
ளிருவித விந்தி யங்க ளிவைமுத லேவ வேண்டி
யரியரே யந்த வந்த வபிமான தெய்வ மொவ்வோ
ருருவுறு மிடங்க டோறு மொன்றியே நிற்கு மன்றே. (ச)

சருவகா ரணமா கின்ற சச்சிதா னந்த மான
பிரமமாம் பரசி வன்றன் பிரிந்துள தேகத் தெல்லா

மொருமையா யாகா யம்போ லோங்கியே வியாபித் தெங்குஞ்
சருவதாச் சாரா நிற்குஞ் சாதுவாம் வேகி யோரே. (ரு)

சருவதாத் தேகத் துள்ள சகலமா மவய வத்துந்
திரமுற வெந்த வெந்தத் தெய்வமெவ் வெவ்வி டத்திற்
றாணியிற் றியானஞ் செய்யத் தக்கதா மெனிலிச் சங்கைக்
குரியதா முத்த ரத்தை யுரியரே யுரைப்பக் கேண்மின். (சா)

மருவிய தொக்கி ரத்த மாமிச மேதை சத்தி
விரவிய மச்சை யென்று விளம்புசட் கோச முற்றுப்
பரவிய பஞ்ச பூதம் படைத்தகா ரியமாந் தூல
வுருவினிற் பூத மைந்தி னுள்ளதே வதையைச் சொல்வாம். ()

ச ரீரகா ரணமே யாகச் சார்ந்ததாய்ச் சாற்ற லுற்ற
பிருதிவி முதலே யாகப் பிறங்கிப வைம்பூ தத்திற்
பரவிய விரிஞ்ச னாதி பஞ்சமூர்த் திகளி ருப்ப
ரரியரே யந்த வண்ண மவர்களைத் தியானஞ் செய்க. (அ)

விரவிய தேகத் துக்கு வெளியினில் விராட்டி ருக்கு
முறைசெயு மித்தே கத்துக் குள்ளினிற் சுராட்டி ருக்கு
மருவுமித் தேகத் துக்கு மத்தியிற் சமமி ராட்டு
பரவியே யிருக்கு மிந்தப் பாங்குறத் தியானஞ் செய்க. (கூ)

பரவிய திக்கு வாயு பானுதான் வருணன் பூமி
சருவஞா னேந்தி யத்துஞ் சார்ந்ததே வதையாய் நிற்கு
முரியதீ யிந்தி ரன்று னுபேந்திரன் பிரமன் காலன்
சருவகன் மேந்தி யத்துஞ் சார்ந்ததே வதையாய் நிற்கும். ()

உரவிய சூத்தி ரான்மா வுயிரிடை யிருக்கு மந்தக்
கரணமா மிடத்தி ருப்பன் கருதிய விரண்ய கர்ப்ப
னரியரே மனதே யாதி யாகிய விருத்தி நான்கி
லுரியதா மிந்து வியாழ னுருத்திர னுமையி ருக்கும். (௧௧)

பற்பல ரோம கூடம் பலவித வெலும்பி வற்றி
லற்பமாம் பூதப் பிரேத மாதிக ளிருக்கு மற்றுங்
கப்புறு நாடி கட்குட் களங்கமார் பிசாச ரோடு
வெப்பமா ரரக்க ரெல்லாம் விவிதமா யிருப்ப ரன்றே. (௧௨)

பிரிவுறு மச்சை யின்கண் பிதிர்கள்கந் தருவ ரெல்லா
மருவுவர் தொக்கி ரத்த மாமிச மாதி யின்கண்
சருவதீரச் சித்த ராதி சகலரே வதைபு நிற்கு
மரியரே யறைந்த வண்ண மனைத்தையுந் தியானஞ் செய்க.()

அரியதா கிய வலக்க ணுந்தர பாகந் தன்னிற்
கருதிய விரிஞ்சன் கோர களேபரங் கலந்து நிற்கு
முரியதா கிய விடக்க ணுள்ளினில் விரிஞ்சன் சாந்த
சரீரமுஞ் சார நிற்குஞ் சாதுவாம் வேதி யோரே. (௧௪)

விரவிய கண்ணி ரண்டின் வெளியினி னிரைய தாக
விரவியு மிந்து வுந்தா னிருந்திடுங் கண்டத் துள்ளே
யரியுடைச் சாந்த வாக்கை யாமதன் பாகி யக்தி
லரியுடைக் கோர வாக்கை யமர்ந்திடும் வேதி யோரே.(௧௫)

ஆதியா மிருத யத்தி னுந்தர பாகந் தன்னிற்
சாதுவா முருத்தி ரன்றன் சாந்தமாந் தனுவி ருக்கு

மோதிய விருத யத்தி னொன்றிய பாகி யத்திற்
கோதிலா வுருத்தி ரன்றன் கோரமாந் தனுவி ருக்கும். (கக)

சருவகா ரணமா கின்ற சச்சிதா னந்த மான
பிரமமித் தேகத் தின்கண் பிரமரந் திரவி டத்தின்
மருவிடு மூலா தார மத்தியிற் சித்தென் கின்ற
பரமமாஞ் சத்தி நிற்கும் பகர்ந்தவா தியானஞ் செய்க. (கஎ)

நெற்றியின் மேற்பா கத்தி னின்றிடு மாயா சத்தி
மற்றதன் மத்தி யத்தின் மன்னிடு நாத சத்தி
நெற்றியின் கீழ்ப்பா கத்தி னின்றதாம் புருவ மத்தி
பற்றியே விந்து சத்தி பாங்குற விருக்கு மன்றே. (கஅ)

புருவமத் தியினிற் சீவன் பொருந்திடுஞ் சூக்க மாக
விருதயந் தன்னி லன்றே யிருந்திடுந் தூல மாக
மருவிய விடமி ரண்டின் மத்தியி லந்தச் சீவன்
பரவிய தூல சூக்கப் படிவமா யிருக்கு மன்றே. (கக)

பிரமவித் தையைய ளிக்கும் பெருமைசேர் வாக்கின் றேவி
திரமுற வெந்தப் போதுஞ் சிங்குவை நுனியி டத்தின்
மருவுவ ளிருத யத்தின் மாவிலக் குமியி ருப்ப
வரனுட னன்னோன் மாது மவ்விடந் தனிலே நிற்பள். (உ0)

சருவமாந் தேவர் போற்றுஞ் சரணமார் சாம்ப மூர்த்தி
சொருபமா யறுதி யாகிச் சுத்தமாய்ச் சச்சி தாதி
யுருவமாம் பரசி வந்தா னொருமையா யெவ்வி டத்தும்
பரமமாய் நிரம்பி நிற்கும் பகர்ந்தவா தியானஞ் செய்க. (உக)

ஓதுமே வதைய னொத்து முரியநன் ஞானம் பெற்றோ
ரேதவஞ் ஞான முற்றோ ரிருவரின் கனேப ரத்து
மேதுமே பேத மின்றி யேகமாய் நின்ற போதும்
போதமுற் றோரி டத்திற் பொலிந்திடு நீதி கேண்மின். (உஉ)

போதமுற் றோரி டத்திற் புகன்றதே வதைய னொத்துஞ்
சோதியாம் பிரதிய கான்ம சொருபமா யொளிரு மற்றுஞ்
நீதிலா வந்த வந்தத் தேவதை யுருவமாயு
நீதியாய் நிகழு மீதாய் நிகழ்ந்திடா மற்றோ ரின்கண். (உங)

வேதமோ தியமார்க் கத்தை விருப்புட னனுட்டா னித்துந்
நீதறச் சுத்த ரான சீவரின் றேகத் தின்க
ணோதிதே வதைக டத்த முருவமா யொளிரு மன்றிச்
சோதியாம் பிரத்திய கான்ம சொருபமா யொளிர மாட்டா. ()

தரணியிற் சைவ மாதி தந்திர மார்க்க முற்றோ
ருருவினின் மிகுந்த சுத்தி யொன்றிடாத் தன்மை யாலே
பரவுதே வதைக டத்தம் படிவமாய் நிகழ்ந்த போதுந்
தெரிவுற விசேட மாகத் திகழ்ந்திடா ரத்தே கத்தில். (உரு)

வாதமின் ஞான மார்க்கம் வைதிக மார்க்க மற்றும்
பேததந் திரமார் மார்க்கம் பேசிய தெவையு மற்றோர்
கோதுறு குரம்பை யின்கண் கூறுதே வதைய னொத்து
மேதுமே நிகழா வண்ண மென்றுமே மறைந்து நிற்கும். ()

உரியதே வதைய னொத்து முடலிடை யிருப்ப தாலே
பரவிய தனது தேகம் பராருடைத் தேக மியாவுந்

திரமுறு மனதி னாலே தேவதா மயமென் றெண்ணிப்
புரையிலாப் பயனை வேண்டிப் பூசனை செய்ய வேண்டும். ()

அரியதன் னுடலை யேனு மன்னிய ருடலை யேனு [ணு
மொருவரு மொருக்கா லேனு மொன்றுமே யிகழ வொண்
துரவிய மோகத் தாலே யுடலினை யிகழ்வோ ரென்றும்
விரிவுறு பவக்க டற்குள் விழுவதி லையமில்லை. (உஅ)

ஆதலாற் சிட்டன் றுட்ட னன்றியு மறிந்தோன் மூட
னெனவொரு நரனை யுந்தா னிலங்குதே வதையாய்ப் பார்த்துத்
தீதறப் பூசை செய்வோர் தீர்க்கமாம் பவபந் தத்தைக்
கோதற விடுத்தோ ராகிக் கூடுவர் முத்திப் பேறே. (உகூ)

இப்படிப் பின்னமாக விலங்குதே வதையின் பூசை
செப்பமாய்ச் செய்வோ ருக்குஞ் செவ்விய முத்தி யுண்டே
லற்புத வகண்டா னந்த வறிவுருத் தெய்வ பூசை [டோ.
தப்பறச் செய்வோர் மோட்சஞ் சார்வதிற் றடையு முண்

ஆதலாற் சராச ரங்க ளாகிய நாம ரூபப்
பேதமாய்ப் பிரமத் தின்கண் பிறங்கிய வெவையு மென்றும்
போதவா னந்த வுண்மைப் பூரணப் பொருளா நின்ற
பேதமில் பிரம மென்றே பிரிவறப் பூசை செய்க. (௩௧)

ஓதுமா றெங்குந் தெய்வ மொன்றிநிற் கின்ற தாலே
யேதுமே கொடுமை யாக வெவரையு மியம்ப வொண்ணு
கோதுறு மோகத் தாலே கொடுமையா வியம்பு கின்றோ[வர்
ரோதுதே வதையை யெல்லா மொருமையா விகழ்ந்தோ ரா

அரியரே யாக்கை தனனை யத்திர சத்தி ரங்க
ளூரவிய நகமே யாதியொன் றினு லுஞ்சி கைத்துச்
சருவதா விரத்த மேதுஞ் சனித்திடச் செய்ய வொண்ணு
மருளினு லிவற்றைச் செய்வோன் மற்றதப் பதித னவன். ()

பரவுதன் றேகத் தேனும் பருடைத் தேகத் தேனு
மரியரே சக்க ராதி யனமுத் திரைக ளாலே
சருவதாச் சின்ன மொன்றுஞ் சற்றுமே செய்ய வொண்ணு
மருளினுற் சின்னஞ் செய்வோன் மற்றதப் பதித னேயாம்.()

சருவமாஞ் சாத்தி ரத்தின் சாரமா மிரக சியத்தை
விரிவிலா தொடக்க மாக விளம்பினே முங்கட் கெல்லா
முரியரே யாத லாலே யுடன்முத லனைத்தை யுந்நீர்
திரமுறு மனதா லென்றுந் தேவதா மயமாய்ப் பார்மின். ()

## வேறு.

சரீர மாதி சமஸ்தமுந் தேவதா
சொரூப மாமெனுஞ் சூக்குமப் பார்வையா
லரிய தாண்டவ மாடிய நஞ்சிவ
னருளு திக்குமென் றுரணத் துட்பொருள். (௩௯)

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௭ - க்குத் திருவிருத்தம் - ௪௦௨.

## எட்டாவது

# முன் அத்தியாயங்களிற் சொன்ன சாரங்களை யெடுத்துரைக்கும் அத்தியாயம்.

விரிவதாய் முன்னஞ் சொன்ன வேதவி றருத்த மெல்லா
மரியரே சூக்க மாக வறைகுவா மிந்த வோத்தி
னுரைதரு மிவ்வர்த் தத்தை யுறுதியாய்க் கேட்ட றிந்தோன்
பரமமா முத்திப் பேற்றைப் பற்றுவ னிங்குத் தானே. (௧)

உரியநன் முமுட்சு வாலே யுணர்ந்திடத் தக்க தான
பிரிவிலாப் பிரம ரூபம் பேதமில் பிரம வித்தை
சிரவண மனன மாதி செவ்விய சாத னங்கள்
புரையிலாப் பயனி தெல்லாம் புகன்றவே தாந்த வர்த்தம்.()

ஓதிய விவைகட் குள்ளே யுணர்ந்திடத் தக்க தான
வேதமில் பிரமந் தன்னை யியம்புவா முன்னங் கேண்மின்
போதவா னந்த வுண்மைப் பூரணச் சிவனே யென்றும்
பேதமில் பரம மான பிரமமென் றறிய வேண்டும். (௩)

நிருமலப் பரசி வன்ற னிஷ்கள சகள ரூப
மிருமையிற் சகளங் கேண்மி னிலங்கிய சாம்ப மூர்த்தி
யுருவமாய்ச் சொருபா னந்த முயர்ந்ததாற் றுண்ட வத்திற்
பிரியமார் வடிவந் தானே பேசிய சகள ரூபம். (௪)

பரசிவற் குரிய தாகப் பகர்ந்தவிச் சாம்ப மூர்த்திக்
கரியரே சிவன்ம கேச னம்பிகா பதிந டேசன்

சருவமங் களன றதி சங்கரன் சம்பு சாந்த
னரன்மகா தேவ றதி யனந்தரா மங்க ளுண்டால். (ரு)

விரிவுற விளம்பி யென்னே விவிதமாய் வேதாந் தந்திற்
பரசிவற் குரிய காகப் பகர்ந்தநா மங்க ளெல்லா
முறைதரு சாம்ப மூர்த்திக் குள்ளதா மிந்த மூர்த்தி
பரசிவன் சகள மாகப் பற்றிய ரூப மாகும். (சு)

நிருமல நிருவி கார நித்திய போதா னந்த
சருவபூ ரணவ கண்ட சாந்தசற் சொரூப மாக
விரிவதாய் வேதாந் தத்தில் விளம்பிய ரூபந் தானே
நிருமலப் பரசி வன்ற னிஷ்கள ரூப மாகும். (எ)

பரவர வரிவி ரிஞ்சர் பரமதத் துவமே யான
பரசிவ னமிச மாவர் பகர்ந்தமும் மூர்த்தி கட்கு
மரியய னிருவ ருக்கு மறவுமே யரனே மேலா
மரியசத் துவவு பாதி யடைந்தவ னரனே யன்றோ. (அ)

ஒருமையாம் பரசி வற்கே யுபாதியின் புணர்வி னாலே
பரவிடும் பிரத்திய கான்மப் படிவமூந் தோற்று மந்தப்
பிரிவிலாச் சிவமே யாகும் பிரத்திய கான்மா வுக்குச்
சொருபவஞ் ஞானந் தானே சுழல்வுறு பவத்தி னேது. (கூ)

சருவதா விவ்வஞ் ஞானஞ் சத்திய விலட்ச ணந்தான்
கருதுமிவ் வஞ்ஞா னத்தின் காரியஞ சத்துப் போல
மருவலாற் றோற்று கால மாத்திரத் திதுசத் தாகு
மரியதாம் பிரமா ணத்தா லாய்ந்திடி லசத்தே யாகும். (க0)

ஏதெனிற் பிரமத் தின்க ணீதுகற் பிதமே யன்றோ
வேதுகற் பிதம னைத்து மொளிரதிட் டான மன்றிப்
பேதமாய்ச் சித்தி யாது பிறங்கிய வுண்மை நோக்கி
லாதலான் ஞானத் தாலே யழிந்திடு மிவ்வஞ் ஞானம். (௧௧)

தத்துவ ஞான மொன்றாற் றகவிலா விவ்வஞ் ஞானஞ்
சித்தமா யழியு மன்றிச் செய்தகன் மங்க ளாலே
சுத்தமா யழியா தென்றுஞ் சுத்திகா ரசித மாதி
தொத்திய மயல்கண் மத்தாற் றொலைந்தது கண்ட துண்டே

ஆதலாற் றன்னான் மாவுக் கபின்னமாம் பிரமந் தன்னைப்
பேதமில் லாது சாரப் பிறங்கிய பிரம ஞான
நீதியா மேது வன்றி நிலையிலாக் கன்ம மன்றோ
லோதிய ஞானோற் பத்திக் குபாயமு முரைப்பக் கேண்மின்.

தத்துவ மசியே யாதி தருமகா வாக்கி யந்தா
ணித்தமாம் பரசீ வைக்கிய நிகழ்த்திய பிரம ஞானஞ்
சுத்தமா யுதிப்ப தற்குச் சுதந்தர வுபாய மாகு
மித்துண்ட யந்த ரங்க வேதுவை யினிநீர் கேண்மின். (௧௪)

பரசிவ னருளி னாலும் பரகுருப் பார்வை யாலுஞ்
சருவதா வருமை யான சத்திநி பாதத் தாலு
மருவுமா வாக்கி யத்தான் மாசிலா வதிகா ரிக்கே
பிரமசீ வைக்கிய ஞானம் பிரிவுற வுதிக்கு மன்றே. (௧௫)

உரியரே ஞான விச்சை யுதிப்பதற் கேது கேண்மின்
புரையிலா யாகந் தானம் பொருந்திய தவசி யற்றல்

சுருதிமற் றதனி னங்கஞ் சுருதியி னுறுபு ராண
மிருதிபா ரதமி வற்றை மெய்ம்மையா யோதி வைத்தல். ()

உரைதரு சுருதி யாதி யோதுதல் வேதார்த் தத்தில்
விரவிடு முண்மைப் புத்தி வேதபா கியம தத்துஞ்
சருவமாம் லௌகி கத்துஞ் சந்தத முபேட்சை செய்த
லரியரே யிவைமீ ளுத்து மறிவினிச் சையிலே யேது. (கஎ)

அரியரே யாக தான மாதியாற் சித்த சுத்தி
மருவினோர் பிரம ஞான மாசறப் பெறுவ தற்கிங்
குரவிய சாந்தி தாந்தி யுபரதி யாதி யான
சருவதர் மங்க ளுந்தான் சார்ந்தவங் கங்க ளாகும். (கஅ)

ஞானவங் கங்க ளுக்கு ணனியுமே லான வங்க
மானவை யுரைப்பக் கேண்மி னமலமாஞ் சிவலிங் கத்தி
னூனமி லன்பி னோடே யுணர்வுருப் பரசி வன்றன்
மேனியைப் பூசை செய்தன் மிகுந்தஞா னங்க மாகும். ()

பரசிவத் தலங்க ளேக்கல் பரசிவப் பிரதிட்டை செய்தல்
பரசிவ னிடத்திற் பத்தி பரசிவ பத்தர் பூசை
கருதிய கண்டங் கர்ணங் கரமுத லவய வத்தி
னுரவிய வன்பி னோடே யுருத்திராக் கந்த ரித்தல். (உ0)

விரிவுறு லலாட மாதி விவிதமா மவய வத்து
நிருமலப் பூதி கொண்டே நிகழுமே பூசி மற்றும்
பரவுமவ் வவய வத்திற் பகர்திரி புண்ட ரத்தை
மருவுபஞ் சாக்க ராதி மந்திரத் தாற்ற ரித்தல். (உக)

வேதமே தாந்த மோர்ந்து விமலமாங் கருணை கூர்ந்த
கோதிலாக் குருப ரற்குக் குறைவிலாச் சேவை செய்த
நீதில்பஞ் சாக்க ராதி திவ்விய மந்தி ரத்தை
நீதியா வன்பி ஞேடே நித்தமுஞ் செபமே செய்தல். (உஉ)

பெருமையே மிகுந்த காசி பிறங்கிய சிதம்ப ரந்தான்
திருமிகு திருக்கா ளத்தி திருவிடை மருதூ ராதிப்
பரசிவச் சேத்தி ரத்திற் பத்தியாய் வாசஞ் செய்த
லுரைதரு மிவைய னைத்து முயர்ந்தஞா னங்க மாகும். ()

பிரிவுறு தந்தி ரத்தாற் பேசிய தர்மத் துக்கு
மிருதியாற் சொன்ன தர்ம மெத்தவு மேல தாகுஞ்
சுருதியாற் சொன்ன தர்மஞ் சொல்லிய வதற்கு மேலாம்
பரவிய வதற்கு மேலாய்ப் பாரினி லொன்று மில்லை. (உச)

எதெனிற் பரோட்ச மாக விசைந்ததர் மாதி மீது
யாதிகா ரணமாய் நின்ற வமலசிற் சிவத்தின் மீது
மேதமில் வேதந் தானே யென்றுமே மான மாகும்
வேதமே யனுச ரித்து மிருதியு மான மாகும். (உரு)

ஆதலால் வேதஞ் சொன்ன தகிலமு மேன்மை யேயாம்
வேதமா மானத் தாலே விளம்பிய தெவையு மென்று
நீதியா யுண்மை யென்னு நிச்சயப் புந்தி தானே
யேதமில் லாத தர்ம மெவைக்குமே மூல மாகும். (உசா)

நீதியாய் வேதத் தாலே நிஷித்தமாஞ் செய்கை யெல்லாந்
தீதெனை வுணர்ந்த வற்றைத் திரமுற விடுதெ ருமே

யோதிய மூலந் தன்னை யொழிவற நிலைநி றுத்தக்
கோதிலா வேறு வாகுங் குறைவிலா வேதி யோரே. (உஎ)

சுருதியின் முடிவே யாகச் சொல்லிய பொருளைக் கேண்மின்
வரைவிலா நாம ரூப வடிவமாய்க் காண்ப தெல்லாஞ்
சருவபூ ரணமா யொன்றாய்ச் சச்சிதா னந்த மான
பரசிவ சொரூப மென்றே பரவுமா மறையி னர்த்தம். (உஅ)

சருவமுஞ் சிவமே யென்னுஞ் சலனமில் லாத ஞானஞ்
சருவஞா னத்தி னுக்குஞ் சாலவு மேல தாகு
மொருமையா மிஞ்ஞா னத்துக் குத்தம மான தேனு
மரியரே சமான மேனு மன்னிய மொன்று மில்லை. (உகூ)

ஆதலான் முமூட்சு வானோ ரசத்திய நாம ரூபப்
பேதமாஞ் சகம னைத்தும் பேதமொன் றும்பெ றாத
போதவா னந்த வுண்மைப் பூரண சொரூப மாமா
நீதிலாச் சிவமே யென்று திடமுற வறிய வேண்டும். (௩௰)

உத்தம முனிவ ரேயிங் குரைத்திடத் தக்க தெல்லா [தே
மெத்தவுஞ் சிரத்தை யோடே மெய்ம்மையா யுமக்கு ரைத்
னித்தினின் மேலா யின்ன மியம்பிடத் தக்க தான [றேன்.
வத்துவை யொன்றுங் காணேன் வாய்மையாய்ச் செப்பு கின்

இந்தவா றறிந்தச் சூதமுனிதயசுத் தியையி சைந்த
வந்தமா முனிவர்க் கெல்லா மகிலமு மறைந்த பின்னர்
சந்ததஞ் சகல நாத சாம்பமூர்த் தியைநி னைந்தங்
கந்தமி லன்பி னாலே யவன்பர வசமே யானான். (௩௨)

பரவச ஞான சூதன் பரசிவன் பத்தி யாலே
சருவபூ ரணமா யொன்றாய்ச் சச்சிதா னந்த.மான
பிரமமாம் பரசி வத்தைப் பிரிவறத் தானே யாகப்
புரையற வனுப வித்தான் பூரண சுகமுஞ் சார்ந்தான். (௩௩)

அன்னதன் சொருபா னந்த வனுபவ நின்று மீண்டு
பின்னரம் முனிவர் தமமைப் பிறங்கிய கருணை கூர்ந்த
வன்னவ னருளா னோக்கி யகிலமாஞ் சனங்க ளுக்கு [ன்.
மன்னிய விதத்தை வேண்டி மற்றுமிவ் வசனஞ் சொல்வா

வேறு.

அரியமறை யாகமமென் றிவ்வி ரண்டு மத்துவித மறை
வதிலோர் பேத மில்லை, பிரிவுறவே யிவைகடமாற் பேசப்
பட்ட பின்னமதாஞ் சிலவகையி னியமங் கேண்மின், சுருதி
நெறி யதிகாரி யானோ ரெல்லாஞ் சுருதிகொடே பிரமத்தை
யுணர வேண்டு, மரியமறை யதிகாரி யாகா மாந்த ரா்கமத்தா
லஃதினையிங் கறிய வேண்டும். (௩௫)

குருபரனு யகிலபதி யாகி மற்றுங் குறைவறவே யனை
த்தையுமிங் கறிந்த வீசன், கருதுமறை நெறிதவிர்ந்த மானி
டர்க்கே காமிகமே முதலான வாக மத்தைப், பரவினனவ்
வாகமத்தில் வைதி காக்குப் பற்றுவதா யொன்றுமிலை யெத
னு லென்னில், விரிவுறவே மறைதானே வைதி கர்க்கு வேண்
டியதஞ் செய் கை யெலாம் விதிக்கு தன்றோ. (௩௬)

அருமறையும் வைதிகர்க்கே யான வன்ன வாச்சிரம
தருமமெலா மறையு மீதாப், பரசிவனு மாகமிகள் பற்றத்

தக்க பலவிதவன் ஞச்சிரம தன்மந் தன்னை, புரைதருவ ஞக மந்தி லவற்றி லொன்று மோதியவை திகரென்று மொன்ற வொண்ணு, விரவியவிப் பரிசெனவே யரிவி ரிஞ்சர் விளம்பி யவா கமங்களினுட் பரிசுங் காண்க. (௩௭)

வேதநெறி தவிர்ந்தோர்க்கே யரிவி ரிஞ்சர் விரிவுறவன் ஞச்சிரம தருமே மியாவும், பேதமுறுந் தங்களுடை யாக மத் திற் பேசுவரவ் வாகமத்திற் பேசப் பட்ட, தேதையுமே வை திகர்க ளெய்த வொண்ணு தெவையினும்வை திகமார்க்க முயர்ந்த தன்றே, சாதகமா மறையோது மார்க்கத் துக்குச் சமமான மார்க்கமிலை சத்தி யந்தான். (௩௮)

அருமறையி லரனுதி யமரர் பூசை யறைவதுபோ லாக மந்து மரனே யாதி, திரிவிதமாந தேவருடைப் பூசை தன் னைத திரமாக வறைவதனு லிந்தப் பூசை, சுருதிநெறி தவிர்ந் தோரே செய்வ தல்லாற் சுருதிநெறி தவிராதோர் செய்ய வொண்ணு, தருமறையா லமைமதா யறையப் பட்ட வர்ச்ச னையே வைதிகர்க ளியற்ற வேண்டும். (௩௯)

வேதநெறி தவிர்ந்தோர்க்கே யாக மத்தில் விவிதமாஞ் சின்னங்கள் விதிக்க லாகு,மோதியசின் னங்கடமி லொன்றை யேனு முத்தமராம் வைதிகர்க டரிக்க வொண்ணு,வேதமதில் விபூதியினுல் விமல மாக விதித்ததிரி புண்டரமே தரிக்க வேண்டும், பேதமுறு மாகமிகள் தரிக்கத் தக்க பிரிவுறுசின் னங்களையும் பிரித்துச்சொல்வாம. (௪௦)

ஓதியசை வாகமத்திற் றீட்சை யுற்றே ரொளிரும் விபூ தியினுலே லலாட மாதி, பேதமதாந் தானமதிற் பத்தி யோ

டே பிறங்குதிரி புண்டரத்தை யாகமத்தி, லோதியமந் திரத்தாலே யென்று நன்று மொழிவறவே தரித்திடுக வரியே யாதி,பேதமதாய்ப் பேசியவா கமத்திற் றீட்சை பெற்றவராற் றரிப்பதுவாஞ் சின்னங் கேண்மின். (௪௧)

அரியறையு மாகமத்திற் றீட்சை தன்னை யடைந்தவர்களூர்த்துவமாம் புண்டரத்தைத், திருமணிறு லல்லதரி சந்தனத்தாற் றிரிசூலம் போலலது சதுர மாகப், பிரியமுட னெற்றியிடைத் தரிக்க வேண்டும் பின்னயனுற் பேசியதா மாகமத்திற், பரவியதீட் சையையுற்றோர் நெற்றி யின்கண் பற்றுவதாஞ் சின்னத்தைப் பகரக் கேண்மின். (௪௨)

பிரமனறை யாகமத்திற் றீட்சை பெற்றோர் பிறங்கிய நற் பூதியினு லலது மண்ணு, னிருமலமா மரிகந்த மதனு லேனு நெற்றியிடை வட்டமதாம் புண்ட ரத்தை, மருவியவவ் வாகமத்திற் சொல்லப் பட்ட மந்திரத்தா லன்புடனே தரிக்க வேண்டும், பரவியபுத் தாகமத்திற் றீட்சை பெற்றோர் பற்றுவதாஞ் சின்னமினிப் பகரக் கேண்மின். (௪௩)

அன்னவர்த நெற்றியிடை யரிகர் தத்தா லரசிலைபோற் புண்டரத்தைத் தரிக்க வேண்டும், பின்னுமவர் திருமணினு லேனு முள்ளப் பிரியமுடன் புண்டரத்தைத் தரிக்க வேண்டும், பன்னுமரு காகமத்திற் றீட்சை பெற்றோர் பாலமதிற் றிருநீறு லலது மண்ணு, லுன்னியநற் கந்தத்தா லேனு மென்று மூர்த்துவமுப் புண்டரத்தைத் தரிக்க வேண்டும், (௪௪)

சகலமதா மாகமத்துத் தீட்சை சார்ந்தோர் சந்ததமு மந்தவந்த மந்திரத்தாற்,றிகழ்வுறுநற் பூதிகொடேகுறுக்கே யா

கத் திரிவிதமாம் புண்டரத்தைத் தரித்துக் கொள்ளல், மிகவு மகா மஙகவுயா·யற்றுங் கேண்மின் மேவியசை வாகமத்திற் றீட்சை யுற்றோர்,பகர்திரிபுண் டரமொன்றே தரிப்ப தல்லாற் பற்றுவதாய் மற்றொன்று மவற்கிங் கில்லை. (சரு)

ஓதியமை திகமார்க்க முற்று மெல்லா மொளிரும்விபூ திபினாலே வேதஞ் சொன்ன, நீதியதாய் நெற்றியிடைக் குறுக்கே யாக நிகரிறிரி புண்டரத்தைத் தரிக்க வேண்டு, மீதினை விட் டன்னியமா யிங்குச் சொன்ன வெவ்விதமாம் புண்டர முந் தரிக்க வொண்ணு, போதமற மயங்கியுமே யனிய மான புண்டரமும் பற்றுவரேற் பதித ராவர். (சசு)

அரியமையு மாகமத்தின் றீட்ச தர்க்கே யங்கமா கிறசங்கு கதைசக் ராதிப், பிரிவையுறு முத்திரையாற் சின்னஞ் செய்தல் பேசியவவ் வாகமத்தால் விதிக்க லாகும், பெருமையுறும வைதிகாக்கவ் விதியே யில்லை பேசியவா கமிகட்கு மந்தச் சின்னம், பரமமதாம் புருடார்த்தந் தன்னைச் சேரப் பரம்பரைகா ரணமாகு நேரே யாகா. (சஎ)

நிருமலமா யருமறையில் விதிக்கப் பட்ட நிகழ்திரிபுண் டரமல்லா லனிய மாகப், பரவியபுண் டரமெல்லாந் தீட்ச தர்க்கே பரம்பரைக்கா ரணமாகும் பயனைச் சேரப், பெருமையுறும் வைதிகர்கள் பிரமித் தேனும் பேசியமுத் திரைகொண்டு சின்னந் தன்னைப், புரிவுடலின் மருவுவரேற் பதித ரேயாம் புண்டரத்து மிப்பரிசு புகன்றே மன்றே. (சஅ)

ஆதலினல் வேதநெறி யடைந்தோ ரெல்லா மாகமத்தின் முத்திரையாற் சொன்ன சின்ன, மேதையுமே தரிக்கவொணு

மயங்கி யேனு மிதரமதாம் புண்டரமுந் தரிக்க வொண்ணு,
பேதமுறு மந்தந்த வாக மத்திற் பேசியவா தாபிதமாஞ்
சிவனே யாதி, தீதறுதே வதையெல்லாம் வைதி கர்க்குந்
தினமுமிகச் சேவிக்கத் தக்க தேயாம். (௪௯)

ஏதெனிற்றே வதையெல்லா மெவ்வி டத்து மென்று
மிகச் சுத்தமதா யிருக்கு மன்றே, வாதலினு லாகமிக டாபிக்
கின்ற வமரரினர்ச் சனைதானே யாதி சேவை, கோதறுவை
திகராலுஞ் செய்யற் பாற்றே கூறியவா கமிகட்கவ் வாக
மத்தி, லோதியவா பூசனையே விசேட மாகு முத்தமவை திக
ருக்கப் பூசை யொண்ணு. (௫௦)

உரைதருமா கமதீட்சை யுற்றோ ரெல்லா முத்தமராம்
வைதிகரை யொருகா லத்தும், பரிசனமே செயவொண்ணு
தவ்வா றன்னோர் பரவியவா கமிகளையும் பரிசிக் கொண்ணு,
தரணிதனின் மதிமானய் விளங்கா நின்ற தரணிபனு மிருவ
ரையுங் கலவா வண்ண, நிரைநிரையாத் தாபித்திங் கன்ன
மாதி நிகிலர்க்கு மளித்தவரை யாள வேண்டும். (௫௧)

வேதமுறும் வைதிகரை விசேட மாக விமலமதிப் பூபா
லன் காக்க வேண்டு, மீதினுமெய்ஞ் ஞானியரை விசேட
மாக வென்றுமவ னன்புடனே காக்க வேண்டுஞ், சூதறுமா
தேவனுடன் சமமாந் தெய்வஞ் சுருதியினு மிருதியினு மில்லா
தேபோற், கோதறுவை திகரோடுஞ் சமான மானோர் கூறி
யவா கமிகளெனுங் குழுவி லில்லை. (௫௨)

காசியுடன் சமமான தலமிங் கில்லை கங்கையுடன் சம
மான நதியு மில்லை, மாற்றுபஞ் சாக்கரமோ டொத்த தான

மந்திரமு மிறையுமில்லை மற்று மன்ன, போசனமோ டொத்ததுவாம் புசிப்பு மிந்தப் புவியிலில்லை யிவ்வாறிப் புவியின்கண்ணே, பேசியவை நிகரோடுஞ் சமான மானோர் பிரிவுறுமா கமிகளெனுங் குழுவி லில்லை. (ருங)

ஆசறுமா முனிவர்களே தேவதேவ னாகியவம் மாதேவனகில ரானு, மாசறுபூ சனைசெய்யப் படுவதேபோன் மகிமையுறும் வைதிகரு மெல்லோ ராளும், பூசனைபண் ணுவதற்கேயுரிய ராவர் பொலிந்திடுமா தித்தனிலாப் புவியே போலப், பேசியவை நிகரில்லா வுலக மியாவும் பிறங்கியிடா விருளையுறு மைய மில்லை. (ருச)

அரியபிரா ணாதியில்லா விந்த வாக்கை யணுகவொணாச் சவமாகி விணா கின்ற, பரிசெனவை நிகரில்லாச் சக்ரும் வீணே பகர்வதிலோ ரையமிலை யந்தோ விந்தப், பெருமைமிகும் வைதிகரின் மகிமை தன்னைப் பேசுவதற் கெனக்குமிகு சகதி யில்லை, விரிமறையே யவர்மகிமை விளம்பு மன்றி மிருதிபுரா ணாதிகளும் விளம்பு மென்றும். (ருரு)

அருமறையிற் சொல்லியதி லடையத் தக்க தாகமிகட் குண்டதுபோ லாக மத்திற், பரவியதில் வைதிகராற் பற்றத் தக்க பான்மையிலை யதனாலு மறையே மேலென், றரியமகா முனிவர்களுக் கறைந்து சூத னன்புடனே யாசிரிய வியாசன் றன்னைக், கருதியுடன் பரவசனா யவனை நோக்கிக் காசினியிற் றண்டெனவே விரைவில் வீழ்ந்தான். (ருசு)

தரணிதனிற் றண்டெனவே வீழ்ந்த சூதன் றனசையா வண்ணமதா யிருக்குங் காலை, யருளுருவாம் வியாசமுனி

சிடன் றியான மாகியவங் குசமதனால் விழுங்கப் பட்டுக், கரு ணையினா லங்குடனே தோன்றி நின்றான் கண்டவனை முனிவ ரெலாந் தழுத ழுத்தே, பரவியதந் தொனியுடனே பாங்க தாகப் பணிந்துமிகக் களிப்புடனே போற்று கின்றார். (௫௭)

விரிவுறவே போற்றியபின் விமல ஞான வியாசமுனி தன்னைமல ராதி யாலுட், பிரியமுடன் வெவ்குவிதமாய்ப் பூசிக் கின்றார் பினகருணா சாகரனாய்ப் பகவ னாகிச, சருவமுமிங் குணர்ந்தவனாய்ச் சாந்த ஞான சற்குருவாம் வியாசமுனி யங்கிருந்த, வரியமகா முனிவர்களை யினிதாய் நோக்கி யகிலர்க்கு மிதமாயிவ் வசனஞ் சொல்வான். (௫௮)

அரியமகா முனிவர்களே யுங்கட் கெல்லா மனவநத மங்களமே யுறப விக்கு, மொருபொழுது மணுவேனு மமங்களந் தா னுற்பவியா துங்களற மென்னே யென்னே, பிரமர்களே யுங்களுடைப் பாக்கி யத்தைப் பேசுவதற் கென்னாலுஞ் சக்தி யிலலை, நிருமலமா யென்னாலின் றுரைக்கும் வாக்கை நீர் மனதி னொருமையொடு நின்று கேண்மின். (௫௯)

பத்தருடை யிடரெல்லாந் துரத்து வோனாய்ப் பரவுசரா சரங்களுக்குப் பதியு மாகி, மெத்தவுமே கருணையுறும் பரசி வன்றன் மெய்யருளாற் புராணமெலாஞ் செய்கின் றேன் யான், சுத்தமதா மென்னருளாற் பின்ன ரிந்தச் சூதமுனி பரசிவற்குப் பிரிய மானா, னத்தனுடை யாஞ்ஞையினா லந் தச் சூத னகிலபுரா ணமுமுங்கட் கறைகின் றானல். (௬௰)

பின்னுமவ னுங்கட்குங் குருவா கின்றான் பிரமர்களே நீர்முன்னஞ் செய்யா நின்ற, துன்னியபுண் ணியபுஞ்ச பரியா

கத்தாற் றுகளறவே யீசனுடை யாஞ்ஞை யாலே, சன்னிதி சேர் சூதமுனி யிடத்தி னின்றுஞ் சகலமறை யர்த்தமு நீர் கேட்டோ ரானீர், தன்னியர்நீர் சந்ததமுஞ் சாம்ப மூர்த்தி தன்னினரு ளெவர்க்கென்றெப் பயனை நல்கா. (௯௧)

பரமசிவ னாஞ்ஞையினால் யான்வே தார்த்தம் பரமமதாம் வேதாந்த வர்த்தம் யாவும், புரையறவே யறிவதினு மவற்றை யெல்லாம் புகல்வதினு மிகுசத்தி யடைந்தேன் மற்றுஞ், சுருதிமுடி யர்த்தமெலாஞ் சொல்லப் பட்ட சூத்திரமுஞ் செய்கின்றே னன்றி யும்யான், பரமர்களே யுங்கட்கு ஞானந் தன்னிற் பரமகுரு வாகின்றேன் சிவாஞ்ஞை யாலே. (௯௨)

ஆதலினான் முனிவர்களே வேத சித்த மாகியவவ் வகண்டசிவ ஞானந் தன்னிற், பேதமிலாப் பத்தியுட னெந்தப் போதும் பிரிவிலதா நிட்டையைநீ ரடைமி னென்றே, யேத மற வோதியுடன் சூதன் றன்னை யெழுப்பிமிகக் கருணையுட னாலிங் கித்து, நீதியதா யருளியபி னீசன் றன்னை நினைந்து பணிந் தக்கணமே மறைந்தான் வியாசன். (௯௩)

பின்னருமச் சூதமுனி சீட ராகப் பிறங்குமகா முனிவர் தமை யருளா னோக்கி, மன்னியமா கெம்பீர வசனத் தாலே மங்களமே யென்றுமுமக் குண்டா மென்றான், பன்னியவென் கீதையினைப் படிப்போர்க் கெல்லாம் பரமசிவ னருளுண்டா ஞான முண்டா, முன்னியவா ரோக்கியநற் செல்வம் வாணு ளுதித்திடமெற் றாசிரியத் தன்மை யுண்டாம். (௯௪)

சொன்னதிலோ ரையமிலை சச்சித் தின்பச் சொருபம தாய்ப் பூரணமாய் வேதாந் தத்தாற், பின்னமறத் தன்வடிவா

யறியத் தக்க பெருமையுள வத்துவித வத்து வாகிக், தன்னு
டைய பத்தரிட ரியாவுந் தீர்க்கத் தகுபிரம வித்தையுமா மெ
ல்லோ ருக்கு, மன்னையுமா முமையுடைய வருளி னாலு மவ்
விதமாம் பரமசிவ னருளி னாலும். (௧௫)

அரியமகா முனிவர்களே விநாய கன்ற னருளாலுங் குக
னுடைய வருளி னாலுங், குருபரனும் வியாசமுனி யருளா
லும்யான் குறைவறவே வேதமெலா மோர்ந்து நன்றாய், வர
மான வதன்பொருளை யெல்லா மெஞ்ஞ வைபவமென் றோதி
யவிக் கண்டந் தன்னி, லுரைசெய்தேன் முத்திநிலை யிக்கண்
டத்தே யுள்ளதிதி லையமிலை யுண்மை சொன்னேன். (௧௬)

உத்தமமாங் கண்டமிதை மிகுந்த வன்போ டோதியித
னுண்மையினை யுணர்ந்தோ ரிங்கே, சத்தியபூ ரணபோத சுக
மாய் நின்ற சம்புவினை யடைவரிது சத்தி யந்தான், மெத்தவு
மென் சங்கிதையி தனைத்தி னுக்கு மேலாகு மிடரை யெலாந்
தீர்ப்ப தற்குஞ், சுத்தசிவ னருளடைய நிமித்த மாகுஞ் ஸூக்
குமமா முத்திநிலை தருவ தாகும். (௧௭)

என்னுடைய சங்கிதைதான் மறையின் சார மெடுத்த
தனா னிருமிதமா மாத லாலே, பின்னமிலாப் பரமசிவ ஞா
னந் தன்னைப் பேணினவ ராதரிக்கத் தக்க தாகு, மன்னியர்க
ளாதரிக்கத் தகாத தாகு மறவுமிது சுபத்தினையே யளிப்ப
தாகு, மின்னதுடன் விரோதமதாம் வசன மெல்லா மெவ்
விடத்தும் வீணேயாம் பயனை நல்கா, சொன்னவிது சுருதி
வடி வாத லாலே சுருதியெனப் பிரமாண மாகு மென்றும்.()

என்னுடையிச் சங்கிதையை மிகுந்த வன்பா லிதயமு டன் படிப்போரிப் புஸ்தகத்தைத், துன்னியிடார் பிரமமெ னும் பரசி வத்தைத் துன்னுவர்க ணிச்சயமே யாத லாலே, தன்னுடைய பவபந்தந் தவிர்க்க வேண்டித் தடையறவே முமூட்சுவெலாஞ் சுருதி யைப்போற், சொன்னவிதை மன துடைய வொருமை யோடே சோர்வறவே யனவரதம் படிக்க வேண்டும். (சுக)

வேறு.

புராணசங் கிதையிதை மிகுந்தவன்பி னுலெவர்
புகழ்ந்துகேட்டு ளந்தனி லறிந்துநிற்ப ரன்னவர்
தராதலத்தின் மற்றுமிப் பவத்தினைப் பொருந்திடார்
தயங்ககண்ட சங்கரன் சொரூபமென்று மேவுவர்
பரானுபூதி யன்னவர்க் ககண்டமாய் விளங்கிடும்
பரிந்தவர் முகத்தினிற் சகத்தினம்மை யாமுமை
சுராசுரர்தி போற்றிய சுபாவமான சங்கரன்
சொரூபமோடு கூடியே சிறந்துநிர்த்த மாடுவள். (எ0)

இகழ்ந்திடாத பத்தியா லெவர்க்குமெய்த லாவதா
யிலங்குதத் துவம்பதத் திலக்கியார்த்த மாகவே
நிகழ்ந்திடுஞ் சொரூபமாய்ச் சுயம்பிரகாச ரூபமாய்
நினைக்கொணுப் பவத்துனி யனைத்துநீக்கி வைப்பதா
யகந்தையற்ற போதமா யனந்தவின்ப ரூபமா
யகண்டசற் சொரூபமா யனாதியான தெய்வமாய்
வகுந்திடாம லெங்குமே நிறைந்துநின்ற வஸ்துவாய்
வயங்ககண்ட சம்புவை வணங்கியென்று மேத்துவாம். ()

விரிந்தவேத மானமே விரும்பிநம் பிறோர்தமின்
விகாசமான புந்தியில் விளங்ககண்ட வித்தையாய்
நிரந்தர நிகழ்ந்தவா செறிந்தறுன்ப மியாவையு
நிலாதுநீக்கி வைப்பளா யகண்டமான வின்பமும்
பரிந்தவற் களிப்பளாய்ப் பரத்திலுக்க பின்னையாய்ப்
பரித்தவேச வாதியர் பணிந்ததான தெய்வமாப்
பிரிந்திடாம லெங்குமே நிறைந்துநின்ற வஸ்துவாய்ப்
பிறங்குகின்ற வம்மையை வணங்கியென்று மேத்துவாம்

## வேறு.

வேதமாம் பதுமக் கூட்டம் விளக்கிய பானு வாகிச்
சாதுவாய்ப் பரமே சர்க்குச் சமானனுய்க் கருணை கூர்ந்து
பீதிசெய் சோக மோகப் பிணியறுத் திதஞ்செய் விக்கும்
வாதரா யணனை யென்றும் வணங்கியாம் போற்றல்செய்வாம்

அருமறை மறையி னந்த மாகிய செல்வ முற்றுப்
பிரிவிலாப் பிரம ஞானம் பெற்றதாற் றுகளற் றோராய்
விரிபவ விடவே கத்தை விலக்கிடும் பெரியோர் தம்மைத்
திரிவித கரணத் தாலுந் தினமுமே போற்றல் செய்வாம்.

இப்படி முனிவர்க் கெல்லா மிங்குதன் கீதை தன்னைச்
செப்பமாய்ச் சூதன் சொல்லிச் செவ்விய வன்பி னோடே
யொப்பிலா வகண்டா னந்த வுருவமாம் பரசி வத்திற்
கப்பிலா நிட்டை சார்ந்து கரையிலாச் சுகமடைந்தான்.

இவ்விதஞ் சூத னாலே யிசைத்தவிக் கீதை தன்னைச்
செவ்விய முனிவ ரெல்லாஞ் சிரத்தையாய்க் கேட்ட பின்ன
ரவ்வித வகண்ட போதா னந்தமாம் பரசி வத்திற்
கவ்விய மனதி னாலே கலந்துபூ ரணமாய் நின்றார். (௭௬)

இப்படிக் கிருந்த வாக்கா லீனமில் வியாச னாலே
செப்பிய கீதை தன்னைச் செவ்விய நடன ராசன்
றப்பிலாக் கருணை யாலே தமிழ்மொழிக் கவிதை யாகச் [டும்.
செப்பினேன் மேலோ ரித்தைச் செவ்விதென் றொப்ப வேண்

இன்னவா றமைக்கப் பட்ட விந்நூற் கவிதை மாலை
தன்னிணைச் சபையின் கண்ணே தாண்டவ மாடி யெல்லோ
ரின்னலுந் தீர்த்து வைக்கு மியல்புறுஞ் சாம்ப மூர்த்தி
மன்னிய சரணப் போதின் மகிழ்வுட னர்ப்பிக் கின்றேன். ()

வேறு.

அகில நாயகி யம்பிகை பாகனாய்த்
திகழ் கானந்த தாண்டவ மாடுவோ
னகில பூரண மாகிய கண்டமாய்
நிகழு மூர்த்தியை நித்தமும் போற்றுவாம். (௭௯)

**எட்டாவதத்தியாயம் முற்றிற்று.**

**ஆக அத்தியாயம் ௮-க்குப் பாயிரம் உள்பட திருவிருத்தம் ௪௮௧.**